Downloaded from https:// www.studiestoday.com




சுற்றுப்புற அறிவியல்


# சுற்றுப்புற அறிவியல்

## வகுப்பு - III

FREE

# WE - OUR ENVIRONMENT

## CLASS - III (TAMIL MEDIUM)



Published by
The Government of Telangana
Hyderabad

தெலங்கானா மாநில அரசின் இலவச வெளியீடு

தெலங்கானா மாநில அரசின் இலவச வெளியீடு

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## Do as shown in the picture



Listen to your teacher - Think and say



Group Work



Individual work



Conceptual Understanding



Draw and colour the pictures



Information Skills - Project work



Appreciation



Ask a Question



Do show and say



Can I do it?

## THE EXPECTED CHANGE COMES FROM ME

1. *I always keep a cloth bag with me. I say no to polythene covers.*
2. *I don't waste water. I store water in containers and use when needed.*
3. *I save energy. I control pollution.*
4. *I grow plants and use things made of wood.*
5. *I separate the dry and wet waste products( garbage).*
6. *I collect old things and give them to the needy.*
7. *I reduce unnecessary travel. I use public transport as far as possible.*
8. *I use solar energy all the day and reduce the usage of electricity during the night.*
9. *I use on-line services and E-seva and reduce traffic on roads, fuel consumption and air pollution.*
10. *I serve my self with required quantity of food only. I don't waste food.*



***Save trees - Grow trees***

***Save water - Conserve water***

***Wash your hands before and after meals***

***Keep the surroundings clean and tidy - Protect your health***

Government of Telangana

**Department of Women Development & Child Welfare - Childline Foundation**

When abused in or out of school.

To save the children from dangers and problems.

CHILD LINE 1098 NIGHT & DAY

24 HOUR NATIONAL HELPLINE

When the children are denied school and compelled to work.

When the family members or relatives misbehave.

**1098 (Ten...Nine...Eight) dial to free service facility.**

SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# நாம் – நமது சுற்றுப்புறம்

## மூன்றாம் வகுப்பு

## சுற்றுப்புற அறிவியல்


**பதிப்பாசிரியர்கள்**

**பேரா.வி.சுதாகர்**
ஆங்கிலம், வெளிநாட்டு மொழிகள் பல்கலைக்கழகம் (EFLU), ஐதராபாத்

**டாக்டர். என்.உபேந்தர்ரெட்டி**
பேராசிரியர், C&T Dept. SCERT, ஐதராபாத்

**திரு. பி.ஆர். ஜகதீஸ்வர்கௌட்**
முதல்வர், DIET, அதிலாபாத்

**நிபுணர்கள்**

**திரு.சுவர்ண வினாயக்**
ஒருங்கிணைப்பாளர், SCERT, ஐதராபாத்

**திரு.அலெக்ஸ் எம்.ஜியார்ஜ்**
ஏகலவ்யா, மத்திய பிரதேஷ்

**திரு. கமல் மகேந்திரூ**
வித்யாபவன் சங்கம், உதய்பூர்

**பாடப்புத்தக வளர்ச்சி வெளியீட்டுக் குழு**

**திருமதி.பி.ஷேசுகுமாரி**
இயக்குனர்
SCERT
ஐதராபாத்

**டாக்டர்.என்.உபேந்தர்ரெட்டி**
பேராசிரியர், C&T Dept.
SCERT
ஐதராபாத்

**திரு.பி.சுதாகர்**
இயக்குனர், அரசு பாடநூல்
அச்சகம், ஐதராபாத்


**தெலங்கானா மாநில அரசு வெளியீடு, ஐதராபாத்**


தெலங்கானா அரசின் இலவச வெளியீடு 2019-20

SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

© Government of Telangana, Hyderabad

*New Edition*

*New Impressions 2019*

**All rights reserved**

No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means without the prior permission in writing of the publisher, nor be otherwise circulated in any form of binding or cover other than that in which it is published and without a similar condition including this condition being imposed on the subsequent purchaser.

The copy right holder of this book is the Director of School Education, Hyderabad, Telangana.

This Book has been printed on 80 G.S.M. SS Maplitho
Title Page 220 G.S.M. White Art Card

தெலங்கானா மாநில அரசின் இலவச வெளியீடு 2019-20

*Printed in India*
at the Telangana Govt. Text Book Press,
Mint Compound, Hyderabad,
Telangana.

— o —

SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## முன்னுரை

மனிதர்கள் அனைவரும் சமூக பிராணிகள், அவர்கள் வாழும் சமுதாயத்தில் நடைமுறையில் உள்ள கட்டுப்பாடுகள், சட்டங்கள், வாழ்க்கை முறை ஆகியவற்றுக்கு இணங்கி மனிதன் வாழ்கின்றான். இதற்கு ஏற்றார்போல், பிள்ளைகளுக்கு சுற்றுப்புறத்தைபற்றிய அறிவு அவசியம். ஆரம்பப் பள்ளி அளவில் சுற்றுப்புறத்தைப் பற்றி கற்றல் உயர் ஆரம்பப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளி அளவில் அறிவியல், சமூக அறிவியல் எனும் பாடங்களில் அதிக விவரத்தை கற்கலாம். மாணவர்கள், இலவச கட்டாயக் கல்விச் சட்டம் 2009-ன் படி ஆரம்பப்பள்ளி அளவில் சுற்றுப்புறத்தைப் பற்றி அதிக அறிவைப் பெறவேண்டும்.

2005 NCF சட்டத்தின் படியும், 2009 RTE சட்டத்தின்படியும் ஆந்திர மாநிலம் 2011 APSCF எனும் சட்டத்தை உருவாக்கியது. இதன்படி வகுப்புவாரியாக அடைய வேண்டிய குறைந்தபட்ச கற்றல் நிலைகளை உருவாக்கினர். இந்நிலையை அடைய NCERT பல வழிமுறைகளை கையாண்டது. மாநில அளவிலும் மாநில கல்வித்திட்டத்தின் அடிப்படையில் பாடநூல் திட்டம் இயற்றப்பட்டு மூன்றாம் வகுப்பு பாட நூலை **நாம் - நமது சுற்றுப்புறம்** எனும் பெயரில் உருவாக்கியுள்ளனர்.

இப்பாடநூலில் குடும்பம், நண்பர்களிடையேயான உறவு, வேலை, விளையாட்டு விலங்குகள், தாவரங்கள், உணவு, நீர், வீடுகள் பயணம், நமது கிராமம், உற்பத்திசெய்யப்படும் பொருட்கள் போன்ற 16 பாடங்கள் உள்ளன. இப்பாடங்கள் பல செயல்களுடன் வண்ணப் படங்கள் நிறைந்தும் உள்ளன. மாணவர்களின் அறிவுதிறன், விருப்பம், நாட்டம், வினா எழுப்புதல் போன்றத் திறன்கள் ஒவ்வொரு பாடத்தின் இறுதியில் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறே இதைச் செய்யுங்கள் எனும் தலைப்பின் கீழ் பல செயல்களும், முக்கியச் சொற்கள் எனும் தலைப்பின் கீழ் கற்றவைகளை மறு ஆய்வு செய்வதும் என்னால் செய்ய முடியுமா? எனும் தலைப்பின் கீழ் சுய மதிப்பீடு செய்யவும் இந்நூலில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாணவர்களின் சுய கற்றலுக்கு இந்நூல் உதவுகிறது. இதற்காக சகமாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரிடமிருந்து கற்றுக்கொள்ள உதவுகிறது. அவ்வாறே வகுப்புச் செயல்கள், குழுச்செயல்கள் மற்றும் தனியாள் செயல்கள் அனைத்துப் பாடங்களிலும் வழங்கப்பட்டுள்ளன.

இதற்காக ஆசிரியர்கள் மிகவும் பொருத்தமான கற்பித்தல் கற்றல் கருவிகளை வகுப்பறையில் பயன்படுத்த வேண்டும். பாடநூலை ஒரு கருவியாக பயன்படுத்தி, மாணவர்களின் அனுபவம் வாயிலாக பாடத்தை கற்பிக்க வேண்டும். மாணவர்களின் உள்ளார்ந்த திறனை வெளிக்கொணர ஆசிரியர்கள் பல வழிகளை கையாளவேண்டும்.

இப்பாடநூலை தயாரிக்க தங்களை அர்பணித்துக்கொண்ட எழுத்தாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், தொகுப்பாளர்கள், நிர்வாகிகள், அச்சிட்டோர், ஓவியர் மற்றும் மொழியாக்கம் செய்தோர் ஆகியோருக்கு எங்களது பாராட்டுகள். மொழி தொடர்பாக உதவியோர் மற்றும் பாடநூல் அச்சக தெலுங்கு அகாடமி கழகத்திற்கும் பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கின்றோம். இந்நூலில் ஏதேனும் குறையிருப்பின், இயக்குனர் SCERT ஐதராபாத் எனும் முகவரிக்கு தெரியப்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தேதி : 27-03-2012

இடம் : ஐதராபாத்

திருமதி. பி.சேசுகுமாரி,
இயக்குனர்
SCERT ஐதராபாத்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்தரநாத் தாகூர்

## உறுதிமொழி

'இந்தியா எனது தாய் நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறப்புகள்.

என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்பிற்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன். எல்லோரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன். விலங்குகளிடத்தில் கருணை காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலே நான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.'



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# பாடநூல் பதிப்பகக் குழு

திரு. சுவர்ண வினாயக்,
ஒருங்கிணைப்பாளர்,
C&T Dept. SCERT, ஐதராபாத்

திரு. மேடா. அரிபிரசாத், SA.,
ZPHS, ஆக்குமல்லா,
கர்நூல் மாவட்டம்

திரு. கே. லக்சுமி நாராயணா
விரிவுரையாளர், DIET அங்கலூர்,
கிருஷ்ணா மாவட்டம்

திரு. பி. ரதங்கபாணிரெட்டி,SA.,
ZPHS பொல்லம்பள்ளி,
மகபூப்நகர் மாவட்டம்

திரு. பி. ராமாகிருஷ்ணா S.A.,
GGHS நல்லகட்டு, ஐதராபாத்

திருமதி. வ. சுவர்ணலதா, S.A.,
ZPHS பாதபட்டிசம், மேற்கு கோதாவரி மாவட்டம்

என்.சி. ஜகன்னாத், SGT,
GHS, குல்சம்புரா, ஐதராபாத்

செல்வி. ஷாலினி,
வித்யாபவன் சொசைடி, உதய்பூர்

திரு. கே.வி. சத்தியநாராயணா, MRP
கரிடபள்ளி, நல்கொண்டா மாவட்டம்.

திரு. எ.மகேந்திர ரெட்டி,
LFLHM சோமனகுர்த்தி,
ரங்காரெட்டி மாவட்டம்.

திரு. ஷேக் பிரம்மாஜி ஷா, SGT
சின்னதாலபாளையம்,
கிழக்கு கோதாவரி மாவட்டம்

டாக்டர். ஆர்.சத்தீஷ்பாபு,
பர்மபிட்டதாண்ட நல்கொண்டாமாவட்டம்.

## ஒருங்கிணைப்புக்குழு

திருமதி. டி.விஜயலட்சுமி,
விரிவுரையாளர், SCERT ஐதராபாத்

திருமதி. பி.ரதங்கபாணிரெட்டி SA
ZPHS பொல்லம்பள்ளி, மகபூப்நகர் மாவட்டம்

## ஓவியர்கள்

திரு. கூரெல்ல ஸ்ரீனிவாசு, SA, ZPHS, போச்சம்பள்ளி, நல்கொண்டா மாவட்டம்.

திரு. பி.கிஷோர் குமார், SGT, UPS, அல்வாலா, நல்கொண்டா மாவட்டம்

திரு. சம்யத்அகமதுல்லா, ஓவிய ஆசிரியர், GHS, காஜிபேட்டை,வரங்கல் மாவட்டம்.

## தமிழாக்கம்

**ஒருங்கிணைப்பாளர்**

**திரு.கே.சிட்டிபாபு,** முதல்வர், DIET கார்வேட்நகர், சித்தூர் மாவட்டம், ஆ.பி.

**மேற்பார்வையாளர்**

**திரு. பி.எஸ்.தங்கமணி,** விரிவுரையாளர், DIET கார்வேட்நகர், சித்தூர் மாவட்டம், ஆ.பி.

**தொகுப்பாளர்**

**திரு. எம்.ஏ. தமிழ்ச்செல்வம்,** SA (உயிரியல்)ZPHS, புதுப்பேட்டை, நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம், ஆ.பி.

**மொழிபெயர்ப்பாளர்கள்**

**திரு. டி.ஜான் டல்லஸ்,** SA (சமூகம் அறிவியல்)ZPHS, புதுப்பேட்டை, நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம், ஆ.பி.

**திரு. இ.ஜி.சதாசிவம்,** SA (ஆங்கிலம்) ZPHS, ஏகாம்பரகுப்பம், நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம், ஆ.பி

**திரு. எஸ்.என்.ஆறுமுகம்,** SA (ஆங்கிலம்) ZPHS, புதுப்பேட்டை, நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம், ஆ.பி.

**திரு. கே.டி.முருகப்பன்,** SA (ஆங்கிலம்) ZPHS, ஏகாம்பரகுப்பம், நகரி மண்டலம், சித்தூர் மாவட்டம், ஆ.பி.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## ஆசிரியர்களுக்கு சில அறிவுரைகள்

* மாணவர்கள் தங்களைச் சுற்றியுள்ள சமூகத்தின் வழியாக பல அனுபவங்களை பெற்று, அதை பகுத்தாய்ந்து, புரிந்துகொள்கிறார்கள். ஆரம்பநிலையில் சுற்றுப்புறத்தில் அதிகம் கற்பதால், இப்பாடநூலுக்கு **நாம் நமது சுற்றுப்புறம்** எனப் பெயரிடப்பட்டுள்ளது.
* NCERT ன் பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு, ஆந்திர அரசு நமது மாணவர்களுக்கு ஏற்றாற்போல் பலச் செயல்களுடன் இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.
* நமது குடும்பங்களிடையே தொடர்புகள், வேலை, விளையாட்டு, விலங்குகள், தாவரங்கள, உணவு, உடை, இருப்பிடம், பயணம், நீர், உற்பத்தி பொருட்கள் மற்றும் கிராமம் ஆகியவற்றைப் பற்றி பாடநூல் தயாரிக்கப்பட்டுள்ளது.
* இப்பாடநூலில் 16 பாடங்களை உள்ளடக்கிய நான்கு பிரிவுகள் தரப்பட்டுள்ளன.
* அனைத்து மாணவர்களும் பாடக்கருத்தைப் புரிந்துக் கொள்ள வண்ணப் படங்கள் வழங்கப்பட்டுள்ளன.
* மாணவர்களின் அனுபவங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வினாக்களைக் கேட்க வேண்டும்.
* மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூகத்திடம் இருந்து பல விவரங்களைச் சேகரிக்க வேண்டும்.
* மாணவர்களுக்கு அதிகமாக தனியாள், குழு மற்றும் வகுப்பு மொத்த செயல்களை, வழங்க வேண்டும்.
* மாணவர்களை கற்றலில் அதிகம் ஈடுபடுத்த வேண்டும்.
* பாடத்தின் இறுதியில் இதை செய்யுங்கள் எனும் தலைப்பின் கீழ் வரும் செயல்களை, மாணவர்களைக் கொண்டு செய்ய வைக்கவேண்டும்.
* பாடத்தின் இறுதியில் கலைச்சொற்கள், நாம் கற்றவை எனும் தலைப்புகளின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள பாடப்பொருளை மாணவர்களைக் கொண்டு செய்ய வைக்க வேண்டும்.
* பாடத்தின் இறுதியில் என்னால் முடியுமா? எனும் தலைப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள வினாக்களில் 80% வகுப்பு மாணவர்கள் பதிலளிக்கும் பொருட்டு ஆசிரியரின் கற்பித்தல் இருக்க வேண்டும்.
* நிரந்தர புரிந்துகொள்ளும் மதிப்பீடு எனும் கருத்தை மனதில் வைத்து ஆசிரியர் மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டும்.
* ஜுலை, செப்டம்பர், டிசம்பர், மற்றும் பிப்ரவரி மாதங்களில் நடைபெறும் வளர்நிலை மதிப்பீடு தேர்வின் முடிவுகளையும் மற்றும் தொகுநிலை மதிப்பீடு முடிவுகளையும் உமது பதிவேடுகளில் குறிக்க வேண்டும்.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## மூன்றாம் வகுப்பு சுற்றுப்புற அறிவியல் - பாடநூல் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

| | |
|---|---|
| 1. குடும்பம், குடும்ப உறுப்பினர்கள். | குடும்ப உறுப்பினர்கள், முகபாவம், குடும்பசரித்திரம், குடும்ப வகைகள். |
| 2. வேலை, விளையாட்டு | குடும்ப உறுப்பினர்கள் செய்யும் வேலைகள், அவர்களின் தேவைகள், குழந்தை தொழிலாளர்கள். |
| | பல வகை விளையாட்டுகள், அவசியம், பொருட்களுடன் விளையாடுதல், தனியாள் மற்றும் குழு விளையாட்டுகள். |
| 3. விலங்குகள் | நம்மை சுற்றியுள்ள விலங்குகள், பறவைகள், அவைகளின் இருப்பிடங்கள், செல்லப்பிராணிகள், அவைகளின் பிரச்சனைகள். |
| 4. தாவரங்கள் | தாவரங்களின் வகைகள், வீட்டில் வளர்க்கப்படும் செடிகள், அவைகளின் பயன்கள், நீர்தாவரங்கள், பாலைவனத் தாவரங்கள். |
| | இலைகளின் வகைகள் (பரப்பு, நுனி, வண்ணம், தடிமன்) இலை உதிர்தல், உணவாய் இலைகள், அலங்கார இலைகள், இலைகளால் மாதிரிகள் தயாரித்தல், உரக்குழி. |
| 5. உணவு | நாம் உணவை ஏன் உட்கொள்ள வேண்டும்? உணவு எங்கிருந்து கிடைக்கிறது? பழம், காய், பயிர் வகைகள். |
| | பலப் பகுதிகளின் உணவுப்பழக்கம், விலங்குகள் மற்றும் பறவைகளின் உணவு, அனைவரும் சேர்ந்து உணவு உண்பதால் ஏற்படும் பயன்கள். |
| 6. நமது கிராமம், வரைபடத்திறன் | கிராமம், கிராமத்திலுள்ள அமைப்பு, பயன்கள், கிராமமக்கள் செய்யும் பணிகள். |
| | வரைபடத்தைப் பற்றி புரிந்து கொள்ளுதல், அதிலுள்ள குறியீடுகள், வரைபடம் வரையும் முறை, இதன் மூலம் பாடப்பொருளை அறிதல், கிராமம், பள்ளி வரைபடம் வரைதல் |
| 7. வீடுகள் | வீட்டின் அவசியம், வீட்டின் வகைகள், தற்காலிக வீடுகள், பல பகுதிகளிலுள்ள வீடுகள், அடுக்குமாடிகள் கூரைகள். |
| | வீட்டு அலங்காரம், சுத்தமான வீடு, செடிகளை வளர்த்தல், நமது பணியை நாமே செய்தல், குப்பைத்தொட்டியின் பயன்கள். |
| 8. நாம் தயாரிக்கும் பொருட்கள், உடைகள் | பலவகை மண்பொம்மைகள், மண் பாண்டங்கள், பயன்கள், சிலைகள், குடங்கள், இவற்றை குறைவாக பயன்படுத்துல். |
| | உடைகளின் அவசியம், வகைகள், சிறுவர்கள் உடை, பெரியோர்கள் உடை, பெண்கள் உடைகள், காலநிலைக்கு ஏற்ற உடைகள், தைத்தவை, ஆயத்த ஆடைகள், தொழிலுக்கேற்ற சீருடைகள். |
| 9. நீர் | நீரின் பயன்கள், அவசியம், நீர் மட்டம், மனிதர்களுக்கு, பிராணிகளுக்கு நீரின் அவசியம், தாவரங்களுக்கு நீரின் அவசியம், சுத்தமான நீர், நீர் பற்றாக்குறை, நீரைச் சிக்கனமாக பயன்படுத்துதல். |
| 10. பயணம் | வாகனங்களின் பயன்கள், பயண தூரம், தேவைக்கேற்ப பயணித்தல், வாகனங்களின் வகைகள், விபத்துகள். |



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## இப்பாடப்புத்தகம் மூலமாக மாணவர்கள் அடைய வேண்டிய குறைந்தபட்ச கற்றல் நிலைகள்

மூன்றாம் வகுப்பு சுற்றுப்புற அறிவியல் பாடநூல் மூலம் அடைய வேண்டிய கல்வித்திட்டங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன. இவற்றை இந்த கல்வியாண்டிலேயே சாதிக்க வேண்டும்.

(1) திறன்கள் : பரிசீலித்தல், ஒற்றுமைகளையும் வேறுபாடுகளையும் கூறுதல், வகைப்படுத்துதல், பட்டியலிடுதல், பகுத்தாய்தல், காரணம் கூறல் போன்ற திறன்களை மாணவர்கள் அடைய வேண்டும்.

(2) பாடப்பொருளைப் புரிந்துக்கொள்ளுதல் : இப்பாட நூலிலுள்ள 16 பாடங்கள் மூலமாக மாணவர்கள் பாடக்கருத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். இப்பாடக் கருத்துகளை தங்கள் வாழ்க்கையில் பயன்படுத்த வேண்டும்.

(3) படம் வரைதல், வண்ணம் தீட்டுல் : மாணவர்கள் படம் வரைந்து, அதன் கருத்தை விவரிக்க வேண்டும் ஆகையால் இந்நூலிலுள்ள அனைத்து படங்களையும் வரைந்து வண்ணம் தீட்ட வேண்டும்.

(4) செயல்களைச் செய்தல், கூறுதல் : மாணவர்கள் சிறிய பரிசோதனைகளைச் செய்து அதைப்பற்றி விவரிக்க வேண்டும். தன்னுடைய பரிசோதனைப் பற்றி வரிசைகிரமமாக விவரிக்க வேண்டும்.

(5) தகவல் திறன்கள், செயல்திட்டங்கள் : மாணவர்கள் பிறரைப் கேட்பது மூலமாகவும், கவனிப்பதன் மூலமாகவும் தகவல்களைச் சேகரிக்க வேண்டும். இவ்வாறு சேகரித்த தகவல்களைப் பட்டியலிட வேண்டும். பட்டியலை விவரிக்க வேண்டும். ஆசிரியர் வழங்கிய செயல்திட்டப்பணிகளைச் சிறப்பாக செய்ய வேண்டும்.

(6) வினவுதல் : மாணவர்கள் தாங்கள் பார்த்த கேட்ட நிகழ்ச்சிகளைப் பற்றி வினா எழுப்பும் திறனை பெற வேண்டும்.

(7) பாராட்டுதல் : மாணவர்கள் சிறந்த திறன்களைப் பெற வேண்டும். மாணவர்கள் தன்னைச் சுற்றியுள்ள விலங்குகள், பறவைகள், தாவரங்கள் மற்றும் சமூகத்திலுள்ள சிறப்பு அம்சங்களை கண்காணிக்க வேண்டும். நற்கருத்துகளைப் பாராட்ட வேண்டும். கருணை, உதவி, ஒன்று சேர்ந்து பணியாற்றுதல் போன்ற நற்குணங்களை மாணவர்களிடத்தில் வளர்க்க வேண்டும். சக மாணவர்களைப் பாராட்ட வேண்டும். சமூகத்தில் நடக்கும் தீமைகளைப் பற்றி, வினா எழுப்ப வேண்டும். வித்தியாசமான உணவு பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறைகள், சிறந்த கலாச்சார முறைகள் ஆகியவற்றை பாராட்ட வேண்டும். தனிமனித ஒழுக்கம், தூய்மை ஆகியவற்றை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். குடும்பத்திலுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு உதவ வேண்டும்.

(8) வரைப்படத் திறன்கள் : மூன்றாம் வகுப்பு மாணவர்கள் தங்களுடைய வகுப்பறை, பள்ளி, வீதி, கிராமம், முதலியவற்றின் படங்களை வரைய வேண்டும். வரைப்படத்திலுள்ள குறியீடுகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



# பொருளடக்கம்






| | | | |
|---|---|---|---|
| 1. | குடும்பம் | ஜுன் | 1 |
| 2. | யார் என்ன வேலை செய்கின்றனர்? | ஜுன் | 12 |
| 3. | ஆடுவோம்! | ஜுலை | 20 |
| 4. | விலங்குகள் அவற்றின் இருப்பிடங்கள் | ஜுலை | 27 |
| 5. | நம் சுற்றுப்புறத்திலுள்ள செடிகள் | ஆகஸ்ட் | 39 |
| 6. | இலைகளுடன் நட்புறவு | செப்டம்பர் | 48 |
| 7. | நாம் எவற்றை உண்ணுகிறோம் | செப்டம்பர் | 59 |
| 8. | உணவு பழக்க வழக்கங்கள் | செப்டம்பர் | 70 |
| 9. | நமது கிராமம் | அக்டோபர் | 78 |
| 10. | வீடுகளின் வகைகள் | நவம்பர் | 86 |
| 11. | சுத்தமான வீடே, அழகான வீடு | நவம்பர் | 94 |
| 12. | மண்ணால் ஆன மாணிக்கங்கள் | டிசம்பர் | 101 |
| 13. | வண்ண வண்ண ஆடைகள் | டிசம்பர் | 108 |
| 14. | எவை எவை எங்கெங்கு? | ஜனவரி | 115 |
| 15. | நீரும் நமது தேவைகளும் | பிப்ரவரி | 123 |
| 16. | ஊருக்குச் செல்வோம் | பிப்ரவரி | 134 |
| | திருப்புதல் | மார்ச் | |








SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# 1. குடும்பம்






ரமா : தாத்தா, இந்த புகைப்படத்தில் உயரமாக இருப்பவர் யார்?

தாத்தா : உங்கள் தந்தை சீனிவாசன்.

ரமா : பாவாடை, தாவணி அணிந்துள்ளவர் யார்?

தாத்தா : அடையாளம் தெரியவில்லையா? அது உங்கள் அத்தை.

ரமா : அப்பாவின் பக்கம் நிற்பவர் வெங்கட் சித்தப்பாவா?

தாத்தா : ஆமாம்! அவர் தான்

ரமா : சித்தப்பா இப்பொழுது எங்கு இருக்கிறார்?

தாத்தா : ஐதராபாத்தில் இருக்கிறார்.

ரமா : ஏன் ஐதராபாத்தில் இருக்கிறார், தாத்தா?

தாத்தா : அரசாங்க வேலை பார்க்கிறார்.



உங்கள் குடும்பத்தில் யார் யார் உள்ளனர்?

..............................

..............................

..............................

..............................

..............................

..............................

..............................

..............................





Downloaded from https:// www.studiestoday.com


Downloaded from https:// www.studiestoday.com


பொதுவாக குடும்பத்தில் அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, குழந்தைகள் இருப்பர். வேலை, படிப்பு அல்லது பிற காரணங்களுக்காக குடும்ப உறுப்பினர்களில் சிலர் வேறு ஊரில் இருப்பர்.

எல்லா குடும்பங்களும் ஒரே விதமாக இருப்பதில்லை. சில குடும்பங்களில் அம்மா, அப்பா, குழந்தைகள் மட்டுமே இருப்பர். மேலும் சில குடும்பங்களில் அவர்களுடன் தாத்தா, பாட்டி போன்ற முதியவர்களும் இருப்பர்.

சரி, ரமாவின் குடும்பத்தில் யார் யார் இருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்வோமா? ரமாவின் தாத்தா பெயர் ரங்கநாதன். பாட்டியின் பெயர் ராணி. ரமாவின் தாத்தாவிற்கு இரண்டு மகன்களும், ஒரு மகளும் உள்ளனர். கீழ்காணும் படத்தைப் பாருங்கள்.










**யாருக்கு யார் என்ன உறவு என்று எழுதுங்கள்.**

1. ராணிக்கு சீனிவாசன் .................. 2. ரங்கநாதனுக்கு அனுராதா ....................
3. சுனிலுக்கு சீனிவாசன் .................... 4. ரங்கநாதனுக்கு அகிலா ....................
5. லதாவிற்கு சுஜாதா ................... 6. ரமாவிற்கு சீனிவாசன் ....................
7. ரமாவிற்கு லதா .................... 8. அகிலாவிற்கு பிரசாத் ....................
9. ரங்கநாதனுக்கு சுனில் .................... 10. சுஜாதாவிற்கு ரமணா ....................





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ரமாவின் அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி ஆகியோரின் பெயர்களைத் தெரிந்துக் கொண்டீர்களல்லவா! சரி, நீங்களும் உங்களுடைய தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா, ஆகியோரின் பெயர்களையும், மற்ற குடும்ப உறுப்பினர்களின் பெயர்களையும் எழுதுங்கள்.





| தாத்தாவின் பெயர் | பாட்டியின் பெயர் |
|---|---|
| | |

| அப்பா பெயர் | அம்மா பெயர் |
|---|---|
| | |

| சித்தப்பா/ பெரியப்பாவின் பெயர் | சித்தி/ பெரியம்மாவின் பெயர் |
|---|---|
| | |

| அத்தையின் பெயர் | மாமாவின் பெயர் |
|---|---|
| | |

குழந்தைகளின் பெயர்

குழந்தைகளின் பெயர்

குழந்தைகளின் பெயர்

மேலே காட்டியபடி குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பெரியவர்களின் விவரங்களுடன் எழுதப்பட்ட அட்டவணையை, குடும்ப மரம் என்பர்.

**உருவ ஒற்றுமை :**



ரமாவின் சித்திக்கு ஒரு மகள் பிறந்தாள். அவளை பார்க்க உறவினர்கள் வந்தனர். வந்தவர்கள் குழந்தை, அப்படியே அவளுடைய அம்மாவைப் போல் இருப்பதாகக் கூறினர்.

குழந்தை அவளுடைய தாய் போல இருக்கிறது என்று எவ்வாறு கூற முடிந்தது?





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பொதுவாக குடும்பத்திலுள்ள குழந்தைகளுக்கு அவர்களுடைய அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, அத்தை, தாய்மாமா சித்தப்பா, சித்தி ஆகியோரின் உருவ ஒற்றுமைகள் இருக்கும். சிலருக்கு யாருடைய உருவ ஒற்றுமையும் இல்லாமல் போகலாம். அல்லது மூதாதையர்களுடன் ஒத்து இருக்கலாம்.



**சரியான விடைக்கு ✔ குறியிடு**

1. உனக்கு தெரியாதவர்கள் யாராவது இனிப்பு தரும்போது நீ வாங்குவாயா? ஆம்/இல்லை
2. உனக்கு தெரியாதவர்கள் அழைத்தால் நீ செல்வாயா? ஆம்/இல்லை
3. உன்னை யாரேனும் தொந்தரவு செய்தால் நீ பெரியவர்களிடம் கூறுவாயா? ஆம்/இல்லை

குடும்பத்தில் உள்ள வெவ்வேறு நபர்கள் வெவ்வேறு குணங்களை பெற்றிருப்பர். சில சமயங்களில் நாம் கோபமாக இருக்கும்போது மற்றவர்களை நம் வார்த்தைகளால் காயப்படுத்துகிறோம். ஆனால் இது பிரச்சனையை தீர்க்கும் வழி அல்ல. இதற்கு மாறாக நாம் ஏன் கோபமாக உள்ளோம் என்று அவர்களிடம் கூறுவது சிறந்தது. இவ்வாறான விரும்பத்தாகாத நடத்தைக்கு காரணமான சூழ்நிலையை நாம் விளக்க வேண்டும். யாரையும் துன்புறுத்தாத வகையில் ஆலோசனைகளை கூறவேண்டும்.



உன் குடும்ப உறுப்பினர்களில் உனக்கு பிடித்த குணத்தை எழுது.

| உறவு | குணம் |
|---|---|
| அம்மா | |
| அப்பா | |
| | |
| | |

**குடும்ப வரலாறு**

ரமாவை பள்ளியில் சேர்க்க அவளுடைய தந்தை அழைத்து வந்தார். ரமாவின் பெயரை அவளுடைய தந்தையார், சிந்தலை ரமா என்று எழுதினார். “சிந்தலை” என்னும் வீட்டுப்பெயர் எப்படி வந்தது? என்று தலைமை ஆசிரியர் கேட்டார். எங்களுடைய முன்னோர்கள் சிந்தலை எனும் ஊரிலிருந்து வந்தனர். ஆகையால் அந்தப் பெயர் வந்ததாக ரமாவின் தந்தையார் கூறினார்.

SCERT TELANGANA





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ரமாவின் தாத்தா, கிராமத்திலுள்ள அனைவருக்கும் எந்த துன்பம் வரும்போதும் உதவி செய்து காப்பாற்றுகிறார். எனவே அனைவரும் அவரை மதிக்கிறார்கள். அவரால் அவருடைய குடும்பத்திற்கே நல்ல பெயர் வந்தது. ரமாவின் தந்தை துணி வியாபாரம் செய்கிறார். அவருக்கும், சுற்றுப்புறத்திலுள்ள கிராமங்களில் நல்ல தரமான துணிகளை விற்பவர், என்னும் நற்பெயர் உள்ளது. ரமாவின் வீட்டுப் பெயரையும், அவர்களுடைய தாத்தா, தந்தையார் ஆகியோருக்குத் தொடர்பான குடும்ப வரலாற்றையும் அறிந்துக் கொண்டீர்கள் அல்லவா!

உங்கள் குடும்ப வரலாற்றை, பெரியவர்களைக் கேட்டு தெரிந்துகொள்ளுங்கள். உங்கள் வகுப்பிலுள்ள மாணவர்களின் வீட்டுப் பெயர் எப்படி வந்தது என்று தெரிந்துகொண்டு விவாதியுங்கள்.



## விதவிதமான குடும்பங்கள்






SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



என் பெயர் சிவா. எங்களுடைய வீட்டில் அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்தி, அக்காள்களும், அண்ணனும் உள்ளனர்.

- படங்களைப் பார்த்தீர்களல்லவா! யாருடைய வீட்டில் அதிகமான உறுப்பினர் உள்ளனர்? யாருடைய வீட்டில் குறைவான உறுப்பினர் உள்ளனர்?
- யார் யாருடைய வீட்டில் முதியவர்கள் உள்ளனர்?
- டேவிட், ஹசீனா, சிவா இவர்களில், யாருடைய குடும்பம் எந்த வகையைச் (சிறிய, பெரிய, அளவான குடும்பம்) சேர்ந்தது.
- சரி, உங்களுடைய குடும்பம் எந்த வகையான குடும்பம்?
- உங்கள் குடும்ப உறுப்பினர்களை; யார் எவ்வாறு அழைக்கிறார்கள் என்று கூறுங்கள், எழுதுங்கள்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



**விளையாடுவோமா?**

**மைதானச் செயல்பாடு**



* நீங்கள் அனைவரும் வட்டமாக நிற்க வேண்டும்.
* ஒருவருடைய கண்களை கைக்குட்டையால் கட்டி மூட வேண்டும்.
* கண்கள் மூடப்பட்ட மாணவர் மற்றவர்களைப் பிடித்து, அவர்களின் பெயர்களைக் கூற வேண்டும்.
* சரியாகக் கூறிவிட்டால் அவர்களின் கட்டை அவிழ்த்துவிட வேண்டும்.
* இதேபோல் ஒருவர் பின் ஒருவராக தொடர்ந்து கண்களுக்கு கட்டுகட்டி, விளையாட்டை தொடரவேண்டும்.
* கண்களுக்கு கட்டு கட்டியபின் அனைவரையும் அடையாளம் காணமுடிந்ததா? இல்லையா? ஏன்?

**உங்களுக்குத் தெரியுமா?**



பார்வையற்றோர் படிப்பதற்காக பிரெய்லி எழுத்து முறையை பயன்படுத்துகின்றனர். இந்த எழுத்து முறையை கண்டறிந்தவர் லூயிஸ் பிரெய்லி ஆவார்.



**வயதானவர்கள், மற்றும் மாற்றுத்திறன் குழந்தைகள்**

கண்கள் இருந்தும் கூட கண்களை கட்டிவிட்டதால் அனைவரையும் அடையாளம் காண முடியாமல் போனதல்லவா! சரி, உண்மையிலேயே பார்வை இல்லாதவர்கள் தங்கள் பணிகளை செய்துகொள்ள எவ்வளவு துன்பப்படுவர் என்பதை எண்ணிப்பாருங்கள். அதேபோல் சிலருக்கு காதுகள் சரியாக கேட்பதில்லை. சிலர் சரியாக பேசமாட்டார்கள்.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

சிலருக்கு நடக்க முடியாது. சிலரால் பார்க்க முடியாது. இது போன்றவர்களுக்கு என்னென்ன இன்னல்கள் ஏற்படுகின்றன என்பதையும், அவர்களுக்கு நாம் எவ்விதத்தில் உதவ முடியும் என்பதையும் எண்ணிப் பாருங்கள், கூறுங்கள்.

ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 3ஆம் தேதி உலக ஊனமுற்றோர் தினமாக கொண்டாடுகிறோம்



* படத்தில் யார் யார் உள்ளனர்?
* இவர்கள் எந்தெந்த வேலைகளைச் செய்ய அல்லல்படுகின்றனர்?
* இவர்களுக்கு எவ்விதமான உதவியை நாம் செய்ய வேண்டும்?
* நீங்கள் இதுபோன்றவர்களுக்கு எப்பொழுதாவது உதவி செய்திருக்கிறீர்களா? எதுபோன்ற உதவி செய்தீர்கள்?

**உங்களுக்குத் தெரியுமா?**



ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் முதல் தேதியில் உலகம் முழுவதும் வயதானவர்கள் தினத்தைக் கொண்டாடுகின்றனர்.

பார்வையற்றோருக்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கும், ஊமைகளுக்கும், செவிடர்களுக்கும் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும். பேச இயலாதவர்கள் சைகைகள் மூலம் பேசிக் கொள்கிறார்கள். கேட்க இயலாதவர்கள் காதில் கேட்கும் கருவியைப் பொருத்திக் கொண்டும், கண்பார்வை குறைந்தவர்கள் கம்புகளுடனும், தொடு உணர்ச்சி மூலமாகவும் அறிந்துகொள்வர். அதேபோல் வயதானவர் களாலும் பல வேலைகளை சுயமாக செய்து கொள்ள முடிவதில்லை. அவர்களுடைய தேவையை அறிந்து தேவையான உதவியை வழங்க வேண்டும். பார்வையற்றவர்களுக்கு பிரெய்லி எழுத்து முறை உதவும். அதேபோல் சில குழந்தைகள், வயதானவர்கள், உடல் நலக்குறைவு அல்லது விபத்தினால் பாதிக்கப்பட்டோர். தம் வேலைகளை தாங்களே செய்து கொள்ள முடியாமல் இருக்கின்றனர். அதுபோன்றவர்களுக்கு நம்மால் இயன்ற அளவு உதவியைச் செய்ய வேண்டும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## முக்கிய சொற்கள்

| | | |
|---|---|---|
| 1. குடும்பம் | 2. குடும்ப உறுப்பினர்கள் | 3. உருவ ஒற்றுமைகள் |
| 4. குடும்ப மரம் | 5. பிரெய்லி எழுத்துமுறை | 6. குடும்ப வரலாறு |
| 7. வீட்டுப்பெயர் | 8. வயதானவர் தினவிழா | 9. வயதானவர்கள் |
| 10. முன்னோர்கள் | 11. உறவினர்கள் | 12. மாற்றுத்திறன் குழந்தைகள் |

## நாம் கற்றுக் கொண்டவை

* பொதுவாக குடும்பத்தில் தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா, குழந்தைகள் ஆகியோர் இருப்பர்.
* இவ்வாறு ஒரே குடும்பமாக சேர்ந்து வாழ்பவர்களை குடும்ப உறுப்பினர்கள் என்பர்.
* அம்மா,அப்பா,பாட்டி, தாத்தா, அவர்களின் முன்னோர்களைப் பற்றி தெரிவிப்பதே மரபு மரம் ஆகும்.
* குடும்பத்திலுள்ள குழந்தைகளுக்கு குடும்ப உறுப்பினர்களின், உறவினர்களின் உருவ ஒற்றுமை இருக்கும்.
* அனைவருடைய முகங்களும் ஒரேமாதிரியாக இருப்பதில்லை.
* ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு வரலாறு இருக்கும். இதை குடும்ப வரலாறு என்பர்.
* குடும்பத்திலுள்ளவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து குடும்பங்கள் பலவகைகளாக உள்ளன.
* வயதானவர்களுக்கும் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கும் நம்மால் இயன்ற அளவு தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும்.

## இவற்றைச் செய்யுங்கள்



**பாடத்தைப் புரிந்து கொள்ளுதல்.**

1. குடும்பம் என்றால் என்ன? உங்கள் குடும்பத்தில் யார் யார் உள்ளனர்?
2. சந்துரு அன்னவரத்தில் வசிக்கிறான். தற்போது மூன்றாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறான். அவனுடைய தாயாரான கமலம், வீட்டில் இருந்துக் கொண்டு வீட்டு வேலைகளை செய்து கொள்கிறாள். சந்துரு மற்றும் தம்பி ஆதித்யன் ஆகிய இருவரும் விடுமுறையில் அவர்களுடைய மாமா ராகவன் வீட்டிற்குச் சென்றனர். அங்கு அவர்களுடைய அத்தையான உஷா, தாத்தாவான கோபால், பாட்டியான தேவி ஆகியோர் உள்ளனர். சந்துரு அவனுடைய அண்ணியான ஹேமலதாவுடனும், தாய்மாமாவான ரவியுடனும் எத்தனையோ விளையாட்டுகளை விளையாடினான்.

| பெயர் | சந்துருவுக்கு உள்ள உறவு |
|---|---|
| ஆதித்யன் | தம்பி |
| கமலம் | .................. |
| தேவி | .................. |
| ராகவன் | ................. |
| உஷா | ................. |
| ரவி | ................. |







SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

3. உங்கள் வீட்டின் பெயரென்ன? அந்தப் பெயர் எவ்வாறு வந்தது

4. மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு நாம் செய்ய வேண்டிய உதவி என்ன?

அ) பார்வையற்றோருக்குச் செய்ய வேண்டிய உதவி :

ஆ) கேட்க முடியாதவர்களுக்குச் செய்ய வேண்டிய உதவி :

இ) பேச முடியாதவர்களுக்குச் செய்ய வேண்டிய உதவி :

ஈ) நடக்க முடியாதவர்களுக்குச் செய்ய வேண்டிய உதவி :

உ) வயதானவர்களுக்கு எங்ஙனம் உதவலாம்?



**தகவல் திறன்கள் – செயல் திட்டப்பணி :**

1. உங்கள் நண்பர்களின் வீடுகளில் யார் யார் இருக்கிறார்கள் என்று கேட்டறிந்து கீழே உள்ள அட்டவணையில் எழுதுங்கள்.

| நண்பனின் பெயர் | குடும்ப உறுப்பினர்கள் | குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. எ.கா : முரளி | அம்மா, அப்பா, தாத்தா,பாட்டி, அக்காள், தங்கை, முரளி | 7 |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |

மேலே உள்ள அட்டவணையைக் கொண்டு விடை கூறுங்கள்.

* யாருடைய வீட்டில் அதிகமானவர்கள் உள்ளனர்?
* யாருடைய வீட்டில் குறைவானவர்கள் உள்ளனர்?
* யார் யாருடைய வீடுகளில் முதியவர்கள் உள்ளனர்?

2. உங்கள் மரபு மரத்தில் உள்ள நபர்களின் புகைப்படங்களை சேகரித்து ஆல்பம் தயார் செய்யுங்கள். உங்கள் வகுப்பறையில் அதை காட்சிக்கு வைத்து ஒவ்வொருவரைப் பற்றியும் கூறுங்கள்.





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



**படங்களை வரையுங்கள், வண்ணம் தீட்டுங்கள்.**

1. வட்டமான, கோள முகம் உடைய இரண்டு நண்பர்களின் படங்களை வரைந்து, பெயர்களை எழுதுங்கள்.







**பாராட்டுதல்**

1. ஒரு நாள் நீ கண்களுக்கு துணியைக் கட்டிக்கொண்டால் நீ;ங்கள் எப்படி பள்ளிக்கு வருவீர்கள்? நண்பர்களுடன் எப்படி விளையாடுவீர்கள், கற்றுக்கொள்வீர்கள் என்பதை சுருக்கமாக எழுதுக.

2. உங்கள் குடும்ப வரலாறு, உங்கள் குடும்பத்தின் சிறப்பு என்ன? தெரிந்துகொண்டு கூறுங்கள்.



**வினவுதல்**

1. ரமா தாத்தாவிடம் சென்றாள். அவளது மரபு மரம் குறித்து அறிந்துகொள்ள நினைத்தாள், இதற்காக தாத்தாவிடம் பல கேள்விகள் கேட்டாள். ரமா, மரபு மரம் குறித்து என்ன கேள்விகள் கேட்டிருப்பாள்? தாத்தா என்ன விடைகளைக் கூறி இருப்பார்? வீட்டுப் பெயரை தெரிந்துகொள்ள வேண்டுமெனில் நீ எவ்விதமான கேள்விகளைக் கேட்பாய்?



**என்னால் செய்ய முடியுமா?**



| | | |
|---|---|---|
| 1. | குடும்பம் என்றால் என்ன என்று விளக்குவேன். | ஆம்/ இல்லை |
| 2. | குடும்ப உறுப்பினர்களிடையே உருவ ஒற்றுமைகளை கூறுவேன். | ஆம்/ இல்லை |
| 3. | குடும்ப மரபு மரத்தை வரைவேன். குடும்ப வரலாற்றைக் கூறுவேன். | ஆம்/ இல்லை |
| 4. | குடும்ப உறுப்பினர்களைப் பற்றிய தகவல்களை அட்டவணையில் எழுதுவேன். | ஆம்/ இல்லை |
| 5. | வயதானவர்கள் மற்றும் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு உதவி செய்வேன். | ஆம்/ இல்லை |
| 6. | குடும்ப வரலாற்றைப் பற்றியும் மரபு மரத்தைக் குறித்தும் கேள்விகளைக் கேட்பேன். | ஆம்/ இல்லை |





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# 2. யார் என்ன வேலை செய்கின்றனர்?



இது கமலாவின் வீடு, கமலாவின் வீட்டில் அவளுடைய தாய், தந்தை, தாத்தா, பாட்டி, தம்பி ஆகியோர் உள்ளனர். அவர்கள் என்ன செய்கின்றனர் என்பதை கவனியுங்கள்.



கமலாவின் தந்தை, வீட்டு வேலைகளில் தாய்க்கு உதவி செய்கிறார். அவர்களுடைய பெற்றோர் செய்யு-ம் வேலைகளில் கமலாவும், அவளது தம்பியும் உதவி செய்கின்றனர். கமலாவின் தாத்தாவும் பாட்டியும் கூட வீட்டு வேலைகளில் உதவி செய்கின்றனர். இவ்வாறு வீட்டு வேலைகளில் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்கின்றனர்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

குடும்பங்களில் பெரியவர்கள் வீட்டு வேலைகள் மட்டுமின்றி வெளிப்புற வேலைகளையும் செய்வர். வயல்களிலும், தொழிற்சாலைகளிலும், வீடு கட்டுவதிலும், சாலை அமைப்பதிலும், செயலகங்களிலும் பல்வேறு வகையான பணிகளைச் செய்வர். வீட்டிலுள்ள பெரியவர்கள் செய்யும் பல்வேறு பணிகளால் குடும்பத்திற்கு வருமானம் கிடைக்கிறது.



உங்கள் குடும்பத்திலுள்ளவர்கள் எந்தெந்த பணிகளைச் செய்கின்றனர் என்று கூறுங்கள். கீழே உள்ள அட்டவணையில் எழுதுங்கள்.

| குடும்ப உறுப்பினர்களின் பெயர்கள் | வீட்டில் செய்யும் பணியின் பெயர் | வருமானத்திற்காக வெளியே செய்யும் வேலைகள் |
|---|---|---|
| | | |



## ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொள்ளுதல்

குடும்பத்திலுள்ளவர்கள் பலவகையான பணிகளைச் செய்கின்றனர். குடும்பத்திலுள்ள பெரியவர்கள், ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான வேலைகளைச் செய்கின்றனர். சில வேலைகளை வீட்டிலுள்ள அனைவரும் சேர்ந்து செய்வர்.

**கீழே உள்ள படத்தைப் பாருங்கள். யார் யார் என்ன வேலை செய்கின்றனர் என்பதை கூறுங்கள்.**





* உங்கள் வீட்டிலும் இதே போன்று ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்கிறீர்களா?
* நீங்கள் எந்தெந்த வேலைகளை செய்கிறீர்கள்? யார் யாருக்கு உதவுகிறீர்கள்?
* உங்கள் வீட்டில் அனைவரும் சேர்ந்து செய்யும் வேலைகள் என்ன?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



**விவாதியுங்கள். விவரங்களை அட்டவணையில் எழுதுங்கள்.**

உங்கள் வகுப்பிலுள்ள ஆறு நண்பர்களிடம் கேளுங்கள். அவர்களுடைய அம்மா, அப்பா என்னென்ன வேலைகள் செய்கிறார்கள். வீட்டில் அனைவரும் சேர்ந்து செய்யும் வேலைகள் யாவை? கீழ்காணும் அட்டவணையில் எழுதுங்கள்.

| நண்பனின் பெயர் | அம்மா செய்யும் வேலை | அப்பா செய்யும் வேலை | வீட்டில் அனைவரும் சேர்ந்து செய்யும் வேலைகள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |

* பெரும்பாலான தாய்மார்கள் செய்யும் வேலைகள் யாவை?

.....................................................................................................

.....................................................................................................

* பெரும்பாலான தந்தையர்கள் செய்யும் வேலைகள் யாவை?

.....................................................................................................

.....................................................................................................

* குடும்பத்திலுள்ள அனைவரும் சேர்ந்து செய்யும் வேலைகள் யாவை?

.....................................................................................................

.....................................................................................................

குடும்பத்திலுள்ள நபர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் ஒத்துழைத்து வேலைகளை செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்வதால் ஒருவர் மீது ஒருவருக்கு அன்பு, பாசம் ஏற்படுகின்றது.



**தொழில்கள் :**

குடும்பத்தில் அம்மா, அப்பா, மேலும் அனைவரும் பலவிதமான வேலைகளை செய்வதால் நம் தேவைகள் நிறைவேறுகின்றன. நம் குடும்பத்தைப் போலவே ஊரிலுள்ள பிற குடும்பங்களிலும் பலவிதமான வேலைகளை செய்பவர்கள் உள்ளனர்.





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**அவர்களைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?**

கிராமத்தில் பல்வேறு வகையான வேலைகள் செய்பவர்களின் படங்கள் சில கீழே உள்ளன. அவர்களால் எவ்வகையான பயன் உள்ளது என்று கூறுங்கள்.



இவர் பெயர் சிங்கமுத்து. இவர் கூடைகளை பின்னுகிறார்.



இவர் பெயர் வெங்கடேஷ். இவர் செருப்பு தைக்கிறார்.



இவர் பெயர் குமரன். இவர் முடி வெட்டுகிறார்



இவர் பெயர் சங்கரன். தச்சு வேலை செய்கிறார்.

* உங்கள் கிராமத்திலும் இது போன்ற வேலைகளை செய்பவர்கள் உள்ளனரா?
* உங்கள் கிராமத்தில் இன்னும் என்னென்ன வேலைகளை செய்பவர்கள் உள்ளனர்?



**விவாதியுங்கள் :**



உங்கள் ஊரில் பல்வேறு வேலைகளை செய்பவர்கள் இருக்கிறார்கள் அல்லவா! குப்புசாமி சாலைகளை பெருக்குதல், கழிவுநீர் கால்வாய்களை சுத்தம் செய்தல் போன்ற வேலைகளை செய்கிறார். குப்புசாமியைப் போன்றே ஊரில் பலவிதமான வேலைகளைச் செய்பவர்கள், இன்னும் யார் யார் உள்ளனர்? அவர்கள் அப்பணிகளைச் செய்யாவிட்டால் என்ன நடக்கும்?





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

எல்லா வேலைகளும் முக்கியமானவையே. லாபத்திற்காக திறமையுடன் செய்யும் வேலைகளையே தொழில்கள் என்பர். அனைத்துத் தொழில்களைச் செய்பவர்களும் கிராமவளர்ச்சிக்குத் தேவை. எனவேதான் அனைத்துத் தொழிலாளர்களையும் மதிக்க வேண்டும்.



### வேலை செய்யும் குழந்தைகள் :



இவள் பெயர் கமலா. கமலாவிற்கு பள்ளிக்குச் செல்ல மிகவும் விருப்பம். ஆனால் இப்பொழுது பள்ளிக்குச் செல்வதில்லை. வீட்டில் தங்கையை வைத்துக் கொண்டு விளையாட வைக்கிறாள். கமலாவின் தந்தை வயலுக்கும், அம்மா கூலி வேலைக்கும் செல்கிறார்கள். கமலா வீட்டு வேலையைச் செய்து கொண்டு நாள் முழுக்க வீட்டிலேயே இருக்கிறாள். எப்பொழுதாவது ஓய்வு நேரம் கிடைத்தால் தான் புத்தகங்களை எடுத்து படிக்கிறாள். பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளைப் பார்க்கும் போதெல்லாம் கமலாவிற்கு பள்ளிச் செல்ல வேண்டும் என்று தோன்றுகிறது.

குழந்தைகள் பள்ளிக்குச் செல்லாமல் வேலைக்குச் செல்வதால் ஏற்படும் இழப்பு என்ன?
பள்ளிக்கு செல்லாத குழந்தைகளைக் கண்டால் நாம் என்ன செய்ய வேண்டும்?

### முக்கியச் சொற்கள்

| | | |
|---|---|---|
| 1. வீட்டு வேலைகள் | 2. வெளி வேலைகள் | 3. லாபம் |
| 4. உதவி | 5. தொழில்கள் | 6.சேர்ந்து செய்யும் வேலைகள் |
| 7. வேலை செய்யும் குழந்தைகள் | 8. குழந்தைகள் அனைவரும் பள்ளிக்குச் செல்ல வேண்டும். | |

### நாம் கற்றுக் கொண்டவை

* வீட்டிலுள்ளவர் அனைவரும் வீட்டிலும், வெளியிலும் பலவிதமான வேலைகளைச் செய்கின்றனர்.
* குடும்பத்திலுள்ள அனைவரும் ஒன்றுபட்டு வேலைகளை செய்துகொள்ள வேண்டும்.
* பெரியவர்கள் பலவிதமான வேலைகளைச் செய்வதால், குடும்பத்திற்கு வருமானம் கிடைக்கிறது.
* வீட்டு வேலைகளில் குழந்தைகள் பெரியவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.
* எல்லாவிதமான தொழிலாளிகளையும் மதிக்க வேண்டும்.
* கிராமத்தில் பலவிதமான தொழில்களை செய்பவர்கள் உள்ளனர்.
* பள்ளி வயது நிரம்பிய குழந்தைகள் அனைவரும் பள்ளிக்குச் சென்று படிக்க வேண்டும்.





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## இவற்றைச் செய்யுங்கள்



### பாடத்தைப் புரிந்து கொள்ளுதல்

1. குடும்பத்திலுள்ள பெரியவர்கள் ஏன் வேலை செய்கின்றனர்?
2. குடும்பத்தில் அனைவரும் சேர்ந்து செய்யும் வேலைகள் இரண்டினை எழுதுங்கள்.
3. கீழ்காணும் வேலைகளில் வருமானம் தரக்கூடியவற்றிற்கு ◯ சுற்றுங்கள்.

| | | |
|---|---|---|
| சமைத்தல் | கூடை பின்னுதல் | வீட்டைப் பெருக்குதல் |
| பானை தயாரித்தல் | துணி துவைத்தல் | கல்வி கற்பித்தல் |
| பாத்திரங்களை கழுவுதல் | பழங்களை விற்றல் | வயலில் வேலை செய்தல் |
| விளையாடுதல் | படித்தல் | துணி தைத்தல் |
| குளித்தல் | சாப்பிடுதல் | பால் விற்றல் |

4. உங்கள் கிராமத்தில் எந்தெந்த வேலைகளை செய்பவர்கள் உள்ளனர்? அவர்கள் சிறப்பு என்ன?
5. கீழே உள்ள படங்களைப் பாருங்கள். இவர்கள் என்னென்ன வேலைகளை செய்கின்றனர்? இவர்கள் இல்லாவிட்டால் என்னவாகும்?








### படங்களை வரையுங்கள் ; வண்ணம் தீட்டுங்கள் .

1. முதல் கட்டத்திலுள்ள படத்தை இரண்டாவது கட்டத்தில் வரைந்து வண்ணம் தீட்டுங்கள். அதன் பயனைப் பற்றி விவாதியுங்கள்.








SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com







### தகவல் திறன்கள் – செயல் திட்டப்பணி

1. பலவிதமான வேலைகளை செய்பவர்களின் விவரங்களை சேகரியுங்கள். அவர்களைப் பற்றி உரையாடுங்கள். படங்களை சேகரித்து ஆல்பம் தயார் செய்யுங்கள். வகுப்பில் காட்சிக்கு வையுங்கள்.

2. உங்கள் நண்பர்களிடம் கேட்டு அவர்களுடைய அம்மா, அப்பா எந்தெந்த தொழில்களைச் செய்கிறார்கள் என்னும் விவரங்களை சேகரியுங்கள்.

| வ.எண் | நண்பனின் பெயர் | தந்தையின் தொழில் | தாய் செய்யும் வேலை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |
| 8. | | | |
| 9. | | | |

SCERT TELANGANA





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

3. உங்கள் வீட்டில் கீழே காணும் வேலைகளை யார் யார் இணைந்து செய்வார்கள் என்பதை (✓)குறியிடவும்.

| வேலையின் பெயர் | அம்மா | அப்பா | நான் | தம்பி/அண்ணன் | அக்காள்/தங்கை | தாத்தா | பாட்டி |
|---|---|---|---|---|---|---|---|
| வீட்டை சுத்தம் செய்தல் | | | | | | | |
| சமையல் செய்தல் | | | | | | | |
| நீர் கொண்டுவருதல் | | | | | | | |
| துணி துவைத்தல் | | | | | | | |
| வயல் வேலைகள் | | | | | | | |
| காய்கறி வாங்கி வருதல் | | | | | | | |
| கடையிலிருந்து பல சரக்குகள் வாங்கி வருதல் | | | | | | | |



**பாராட்டுதல்**

1. உங்கள் கிராமத்தில் பல்வேறு வேலைகளை செய்பவர்கள் இருப்பார்கள். அவர்களை மதிக்க வேண்டும். அவர்கள் அந்த வேலைகளை செய்யாவிட்டால் என்ன நடக்கும் என கூறுங்கள். எழுதுங்கள்.



**வினவுதல்**

1. சிவராமன் அவனுடைய ஊரிலுள்ள கூடை பின்னும் சிங்கமுத்து மற்றும் பானைகள் செய்யும் குயவனான தங்கமுத்து ஆகியோரிடம் சென்றான். அவர்கள் செய்யும் வேலைகள் பற்றி கேள்விகள் கேட்டான். சிவராமன் சிங்கமுத்துவிடமும் தங்கமுத்துவிடமும் என்னென்ன கேள்விகள் கேட்டிருப்பான் என்பதை எழுதுங்கள்.



**என்னால் செய்ய முடியுமா?**



1. குடும்பத்திலுள்ள நபர்கள் செய்யும் வேலைகளின் முக்கியத்துவத்தை விளக்குவேன். — ஆம்/இல்லை
2. குடும்பத்தில் சேர்ந்து செய்யும் வேலைகள் என்ன என்பதையும், தனித்து செய்யும் வேலைகள் என்ன என்பதையும் அட்டவணையைக் கொண்டு விளக்க முடியும். — ஆம்/இல்லை
3. எங்கள் நண்பர்களின் தாய் தந்தையர் என்னென்ன தொழில்கள் செய்கின்றனர் என்பதை அட்டவணையில் நிரப்புவேன். — ஆம்/இல்லை
4. குழந்தைகள் அனைவரும் வேலைக்குச் செல்லாமல் பள்ளிக்குச் செல்ல வேண்டும். — ஆம்/இல்லை
5. சில வேலைகள் செய்யும் கருவிகளையும், பொருட்களையும் வரைவேன். — ஆம்/இல்லை
6. பல்வேறு தொழில்களைச் செய்பவர்களை சந்தித்து அவர்களின் வேலைகளைப் பற்றி கேள்விகள் கேட்பேன். — ஆம்/இல்லை





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# 3.ஆடுவோம்!



மஸ்தான், ரஹீம், லதா, கமலா, வாணி, கிரி, ஆகியோர் விளையாடுவதற்காக மைதானத்திற்கு சென்றனர். அங்கே இன்னும் அதிகமான பிள்ளைகள் இருந்தனர். அவர்கள் எல்லோரும் வகை வகையான ஆட்டங்கள் ஆடி கொண்டிருந்தனர். அவர்கள் என்னென்ன ஆட்டங்கள் ஆடிக்கொண்டிருக்கிறார்கள் எனப் பார்க்கலாமா!



* மேலே உள்ள படத்தில் பிள்ளைகள் என்னென்ன ஆட்டங்களை ஆடுகின்றனர்?
* நீங்களும் இந்த ஆட்டங்களை ஆடுவீர்களா? நீங்கள் என்னென்ன ஆட்டங்கள் ஆடுவீர்கள்?
* ஆட்டங்கள் என்றால் அனைவருக்கும் ஆசையல்லவா? ஏன் விளையாட வேண்டும்?



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

வேலை இல்லா நேரங்களில் விளையாடுவதால் நமக்கு இன்பம் ஏற்படும். உடலுக்கு சரியான பயிற்சி கிடைக்கும். எலும்புகள், தசைகள் தளராது. ஒத்துழைப்பு, கலந்து பணிபுரிதல் முதலிய நற்செயல்கள் பெருகும்.



**ஆட்டங்களின் வகைகள் :**

ஞாயிற்றுக் கிழமைகளில் கிரி; வீட்டிலேயே அவனது அக்காவுடனும், தங்கையுடனும் வெவ்வேறான ஆட்டங்கள் ஆடுவான்.

கிரி எந்தெந்த ஆட்டங்களை வீட்டில் ஆடமுடியும்?

மஸ்தான் எந்தெந்த ஆட்டங்களை வெளி மைதானத்தில் ஆடியிருக்கலாம்? குழு மாணவர்களுடன் ஆலோசித்து கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிடுக.

| வீட்டில் ஆடும் ஆட்டங்கள் | வெளியில் ஆடும் ஆட்டங்கள் |
|---|---|
| | |



வீட்டில் ஆடும் ஆட்டங்கள், வெளியில் ஆடும் ஆட்டங்கள் அட்டவணை தயாரித்தீர்கள் அல்லவா! பிறகு உங்களது அம்மா, அப்பா, தாத்தாக்கள் சிறுவயதில் இந்த ஆட்டங்களையே ஆடினார்களா? அவர்கள் விளையாடிய விளையாட்டுகள் என்ன? குறிப்பிடுங்கள்.

| நீங்கள் இப்பொழுது ஆடுபவை | முன்னோர்கள் அப்போது ஆடியவை |
|---|---|
| | |

* உனது தாத்தா ஆடிய ஆட்டங்களில், நீங்கள் ஆடும் ஆட்டங்கள் என்னென்ன உள்ளன?
* உனது முன்னோர்கள், பெற்றோர் சிறுவயதில் ஆடிய ஆட்டங்களில் நீங்கள் ஆடும் ஆட்டங்கள் யாவை? நீங்கள் ஆடாதவை யாவை?








Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

கீழ்காணும் படங்களைப் பாருங்கள். இவற்றை ஆடுவதற்கு என்னென்ன விளையாட்டு பொருட்கள் தேவையோ குறிப்பிடுங்கள். அவ்வாறே அவற்றை எங்கே ஆடுவீர்? வீட்டிலா? வெளியிலா? கீழ்காணும் அட்டவணையில் குறிக்கவும்.

| ஆட்டங்கள் | விளையாட்டுப் பொருட்கள் | எங்கே ஆடுவது |
|---|---|---|
|  | | |
|  | | |
|  | | |
|  | | |
|  | | |
|  | | |
|  | | |

SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com




### ஆட்டங்களின் வகைகள் :

நீங்கள் வகை வகையான ஆட்டங்கள் ஆடுவீர்கள் அல்லவா! இவற்றில் சிலவற்றை ஒருவரே ஆடுவர். மற்றும் சிலவற்றை சக மாணவர்களுடன் கலந்தாடுவர். இன்னும் சில ஆட்டங்கள் நிறைய பேர் கலந்து ஆடுவர். இதுபோன்ற ஆட்டங்களின் வகைகளை குழு மாணவர்களுடன் கலந்து பேசி கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிடுங்கள்.

| தனியாக ஆடுபவை | இருவர் ஆடுபவை | பலர் ஆடுபவை |
| --- | --- | --- |
| | | |

### விளையாட்டுப் பொருட்கள் :



சிவா, நிகில், அருண் ஆகியோர் மாலையில் கிரிக்கெட் ஆட சென்றனர். இதற்காக மட்டை, பந்து, நடுகுச்சிகள் தம்மோடு எடுத்துச் சென்றனர். இவ்வாறு நீங்கள் ஆடும் சில ஆட்டங்களுக்கு விளையாட்டு பொருட்கள் தேவையல்லவா? அவ்வாறே, சில ஆட்டங்கள் ஆடுவதற்கு விளையாட்டு பொருட்கள் தேவையில்லை. கண்மூடும் ஆட்டத்திற்கு எந்த வகையான விளையாட்டு பொருட்களும் தேவையில்லை.

இவ்வாறு விளையாட்டு பொருட்கள் தேவைப்படாத ஆட்டங்கள் எவை? பொருட்கள் தேவைப்படும் ஆட்டங்கள் எவை? அட்டவணையில் குறிப்பிடுங்கள்.

| விளையாட்டுப் பொருட்கள் தேவைப்படாதவை | விளையாட்டுப் பொருட்கள் தேவைப்படுபவை |
| --- | --- |
| | |





Downloaded from https:// www.studiestoday.com
SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

### ஆட்டங்கள்–விதிமுறைகள் :

ராமு, வாசு, கோபி, சீனு, முரளி, மாறன் ஆகியோர் சடுகுடு ஆடிக் கொண்டிருந்தனர். ஆட்டத்தின் மத்தியில் அவர்களிடையே சண்டை மூண்டது. ஆட்டத்தில் செய்த தவறுகள் மீது, சண்டை அதிகரித்தது. ஆட்டம் தடைப்பட்டது. முரளி, வாசு, மாறன் ஆகியோர் ஆடாது வீடு திரும்பினர்.

**ஆலோசித்துக் கூறுங்கள் :**

* பிள்ளைகள் ஆட்டத்தை, மத்தியில் ஏன் நிறுத்தினர்?
* ஆட்டம் சண்டையில்லாமல் நடக்க என்ன செய்ய வேண்டும்? ஆலோசிக்கவும்.

**உங்களுக்குத் தெரியுமா?**



சில விளையாட்டுகளை விலங்குகளின் உதவியுடன் விளையாடுவர். போலோ விளையாட்டில், விளையாட்டு வீரர் குதிரை மீது சவாரி செய்துக் கொண்டே தரையில் உள்ள பந்தை மல்லட் எனும் கட்டையை கொண்டு தட்டி குழிக்குள் தள்ளி விளையாடுவார்.

எந்த ஆட்டமாயினும் விதிமுறைகள் உண்டு. விதிமுறைகள் படியே ஆட்டம் ஆட வேண்டும். ஆட்டங்கள் ஆடும் போது விதிமுறைகளை மீறக்கூடாது. வெற்றி–தோல்விகளின் உடன்பாடின்றி ஆட்டம் ஆட வேண்டும். நாம் தினந்தோறும் தவறாது விளையாட வேண்டும். விளையாடினால் உடல் வலிமையுடன் இருக்கலாம். நண்பர்கள் அதிகரிப்பர்.



அன்று நவம்பர் 14. குழந்தைகள் தினத்தை முன்னிட்டு குழந்தைகள் அனைவருக்கும் விளையாட்டு போட்டிகள் நடந்தது. ஓட்டப்பந்தயத்தில் கோபி அனைவரையும் பின்தள்ளி முதற்பரிசு பெற்றான். பள்ளியில் பிள்ளைகள், ஆசிரியர்கள் ஆகியோர் கோபியை பாராட்டினர்.

* உங்கள் பள்ளியில் நன்றாக விளையாடுபவர்களை எப்போது பாராட்டுவர்?
* விளையாட்டில் வென்ற அணியை என்னவென்று அழைப்பர்?

**முக்கியச் சொற்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | வகைவகையான ஆட்டங்கள் | 2. | விளையாட்டுப் பொருட்கள் |
| 3. | வீட்டில் ஆடும் ஆட்டங்கள் | 4. | வெளியில் ஆடும் ஆட்டங்கள் |
| 5. | விதிமுறைகள் | 6. | அணிகளாக ஆடும் ஆட்டங்கள் |
| 7. | ஒருவர் ஆடும் ஆட்டங்கள் | 8. | இருவர் ஆடும் ஆட்டங்கள் |
| 9. | வெற்றி–தோல்விகள் | 10. | விளையாட்டுப் போட்டிகள் |



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## நாம் கற்றவை

* விளையாடுவதால் உடல் நலனுடன் இருப்பர்; இன்பம் ஏற்படும்; நண்பர்கள் அதிகரிப்பர்.
* ஆட்டங்களில் எத்தனையோ வகைகள் உண்டு. ஒருவரே ஆடுபவை, அணிகளாக ஆடுபவை, வீட்டில் ஆடுபவை, வெளியில் ஆடுபவை என பலவகை உண்டு.
* முந்தைய காலத்திற்கும், இப்போதைக்கும் ஆட்டங்களில் எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இன்று ஏராளமான புது ஆட்டங்கள் உள்ளன.
* சில ஆட்டங்களுக்கு விளையாட்டுப் பொருட்கள் தேவை. சிலவற்றிற்கு தேவையில்லை.
* விளையாட்டில் வெற்றி-தோல்விகளை சமமாக ஏற்கவேண்டும்.
* ஆட்டங்களை விதிமுறைகளின் படி ஆடவேண்டும்.

## இவற்றை செய்யுங்கள்



### குறிப்பு அறிந்திருத்தல்



1. ஆட்டங்கள் ஏன் ஆடவேண்டும்?
2. பந்துகள் கொண்டு ஆடும் சில ஆட்டங்களை வரையறு?
3. கோ-கோ ஆட்டத்திற்கும், கிரிக்கெட் ஆட்டத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?
4. நீங்கள் வீட்டில் ஆடும் ஆட்டங்கள் யாவை? இவற்றை எப்பொழுது ஆடுவீர்?
5. நீங்கள் மைதானத்தில் ஆடும் ஆட்டங்கள் யாவை? அவற்றை எப்பொழுது ஆடுவீர்?
6. கிரிக்கெட், கோ-கோ ஆட்டங்களை வெளிபுறத்தில் ஆடுகின்றோம். ஏனென்றால்...?



### வெளிப்படுத்தும் திறன்கள்-குழுவேலை :

1.உங்கள் வகுப்பறையில் உள்ள நண்பர்களுக்கு எந்தெந்த ஆட்டங்களை விளையாட விருப்பம் எனக் கேளுங்கள். அவற்றை அட்டவணையில் குறிப்பிடுங்கள்.

| வ. எண் | பெயர் | விரும்பும் ஆட்டங்கள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

அதிகமானோர் விரும்பும் ஆட்டங்கள் எவை?

2. வெவ்வேறான விளையாட்டுகளுக்கு தொடர்புடைய படங்களை நாளிதழ்களில் இருந்து சேகரித்து வரைபட ஏட்டில் ஒட்டுங்கள். அவற்றின் பெயர்களை எழுதுங்கள். அவற்றை ஆடுவதற்கு எந்தெந்த விளையாட்டுப் பொருட்கள் தேவையோ குறிப்பிடுங்கள்.





Downloaded from https:// www.studiestoday.com
SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

### படங்களை வரையுங்கள் - வண்ணமிடுங்கள் :

1. கீழ்காணும் படங்களை உங்கள் கையேட்டில் வரைந்து வண்ணமிடுங்கள்.

### பாராட்டுதல்

1. உங்கள் பள்ளியில் நன்றாக விளையாடுபவர்கள் யார்? அவர்கள் போட்டிகளில் வென்றால் நீங்கள் எப்படி ஊக்குவிப்பீர்கள்?
2. விளையாட்டில் வென்றவர்களிடம் நாம் என்ன கற்க வேண்டும்? அவ்வாறே தோற்றவர்களிடம் கூட நாம் என்ன கற்கலாம்?

### வினவுதல்

1. குழந்தைகள் மைதானத்தில் சடுகுடு ஆடுகிறார்கள். அப்போது அவர்களிடையே சண்டை மூண்டது. அப்போது அங்கே ஆசிரியர் வந்தார். அவர் அவர்களை என்ன கேட்டிருப்பார்? மாணவர்கள் என்ன கூறி இருப்பார்கள்? நீங்களாயின் என்ன கேள்வி கேட்டிருப்பீர்கள்?

### என்னால் செய்ய முடியுமா?

| | | |
|---|---|---|
| 1. | வெவ்வேறான ஆட்டங்களை விவரிப்பேன். | ஆம் / இல்லை |
| 2. | வீட்டில் ஆடும் ஆட்டங்கள், வெளியில் ஆடும் ஆட்டங்கள் எவையென கூறுவேன். | ஆம் / இல்லை |
| 3. | யார் யாருக்கு எந்தெந்த ஆட்டங்கள் விருப்பமோ பட்டியல் சேகரிப்பேன். அட்டவணையில் குறிப்பேன். | ஆம் / இல்லை |
| 4. | விளையாட்டுப் பொருட்களின் வரைபடங்களை வரைவேன். | ஆம் / இல்லை |
| 5. | ஆட்டங்கள் குறித்து வினாக்கள் எழுப்புவேன். | ஆம் / இல்லை |



SCERT TELANGANA


Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# 4. விலங்குகள் - அவற்றின் இருப்பிடங்கள்



அன்று ஞாயிற்றுக் கிழமை. மகேஷ், கமலா, லதா, சலீம், டேவிட் ஆகியோர் தோட்டத்திற்குச் சென்றனர். தோட்டத்தை ஒட்டி மகேஷின் பெற்றோரது விளைநிலம் இருந்தது. தோட்டத்திலும், விளைநிலத்திலும் அவர்களுக்கு ஏராளமான விலங்குகளும், பறவைகளும் தென்பட்டன. கீழ்காணும் படத்தை பாருங்கள். அவர்கள் என்னென்ன பார்த்தார்கள் எனக் கூறுங்கள்.



மேற்கண்ட படத்தில் என்னென்ன விலங்குகள், பறவைகள் உள்ளன? உங்களைச் சுற்றி நீங்கள் என்னென்ன விலங்குகளை, பறவைகளை பார்த்தீர்கள்?

அனைவரும் மதியம் வரை தோட்டத்தில் விளையாடினர். மகேஷ் கை கழுவ குளத்தின் அருகில் சென்றான். குளத்தில் மற்றும் குளத்தின் கரையில் விதவிதமான விலங்குகள் தென்பட்டன. உடனே நண்பர்கள் அனைவரையும் குளத்தின் அருகில் வருமாறு அழைத்தான். நீரில் உள்ள விலங்குகளை பார்க்கச் சொன்னான். அவர்கள் குளத்தில் என்னென்ன விலங்குகளைப் பார்த்திருப்பார்கள் என்று கூறுங்கள்.






Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com




**கீழ்காணும் படத்தை பாருங்கள். என்னென்ன விலங்குகளைக் அவை எங்கு வாழ்கின்றன என்று கூறுங்கள்.**



மீன்கள் நீரிலேயே இருக்கும். சில வகையான பாம்புகள் நீரில் உள்ளன, மற்றும் சில நிலங்கள் மீது உள்ளன. அவ்வாறே தவளைகள், முதலைகள், ஆமைகள், நண்டுகள் போன்றவை நீரிலேயும், நிலத்திலேயும் இருக்கும்.

விலங்குகள் வெவ்வேறு இடங்களில் வாழ்கின்றன. சில மரங்களின் மீதும், சில நீரிலும், சில நிலத்திலும் மற்றும் சில நிலத்தில் வளை தோண்டி அதில் வாழ்கின்றன.

**கீழ்காணும் படங்களை பாருங்கள் :**







**எந்தெந்த விலங்குகள் எங்கெங்கு வாழ்கின்றன என்று கூறுங்கள். குறிப்பிடுங்கள்.**

| விலங்கின் பெயர் | இருப்பிடம் |
| --- | --- |
| ................................... | ................................... |
| ................................... | ................................... |
| ................................... | ................................... |






Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



சில விலங்குகள் நமது வீடுகளிலும் வாழ்கின்றன. கீழ்காணும் படத்தை பாருங்கள். வீட்டில் வாழும் விலங்குகளின் படங்களை வண்ணமிடுங்கள். இவ்வாறு வீடுகளில் வளர்க்கும் விலங்குகளை செல்லப் பிராணிகள் என்பர்.



SCERT TELANGANA





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



## பறவைகள் எங்கே வாழ்கின்றன?



வாசு, ரங்காவின் வீட்டுக்குச் சென்றான். வீட்டின் மேற்கூரையில் தொங்கவிடப்பட்டிருந்த கிண்ணத்தில் உள்ள நீரில், குருவிகள் குடித்தும், குளித்தும் ஆடுவதைக் கண்டான். ரங்கா ஒரு தட்டில், கம்பு தானியத்தைக் கொண்டு வந்து இறைத்த உடனே, குருவிகள் எல்லாம் பறந்து வந்து அவற்றின் இரையை வேகமாக உண்பதைக் கண்டான். வாசுவிற்கு மிகுந்த இன்பம் ஏற்பட்டது. "குருவிகளெல்லாம் எவ்வளவு அழகாக உள்ளன!" என்றான் வாசு. ரங்கா, வாசுவை பின்புறமாக அழைத்துச் சென்றான்.

பின்புறம் மரத்தின் கிளைகள் மீது காக்கைக் கூடு தென்பட்டது. அதனுள் காக்கைக் குஞ்சுகள் தென்பட்டன. வாசுவிற்கு அவற்றை பார்த்தவுடனே உற்சாகம் ஏற்பட்டது.

* காக்கைகள் ஏன் கூடு கட்டுகின்றன?
* இவ்வாறு மரங்களின் மீது கூடு கட்டும் மற்ற பறவைகளின் பெயர்களைக் கூறுங்கள். குறிப்பிடுங்கள்.









| | | |
|---|---|---|
| பறவை பெயர் ........................ | பறவை பெயர் ........................ | பறவை பெயர் .................. |
| இருப்பிடம் ......................... | இருப்பிடம் ......................... | இருப்பிடம் ......................... |

இவை மட்டுமின்றி இன்னும் சில பறவைகள் எங்கு வாழ்ந்துக் கொண்டிருக்கின்றன என்பதை பெற்றோர்களை கேட்டு அறிந்துக் கொள்ளவும்.






SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com





### குடிபெயரும் பறவைகள் :

ரங்கா, வாசு மாலைப் பொழுதில் ஆடிக்கொண்டே வானத்தில் பறக்கும் கொக்குகள் கூட்டத்தைப் பார்த்தனர். அவை அனைத்தும் ஒரே வரிசையில் வானத்தில் பறப்பது எவ்வளவோ அழகாக தெரிகிறது. இவை அவ்வப்பொழுது தென்படுபவையே அல்லவா! இவை எங்கே இருக்குமென வாசு கேட்டான். இவை எப்பொழுதும் தென்படுபவை அல்ல. மழை காலங்களில் தென்படும் என ரங்கா கூறினான்.

சில பறவைகள் முட்டையிட்டு குஞ்சு பொரிக்க அல்லது உணவிற்காக ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்குச் செல்கின்றன. அவ்வாறே மேலும் சில பறவைகள் கோடைக் காலத்திலும், குளிர் காலத்திலும் அங்குள்ள தட்பவெப்ப நிலையை தாங்காது மற்ற பகுதிகளுக்கு குடி பெயருகின்றன. இவ்வாறான பறவைகளை குடிபெயரும் பறவைகள் என்பர்.

வானத்தில் பறவைகள் அணி அணியாக செல்வதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?




எவை எவ்வாறு செல்லும்?

விலங்குகள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்வதற்கு, சில; நடந்துச் செல்லும்; சில; ஊர்ந்துச் செல்லும்; சில குதித்துச் செல்லும்; மற்றும் சில தாவிச் செல்லும்; இன்னும் சில நீந்தியும் செல்லும். இதற்காக அவை, அவற்றின் கால்கள், இறக்கைகள், சிலசமயம் வாலை கூட பயன்படுத்தும். விலங்குகளில் எவைஎவை குதித்துக்கொண்டிருக்கும்? எவைஎவை ஊர்ந்து செல்லும்? எவைஎவை தாவிச்செல்லும்? எவைஎவை பறந்து செல்லும்? கீழ்காணும் படத்தைப் பாருங்கள். அவற்றை குறிப்பிடுங்கள்.







SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com




**செய்து பார்க்கலாமே!**


* உங்களுக்கு விருப்பமான / பார்த்த விலங்கின் படத்தினை உங்கள் புத்தகத்தில் வரையுங்கள்.

* இப்பொழுது நீங்கள் மூவர் மூவராக குழுவில் அமருங்கள். ஒவ்வொரு அணியினரும் ஒரு காகிதத்தை எடுத்துக்கொண்டு, மூன்று மடிப்புகளாக மடியுங்கள்.


1. முதலாம் அணியில் ஒருவர் முதல் மடிப்பு மீது விருப்பமான விலங்கின் தலை, கழுத்து படம் வரையுங்கள். வரைந்த பாகத்தை மடித்து இரண்டாம் குழுவிற்கு கொடுக்கவும்.




2. இரண்டாவது அணியில் உள்ளவர்கள் இரண்டாம் மடிப்பில் விருப்பமான விலங்கின் உடலை வரையவும். வரைந்த பாகத்தை மடித்து மூன்றாமவர்க்கு கொடுக்கவும்.



3. மூன்றாம் அணியில் உள்ளவர்கள் மூன்றாம் மடிப்பில் விருப்பமான விலங்கின் கால்களை வரையுங்கள்.



4. இப்பொழுது காகித மடிப்புகளை விரித்துப் பாருங்கள். இது ஒரு விசித்திர விலங்காக தெரியுமல்லவா!



அவ்வாறே மற்ற அணி மாணவர்கள் வரைந்த படங்களைக் கூட பாருங்கள்.

SCERT TELANGANA






Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com




ஜெயா, விஜயா, லதா போன்றோர் கூட இவ்வாறே வரைந்தனர். அவர்கள் வரைந்த படத்தைப் பாருங்கள். இதில் எந்தெந்த உறுப்பு எந்த விலங்கினுடையது என்று கூறுங்கள்.






### விலங்குகளிடத்து அன்பு வேண்டும்.

ஒரு நாள் கிட்டு, பள்ளிக்குச் செல்கையில் வழியில் முணுமுணுத்து வலியுடன் கத்திக்கொண்டிருந்த நாய்க் குட்டியை பார்த்தான். அதன் காலில் காயம் ஏற்பட்டிருந்தது. கிட்டு அந்த குட்டியை வீட்டுக்கு எடுத்துச் சென்று அவனது தந்தைக்குக் காண்பித்தான். அவனது தந்தை அந்த குட்டிக்கு கட்டு கட்டினார். அதன் பிறகு கிட்டு ஒரு கிண்ணத்தில் பால் வைத்து குடிக்கச் செய்தான். பால் குடித்த குட்டி அன்புடன் தனது வாலை ஆட்டிக்கொண்டு கிட்டுவிடம் சென்றது. கிட்டு அதற்கு ஆசையுடன் வெங்கி என பெயரிட்டான். அந்த நாளிலிருந்து வெங்கி கிட்டுவின் குடும்பத்தில் கலந்து விட்டது. கிட்டு செய்த நற்செயலை பள்ளியில் ஆசிரியர்களும் சக மாணவர்களும் எவ்வளவோ புகழ்ந்தனர்.








Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

கிட்டு என்ன செய்தான் என்று தெரிந்துக் கொண்டீர்களல்லவா! நீங்கள் எப்பொழுதாவது இது போல் செய்தீர்களா? என்ன செய்தீர்? உங்கள் வீட்டிலும், தெருவிலும் பசியால் திரியும் பூனைக்குட்டிகள் அல்லது நாய்க்குட்டிகளைக் கண்டால் நீங்கள் என்ன செய்வீர்?

**வண்ணத்துப் பூச்சிக்கு வண்ணமிடுங்கள் :**




வண்ணத்து பூச்சி எவ்வளவு அழகாக உள்ளது அல்லவா! செடியின் மீது உட்கார்ந்து இருக்கும் போது காண மகிழ்ச்சி தரும். அவ்வாறே தும்பிகள் கூட காற்றில் பறக்கும்போது நம் சுற்றுப்புறங்கள் எவ்வளவோ அழகாகத் தெரியும். இதுபோன்றவற்றை நாம் காக்க வேண்டும். ஆனால் விளையாட்டுப் பிள்ளைகள் சிலர், மரங்களில் ஏறி பறவைக் கூடுகளை கலைப்பது, கூட்டிலுள்ள முட்டைகளை உடைத்து அவற்றின் கூட்டைவைத்து விளையாடுவது, வண்ணத்துப் பூச்சி, தும்பி போன்றவற்றின் இறக்கைகளை பிரித்தெடுப்பது, தெருவிலுள்ள நாய்க்குட்டிகள் மீது கற்களை வீசுவது போன்று பலத் தவறுகளைச் செய்வர்.

நம்மோடு நமது சுற்றுப் புறங்களில் ஏராளமான விலங்குகள் வாழ்கின்றன. இவையெல்லாம் நம்மை போன்ற உயிரனங்களே. காயப்பட்டால் நம்மை போன்றே வருந்தும். அதனால் அவற்றை வாழவிடுவோம்.



**பூச்சிகள் :**

கீழ்காணும் வகைவகையான பூச்சிகளைப் பாருங்கள். இவற்றை நீங்கள் எங்கு பார்த்தீர்கள் எனக் கூறுங்கள்?







Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



**பூச்சிகள் கடித்தால் என்ன நிகழும்?**

ராஜாவின் தாத்தாவிற்கு சளி ஏற்பட்டது. மருத்துவரிடம் கூட்டிச் சென்றனர். மருத்துவர் பரிசோதித்து மலேரியா நோய் வந்துள்ளதென கூறினார். மலேரியா நோய் ஏன் வந்ததென ராஜா மருத்துவரைக் கேட்டான். ஒருவகையான கொசுக் கடியால் மலேரியா வந்தது எனக் கூறினார்.

> கொசுக்கள் கடிக்காமல் இருக்க நாம் எடுக்க வேண்டிய எச்சரிக்கைகள் யாவை?
> கொசுக்கள் அதிகரிக்காமல் இருக்க நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் யாவை?

இவற்றைப் பாருங்கள்? இவற்றை ஏன் பயன்படுத்துவர் கூறுங்கள்?

தொடர்புடைய படம்







தேங்கிய நீர் அதிகமுள்ள இடங்களில் கொசுக்கள் பெருகும். நமது சுற்றுப்புறங்களில் நீர் தேங்காது பார்த்துக்கொள்ள வேண்டும். தேங்கிய நீரில் மண்ணெண்ணெய் அல்லது மலாதியான் போன்றவற்றை தெளித்தால் கொசுக்கள் மடியும். கொசுக்களைத் தடுக்க கொசுவலை பயன்படுத்துவர். கொசுவத்திச்சுருள்களைக் கூட பயன்படுத்துவர்.


அவ்வாறே ஈக்களாலும் நமக்கு அதிக இழப்புகள் ஏற்படும். ஈக்கள் சாணங்கள் மீதும் சுத்தமற்ற இடங்களிலும் அதிகம் இருக்கும். இது போன்ற இடங்களில் நோய் உருவாக்கும் பூச்சிகளும் கூட இருக்கும். நாம் உண்ணும் உணவு மீதும் ஈக்கள் உட்காரும். இவ்வாறு ஈக்கள் உட்கார்ந்த மாசுபட்ட உணவை உண்பதால் டைபாய்டு, காலரா போன்ற நோய்கள் உருவாகும். அதற்காகவே உணவை ஈக்கள் உட்காராது மூடிவிட வேண்டும்.

> மூடிகள் இல்லாது, தூசிகள் படுமாறு உள்ள உணவுப் பொருட்கள் மற்றும் திண்பண்டங்களை எங்கேயாவது பார்த்தீர்களா? அவற்றை ஏன் உண்ணக் கூடாது கூறுங்கள்.

ஈக்கள் மற்றும் கொசுக்கள் அதிகரிக்காது இருக்க நமது சுற்றுப்புறத்தில் நீர் தேங்காது பார்த்துக் கொள்ளவேண்டும். குப்பையை குப்பைத் தொட்டியில் போட வேண்டும். கழிவுநீரின் மீது கொசுக்கள் வளராது இருக்க மண்ணெண்ணெய் அல்லது மலாதியான் போன்ற மருந்துகளை தெளிக்க வேண்டும். நீர் குட்டையாக தேங்காமல் குப்பைகளை கண்ட இடங்களில் போடாது நமது சுற்றுப் புறத்தை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். வீட்டின் வெளிப்புறத்தை சுத்தமாக வைத்திருந்தால் கொசுக்கள் இருக்காது.

SCERT TELANGANA





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## முக்கியச் சொற்கள்

1. விலங்குகள் இருப்பிடம் 2. நீர்வாழும் உயிரினங்கள் 3. குடிபெயரும் பறவைகள்
4. நீர் மீது நடக்கும் விலங்குகள் 5. வளர்ப்பு விலங்குகள். 6. பூச்சிகள்
7. விலங்குகளிடத்து அன்பு 8. உயிரினங்கள். 9. சுற்றுபுறத்தூய்மை
10. கொசுவர்த்திகள் 11. மாலதியான்

## நாம் கற்றவை

* விலங்குகள் நிலம், நீர், மற்றும் மரங்கள் மீது வாழ்கின்றன.
* வீட்டில் வளர்க்கும் விலங்குகளை செல்லப் பிராணிகள் என்பர்.
* ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு விலங்குகள் நடந்தும், ஊர்ந்தும், குதித்தும், தாவியும், நீந்தியும் செல்கின்றன.
* பறவைகள், உணவிற்காகவும், வசதியான இருப்பிடத்திற்காகவும் குடிபெயருகின்றன. இவ்வாறான பறவைகள் குடிபெயரும் பறவைகள் என்பர்.
* விலங்குகளிடத்து அன்பு காட்ட வேண்டும். அவற்றிற்கு தேவையான உணவு, நீர் தரவேண்டும். அவற்றை பாதுகாக்க வேண்டும்.
* தேங்கியுள்ள நீரில் கொசுக்கள் வளரும்.
* சுத்தமற்ற சுற்றுப்புறங்களில் ஈக்கள் மற்றும் கொசுக்கள் அதிகம் இருக்கும். ஆதலால் நமது சுற்றுப்புறங்களை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

SCERT TELANGANA

## இதைச் செய்யுங்கள்



### புரிந்துக் கொள்ளல்

1. வளர்ப்பு விலங்குகள் நான்கினைத் தெரிவி?
2. கொசு இல்லாதிருக்க என்ன செய்யவேண்டும்?
3. பறவைகள் ஏன் குடிபெயருகின்றன?
4. பறவைகள் மற்றும் விலங்குகளிடையே உள்ள வேறுபாடுகள் யாது?
5. கீழ்காண்பனவற்றிற்கு மூன்று பெயர்களைக் கூறுங்கள்.

அ) பறப்பவை 1. ............... 2. ............... 3. .................

ஆ) ஊர்வன 1. ............... 2. ............... 3. .................

இ) நடப்பவை 1. ................ 2. ............... 3. .................





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

5. யார் ? நான் யார் ?

அ) நான் நீண்டு இருப்பேன்
காலில்லை–காதில்லை. ஊர்ந்து செல்வேன்–புற்றில் இருப்பேன்
நான் யார்?

ஆ) எனக்கோ நான்கு கால்களுண்டு.
மே மே என்பேன். இலைகளை உண்பேன். நான் யார்?


இ) நீரில் இருப்பேன்
நானோ தூங்கமாட்டேன். செவுல்களில் மூச்சு வாங்குவேன். நான் யார்?


ஈ) எனக்கோ இறக்கைகள் உண்டு, வானத்தில் உயர பறப்பேன். உயரத்தில் இருந்தும் கீழ் உள்ளவற்றை காண்பேன். நான் யார்?



**படம் வரையுங்கள். வண்ணமிடுங்கள்**


1. கீழ்காணும் படங்களை வரையுங்கள், வண்ணமிடுங்கள்.





SCERT TELANGANA





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



## தகவல் திறன்கள் – செயல் திட்டப்பணி

1. விலங்குகளின் படங்களை சேகரித்து ஆல்பம் தயார் செய்யுங்கள். ஒவ்வொரு விலங்கையும் ஆராய்ந்து, இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களை எழுதவும்.
2. நீங்கள் உங்கள் நண்பனின் வீட்டிற்குச் சென்று அவர்கள் என்னென்ன விலங்குகள் மற்றும் பறவைகள் வளர்க்கின்றார்கள் என விவரங்களை சேகரித்து கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிடுங்கள்.

| நண்பன் பெயர் | வளர்க்கும் விலங்குகள்/ பறவைகள் |
|---|---|
| | |

அதிகமானோர் வளர்க்கும் விலங்குகள் எவை?



## பாராட்டுதல்

1. மரக்கூட்டிலிருந்து பறவைக் குஞ்சு கீழே விழுந்தது. அதை பார்த்த நீங்கள் என்ன செய்வீர். கூறுங்கள். குறிப்பிடுங்கள்.
2. விலங்குகளும் நம்மை போன்று உயிரினங்களே. விலங்குகள் துன்புறாது இருக்க வேண்டுமானால் நாம் செய்யக் கூடாத மூன்று செயல்களைக் கூறுங்கள். எழுதுங்கள்.



## வினவுதல்

1. ரீடா, சீதா இருவரும் மரத்தில் உள்ள கூட்டினை ஆனந்தத்துடன் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அவற்றை குறித்து அறிய விரும்பினர். அங்கேயே இருந்த பெரியவரிடம் பறவைக் கூட்டை பற்றி கேட்டறிந்தனர். அவர்கள் கேட்ட வினாக்கள் என்னவாய் இருக்கும்? அவற்றை எழுதுங்கள்.



## என்னால் செய்ய முடியுமா?



1. விலங்குகள் பறவைகள் எங்கெங்கே உள்ளன என்று கூறமுடியும். ஆம் / இல்லை
2. வளர்ப்பு விலங்குகள் குறித்து பட்டியல் தயார் செய்வேன். ஆம் / இல்லை
3. பறவைகள் / விலங்குகள் படம் வரைந்து வண்ணமிடுவேன். ஆம் / இல்லை
4. பறவைகள்/விலங்குகள் என்றால் எனக்கு ஆசை. அவற்றின் மீது அன்பு காட்டுவேன். ஆம் / இல்லை
5. பறவைகள் கூட்டை குறித்து கேள்வி எழுப்புவேன். ஆம் / இல்லை





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# 5. நம்மைச் சுற்றியுள்ள செடிகள்



சலீமாவிற்கு பூச்செடிகள் என்றால் கொள்ளை ஆசை. வீட்டில் பல வகையான பூச்செடிகளை வளர்த்தாள். தினமும் அவற்றிற்கு நீர் ஊற்றுவாள். யாரும் அதன் இலைகளையும் கிளைகளையும் ஒடிக்காதவாறு கவனத்துடன் பார்த்துக்கொண்டாள்.

சலீமா பள்ளியிலும் கூட சில செடிகளை தத்தெடுத்தாள். அவற்றையும், வீட்டில் வளர்க்கும் செடிகளைப் போலவே கவனத்துடன் பார்த்து வளர்த்தாள். விடுமுறை நாட்களில் கூட அவ்வப்பொழுது நீர் ஊற்றுவாள். ஒரு நாள் அகிலா பூக்களுக்காக சலீமாவின் வீட்டிற்கு வந்தாள்.

இருவரும் சேர்ந்து விதவிதமான பூச்செடிகளை பார்த்தனர். பூக்களையும் பறித்தனர்.







Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



அகிலாவும், சலீமாவும் எந்தெந்த பூச்செடிகளை பார்த்திருப்பர்?
உங்களுக்குத் தெரிந்த சில பூச்செடிகளின் பெயர்களைக் கூறுங்கள்.
சலீமாவும், அகிலாவும் பூக்களைக் கொண்டு என்ன செய்திருப்பர்? பூக்களை இன்னும் எதற்காக, எப்போது பயன்படுத்துவர்?



சலீமாவின் வீட்டில் பூச்செடிகள் மட்டுமின்றி இன்னும் விதவிதமான காய்கறி செடிகளையும், பழச்செடிகளையும் கூட வளர்த்தனர். அவற்றைப் பாருங்கள்.





உங்கள் வீட்டில் மற்றும் உன் நண்பன் வீட்டில் வளர்க்கும் செடிகளின் விவரத்தை அறிந்து கீழ் உள்ள அட்டவணையில் குறிப்பிடுங்கள்.

| நண்பனின் பெயர் | வீட்டில் வளர்க்கும் செடிகள் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |

SCERT TELANGANA





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பெரும்பான்மையான வீடுகளில் வளர்க்கும் செடிகள் எவை?
ஒரு சில வீடுகளில் மட்டும் வளர்க்கும் செடிகள் எவை?



இயல்பாகவே வீடுகளின் முன் உள்ள காலியிடங்களில் விதவிதமான செடிகளை வளர்ப்பர். சிலர் வீட்டு முன், காலியிடம் இருக்காது. இதுபோன்றோர் என்னென்ன செடிகளை எப்படி வளர்ப்பர்?

அகிலாவும், சலீமாவும் விளையாட வெளியே சென்றனர். அங்கே பிள்ளைகளெல்லாம் ஆலமரத்தின் கீழே விளையாடிக் கொண்டிருந்தனர். ஆலமரத்தோடு சாலை ஓரங்களில் புளியமரம், வேப்பமரம் போன்ற மரங்கள் இருந்தன. அகிலாவும், சலீமாவும் பிள்ளைகளோடு அங்கேயே விளையாடினர்.



மரங்களால் என்னென்ன பயன்கள் உண்டு என நினைத்துப்பாருங்கள். மரங்கள் எல்லாம் ஒரேவகையாக உள்ளனவா?

அகிலாவும், சலீமாவும் வீட்டு பின்புறத்தில் உள்ள மரங்களின் இலைகள், கிளைகள் மற்றும் காய்கனிகளை பார்த்தனர். அவற்றில் சில, நீளமாகவும் சில குட்டையாகவும் இருந்தன. சில, சிறு சிறு இலைகளுடனும் சில, பெரிய பெரிய இலைகளுடனும் உள்ள மரங்களை பார்த்தனர். அவர்கள் பார்த்தனவற்றில் சிறு சிறு இலைகளுடனும் பெரிய பெரிய இலைகளுடன் இருக்கும் மரங்கள் என்னவாக இருக்கும்? அவ்வாறே பெரியதாக, உயரமாக இருந்த நிழல்தரும் மரங்கள் என்னென்னவாக இருக்கும்? கூறுங்கள். வீட்டின் வெளிப்புறத்தில் உயரமாகவும், நீண்டும் உள்ள பனைமரத்தை பார்த்து ''எவ்வளவு உயரமாக உள்ளது'' என்றாள் அகிலா.







நம்மை சுற்றி விதவிதமான மரங்கள், செடிகள் உள்ளதல்லவா? அவை யாவும் ஒரே உயரத்தில் உள்ளனவா? இவற்றில் சில உங்கள் உயரத்தை விட சிறியதாகவே இருக்கும். மற்றும் சில, உங்கள் உயரத்தைவிட மிக உயரமாக இருக்கும். உங்கள் ஊரில்/தெருவில் உள்ள செடிகளையும் மரங்களையும் பாருங்கள். அவற்றின் பெயர்களை கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிடுங்கள்.

| உங்களைவிட உயரம் சிறியவை | உங்கள் உயரமுள்ளவை | உங்களைவிட உயரமானவை |
|---|---|---|
| | | |

SCERT TELANGANA





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ஆலமரம், வேப்பமரம், புளியமரம் போன்றவை அதிகமான கிளைகளுடன் பெரியதாக இருக்கும். இவைகள் நிழல் தரக்கூடிய மரங்களாகும். சாலை ஓரங்களில் இதுபோன்ற மரங்களை வளர்ப்பர். இவற்றின் இலைகள், பூக்கள், காய்கள் ஆகியவை நமக்கு பயன்படுகின்றன. மரங்களால் நமக்கு மரப்பலகைகள் கூட கிடைக்கும். மரப்பலகைகளால் எத்தனையோ பொருட்களை தயாரிக்கின்றனர். பனைமரம் மிக உயரமாக வளரும். இவற்றிற்கு கிளைகள் கிடையாது. பனைமர ஓலைகள் பெரிய மட்டைகளை போன்று இருக்கும். பனை ஓலைகளை குடிசைகள் மீது மூடுவதற்கு பயன்படுத்துவர்.

இவ்வாறே இன்னும் என்னென்ன மரங்களால் என்ன பயன்கள் உண்டோ யோசியுங்கள்?

### நாம் ஏன் மரங்களை வளர்க்க வேண்டும்?

அகிலா வீட்டு பின்புறத்தில் மாமரங்கள் இருந்தன. மாமரங்களால் என்னென்ன பயன்கள் உண்டு எனத் தெரியுமா? மாங்காய்களால் ஊறுகாய் தயாரிப்பர். மாம்பழங்களை அனைத்து வயதினரும் விரும்பி உண்ணுவர். பண்டிகை நாட்களில் மாவிலைகளை கொண்டு வீட்டு முன் தோரணங்கள் கட்டுவர். மாமரத்தில் கயிறுகளைக் கட்டிக் கொண்டு ஊஞ்சலாடுவார்கள்.





மாமரம் எவ்வாறு நமக்கு பயன்படுகின்றது என தெரிந்ததல்லவா! கீழ்காணும் மரங்களால் நமக்கு என்னென்ன பயன்கள் உள்ளதென சக மாணவர் குழுக்களுடன் கலந்தாலோசித்து தெரிவியுங்கள்.



தென்னை மரம்



வேப்ப மரம்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com







மேற்கண்ட இரண்டு படங்களை கவனி.

**குழுவுடன் கலந்துரையாடு**



- மேற்கண்ட இரண்டு படங்களில் நீ விரும்புவது எது? ஏன்?
- மரங்கள் அங்கு இல்லையெனில் என்னவாகும்? உன் விடையை யோசி?
- வெப்பமான நாளில் எப்போதாவது மக்கள் மரத்தின் நிழ-ல் ஓய்வு எடுப்பதை நீ பார்த்திருக்கிறாயா?
- உங்கள் பள்ளியில் நடைபெற்ற மரம்நடு விழாவில் நீ கலந்துகொண்டிருக்கிறாயா?

மரங்கள் நமக்கு குளுமையான காற்றையும் பசுமையான இலைகளையும் தருகின்றன. அவை பசுமையான இலைகளுடனும் வெவ்வேறு நிற பூக்களுடனும் அழகாக காட்சியளிக்கின்றன.

நீ பூங்காவிற்கு சென்றபோது பசுமையான புல்வெளியில் விளையாடிருப்பாய்.

கோடை காலங்களில் கிராமங்களில் வசிக்கும் மக்கள் மர நிழ-ல் ஓய்வெடுப்பதை நீ பார்த்திருக்கிறாயா? குழந்தைகள் மர நிழல்களில் வெவ்வேறு வகையான விளையாட்டுகளை விளையாடுவர்.

நாம் மரங்களை பாதுகாக்க வேண்டும் என எப்போதாவது நீ நினைத்தது உண்டா?

**சுற்றுப்புறத்தில் வளராத மரங்கள் :**

நாம் விதவிதமான பழங்களை தின்கிறோம். இந்த பழ மரங்களில் சில நம் பகுதியில் இருக்கும். சில நம் பகுதியில் இருக்காது. அகிலாவிற்கு ஆப்பிள் பழம் என்றால் மிகவும் விருப்பம். ஆனால் ஆப்பிள் மரத்தை அவள் எப்போதும் பார்த்ததில்லை. அவ்வாறே நீங்கள் பார்க்காத பழமரங்கள் சிலவற்றின் பெயர்களை எழுதுங்கள்.


ஆப்பிள்

.................... ....................

.................... ....................

.................... ....................





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

### நீர்த் தாவரங்கள், பாலைவனத் தாவரங்கள் :

சலீமா, அகிலா இருவரும் நண்பர்களுடன் கலந்து நிலத்திற்குச் சென்றனர். பக்கத்தில் இருந்த குளத்தில் தாமரை மலர்களைப் பார்த்தனர். மீன்களைப் பிடித்து கொண்டிருந்த சோமு, அவர்களுக்கு தாமரையை பற்றிக் கூறினான். வீட்டிற்கு திரும்பி வரும் வழியில் அகிலா ஒரு செடியின் அருகில் நின்றாள். “இத்தாவரத்தைப் பார்! வித்தியாசமாக உள்ளது. இலைகளில்லை. ஆனால், அதிகமான முட்கள் உள்ளன. இதென்ன தாவரம்?” என சலீமாவைக் கேட்டாள். அதற்கு சலீமா என்ன கூறியிருப்பாள்? நினைத்து பாருங்கள். கீழ்காணும் படங்களைப் பாருங்கள். இவற்றினை குறித்து உங்களுக்குத் தெரியுமா? அவை எங்கு வளரும்?



அல்லி



தாமரை மலர்



கற்றாழை



கள்ளிச்செடி

தாமரை போன்றவை நீரில் வளர்கின்றன. இவற்றை நீர் தாவரங்கள் என்பர். கள்ளி, கற்றாழை போன்றவை நீர் குறைவாக உள்ள பகுதிகளிலும், மணற்பாங்கான இடங்களிலும் வளரும். இவற்றை பாலைவனத் தாவரங்கள் என்பர்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## முக்கியச் சொற்கள்

1. மரங்களால் பயன்கள் 2. செடிகளை தத்தெடுத்தல் 3.வீட்டில் வளரும் செடிகள்
4. பாலைவனத் தாவரங்கள் 5. நீர்த் தாவரங்கள் 6. வெளியில் வளரும் மரங்கள்

## நாம் கற்றவை

* நம் வீட்டில் மற்றும் சுற்றுப்புறங்களில் விதவிதமான செடிகள் வளரும்.
* நம்மை சுற்றியுள்ள தாவரங்கள் விதவிதமாக உள்ளன. சில உயரமாக வளர்கின்றன. சில குட்டையாக இருக்கும். மற்றும் சில, மிகவும் சிறியதாக இருக்கும்.
* வேப்பமரம் போன்ற மரங்கள் அதிக கிளைகளுடன் பெரியதாக இருக்கும். பனை போன்ற மரங்கள் கிளைகளில்லாது உயரமாக வளரும்.
* மரங்களால் ஏராளமான பயன்களுண்டு. மரங்களிலிருந்து பூக்கள். பழங்கள், பலகைகள் போன்றவை கிடைக்கின்றன.
* சில மரங்கள் நம் சுற்றுப்புறங்களில் வளராது. ஆனால் அதனால் கிடைக்கும் பூக்கள், பழங்கள் போன்றவைகளை நாம் பார்க்கின்றோம்.
* மணற்பாங்கானப் பகுதிகளில், கள்ளி, கற்றாழை போன்ற தாவரங்கள் வளரும். இவற்றை பாலைவனத் தாவரங்கள் என்பர்.

## இதனைச் செய்யுங்கள்



### புரிந்துகொள்ளல்



1. பூக்கும் மற்றும் காய்க்கும் செடிகள் சிலவற்றிற்கு உதாரணம் தருக.
2. ஈச்சமரம் மற்றும் மாமரம் இடையே உள்ள ஒற்றுமை, வேற்றுமை யாது?
3. மல்லி மற்றும் மந்தாரைச்செடி இடையே உள்ள ஒற்றுமை, வேற்றுமை யாது?
4. உங்கள் சுற்றுப்புறத்தில் வளராத தாவரங்கள் யாது?
5. ஆலமரத்திற்கும், பனை மரத்திற்கும் உள்ள வேறுபாட்டை பட்டியலிடுக.



| | ஆலமரம் | பனைமரம் |
|---|---|---|
| உயரம் | | |
| இலைகள் | | |
| கிளைகள் | | |






Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

6. சீதா மற்றும் லட்சுமியின் வீடுகளைப் பாருங்கள். விடைகளைக் கூறுங்கள்.



சீதாவின் வீடு



லட்சுமியின் வீடு

- உங்களுக்கு யாருடைய வீடு மிகவும் பிடித்தது? எதற்கு?
- இரண்டு வீடுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
- லட்சுமியின் வீட்டு முன்னே இருப்பது போல் காலி இடம் இருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

7. சீதா தன் வீட்டில் செடிகளை வளர்க்கிறாள். வீடெல்லாம் சுத்தமாக வைத்திருப்பாள். நீங்கள் கீழ்க்கண்டவற்றில் என்ன செய்கிறீர்கள். (✓) செய்யுங்கள்.

* நான் வீட்டில் செடிகளை வளர்ப்பேன் ( )
* அவற்றிற்கு தினமும் நீர் ஊற்றுவேன். ( )
* கிளைகள் மற்றும் இலைகள் ஒடியாது பார்த்துக்கொள்வேன். ( )
* செடிகளை சுற்றி சுத்தம் செய்வேன். ( )
* விழுந்த இலைகளை அகற்றுவேன். ( )
* நான் பள்ளியில் செடிகளை தத்து எடுத்துள்ளேன். எச்சரிக்கையுடன் வளர்ப்பேன். ( )

8. வீட்டில் செடிகள் இருப்பது அவசியம். ஏனென்றால் ..................

**படம் வரையுங்கள். வண்ணமிடுங்கள்.**



1. கீழ்காணும் படங்களை காலியான கட்டத்தில் வரையுங்கள். வண்ணமிடுங்கள்.









SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

2. உங்கள் பகுதியில் மிக உயரமாக உள்ள ஒரு மரத்தின் படம் வரையுங்கள். அதற்கு வண்ணமிடுங்கள். அதனைப் பற்றி எழுதுங்கள்.



### தகவல் திறன்கள் - செயல் திட்டப்பணி

1. உங்கள் சுற்றுபுறத்தில் உள்ள செடிகள்/மரங்களில் எத்தனை பெயர்கள் உங்களுக்குத் தெரியும்? தெரிந்தவற்றை பெயரிடவும். தெரியாதவற்றை பெயர் தெரிந்தபின் குறிப்பிடவும்.

2. உங்கள் சுற்றுபுறத்தில் பூக்கள், பழங்கள், நிழல், மரப்பலகை ஆகியவற்றைத் தரும் மரங்கள் மற்றும் செடிகளின் பெயர்களைத் தெரிவியுங்கள்.

| பூப்பன | காய்ப்பன | நிழல்தருவன | மரப்பலகை தருவன |
|---|---|---|---|
| .................... | .................... | .................... | .................... |
| .................... | .................... | .................... | .................... |
| .................... | .................... | .................... | .................... |



### பாராட்டுதல்

1. ஹரிதாஹாரம் சமயத்தில் நீங்கள் நட்ட செடியை எவரேனும் மரக்கிளைகளை ஒடித்தால் உங்களுக்கு என்ன தோன்றும்? அப்போது நீங்கள் என்ன செய்வீர்கள்?

2. சலீமாவின் பள்ளியில் செடிகள் அதிகமுள்ளதல்லவா! விடுமுறை நாட்களில் கூட செடிகளுக்கு நீர் ஊற்றுவாள் எனவும் எச்சரிக்கையுடன் பார்த்து கொள்வாள் எனவும் தெரிந்துக்கொண்டீர்களல்லவா! அவ்வாறே நீங்களும் உங்கள் பள்ளியில் ஒரு செடியை நடுங்கள் அல்லது தத்தெடுங்கள். அவற்றிற்கு தினமும் நீர் ஊற்றுங்கள். ஒரு மாதத்திற்கு பின் என்ன மாற்றம் ஏற்பட்டது எனக் கூறுங்கள்.



### வினவுதல்

1. அகிலா நீர்த் தாவரங்களை குறித்து அறிய நினைத்தாள். இதற்காக குளத்தின் அருகில் சென்றாள். அங்கே ராமனுடன் பேசினாள். நீர்த் தாவரங்கள் குறித்து சில கேள்விகளைக் கேட்டாள். அகிலா என்னென்ன கேள்விகள் கேட்டிருப்பாள். அந்த கேள்விகளை எழுதுங்கள். ராமன் என்ன விடை தந்திருக்கலாம்? கூறுங்கள்.



### என்னால் செய்ய முடியுமா?



| | | |
|---|---|---|
| 1. | நம்மை சுற்றியுள்ள மரங்களில் மிக உயரமாக வளர்பவை, சிறியனவாக உள்ளவற்றை கூறுவேன். | ஆம்/இல்லை |
| 2. | மரங்களின் பயன்களை கூறுவேன் | ஆம்/இல்லை |
| 3. | நீர்த் தாவரங்கள், பாலைவனத் தாவரங்கள் குறித்து விவரிப்பேன். | ஆம்/இல்லை |
| 4. | பூக்கள், செடிகள், மரங்களின் படங்கள் ஆகியவற்றை வரைந்து வண்ணமிடுவேன். | ஆம்/இல்லை |
| 5. | செடிகள் குறித்தும் மரங்கள் குறித்தும் வினா எழுப்புவேன். | ஆம்/இல்லை |





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# 6. இலைகளுடன் நட்புறவு



நம்மைச் சுற்றி பலச் செடிகள் மற்றும் மரங்கள் உள்ளன. இவை பல வகைகளாக உள்ளதைப் போல இவற்றின் இலைகளும் பல வகைகளாக உள்ளன. வாழை இலைகளைப் பார்த்தீர்களா? எவ்வளவு பெரிதாக உள்ளதோ! தென்னை மர ஓலைகளையும் பார்த்தீர்களா? எப்படி உள்ளதோ! நீங்களே நினைத்துப் பாருங்கள். படத்தில் பல வகையான இலைகள் உள்ளன. இவற்றை உங்களால் அடையாளம் காணமுடியுமா?

* படத்தில் உள்ள இலைகளின் பெயர்களைக் கூறுங்கள். எழுதுங்கள்.

* இந்த இலைகள் அனைத்தும் ஒரே தோற்றத்தில் உள்ளனவா?

இலைகள் அனைத்தும் ஒரே தோற்றத்தில் இருக்காது. சில இலைகள் சிறியதாகவும், இன்னும் சிலஇலைகள் பெரியதாகவும், இவற்றின் நுனிப் பகுதிகளும் ஓரப்பகுதிகளும் வெவ்வேறாகவும் இருக்கும்.

SCERT TELANGANA






Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



கீழே உள்ள இலைகளை ஆய்வு செய்யுங்கள். அவற்றின் நுனிப்பகுதிகளும் ஓரப்பகுதிகளும் எவ்வாறு உள்ளனவோ பாருங்கள்.



இலைகளின் ஓரப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு இலைகளின் தோற்றங்கள் தட்டையானவைகளாகவும், உருண்டை வடிவங்களிலும், வாள் போன்று கூர்மையானதாகவும் காணப்படுகின்றன. சில இலைகளின் நுனிப்பகுதி மிக மெல்லியவைகளாக இருப்பது நமக்குத் தெரியும். இவற்றைப் போன்ற சில இலைகளின் பெயர்களைக் கூறுங்கள்.



நீங்கள் சில இலைகளை சேகரியுங்கள். அவற்றைக் கைகளால் தொட்டுப்பாருங்கள். மென்மையாக உள்ளனவா? கரடு முரடானதாக உள்ளனவா? ஆய்வு செய்து அட்டவணையில் எழுதுங்கள்.

| மென்மையாக உள்ள இலைகள் | கரடுமுரடாக உள்ள இலைகள் |
|---|---|
| | |



### வண்ண வண்ண இலைகள்

அப்துல்லா வீட்டில் பல வகையான குரோடன் செடிகள் உள்ளன. அவை பல வண்ணங்களில் உள்ளன. ஒரு நாள் அப்துல்லா வீட்டுக்கு அவன் நண்பன் வாசு வந்தான். அப்துல்லா வீட்டிலிருந்த மாமர இலைகளைக்கண்டான். அவற்றின் துளிர் விடும் இலைகள் சிவப்பு நிறத்திலும், முற்றிய இலைகள் பச்சை நிறத்திலும், உதிரும் நிலையிலுள்ள இலைகள் மஞ்சள் நிறத்திலும் இருப்பதைக் கண்டான். நீங்கள் எப்போதாவது பல வண்ணங்களிலுள்ள இலைகளைக் கண்டதுண்டா? அவற்றின் பெயர்களைக் கூறுங்கள்.







SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



நீங்கள் ஏதேனும் ஒரு இலையை எடுத்து ஆய்வு செய்யுங்கள். அதன் நிறம், வடிவம், மேல்பகுதி, கீழ்பகுதி ஆகியவற்றைப் பாருங்கள். அவை எப்படி உள்ளன. அவற்றைக் கையினால் தொடும்போது நீங்கள் என்ன உணர்ந்தீர்கள்? மென்மையாக இருந்தனவா? வாசனையை முகர்ந்து பாருங்கள். வாசனை எப்படி இருந்தது? இலையின் நுனிப் பகுதியைப்பாருங்கள். நுனிப் பகுதி எவ்வாறு இருந்தது? இது போல சில இலைகளைச் சேகரியுங்கள். அவற்றின் விவரங்களை கீழே உள்ள அட்டவணையில் எழுதுங்கள்.

**தெரியுமா உங்களுக்கு?**

பாதாம் மரத்தின் இலைகள் பல நிறங்கள் உள்ளவைகளாக இருக்கும்.



| இலையின் பெயர் | துளிர்விடும் இலையின் நிறம் | முதிர்ந்த இலையின் நிறம் | உதிர்ந்த இலையின் நிறம் | நுனி இலையின் நிறம் | மேல் பகுதி | கீழ் பகுதி | வாசனை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

## இலை உதிர்தல்



ஜான் படிக்கும் பள்ளியில் பல பெரிய மரங்கள் இருந்தன. விடுமுறை நாட்களில் மாணவர்கள் அனைவரும் அம்மரங்களின் நிழல்களில் விளையாடுவர். ஆனால் சில நாட்களுக்குப் பிறகு மரங்களிலிருந்து இலைகள் அனைத்தும் உதிர்வதை ஜான் கண்டான். இலைகள் உதிர்ந்துவிட்ட மரங்களைக் கண்டு ஜான் வருத்தமுற்றான். மரங்களில் மீண்டும் எப்போது இலைகளைக் காணமுடியும் என எண்ணத் தொடங்கினான்.

எந்தெந்த மரங்களில் இலைகள் உதிர்கின்றனவோ ஆய்வு செய்து கூறுங்கள்.

மரங்களில் இலைகள் எப்போது உதிர்கின்றன?

உதிர்ந்த இலைகள் என்ன ஆகின்றன?

இலைகள் உதிர்ந்துவிட்ட மரங்களில் எப்போது இலைகள் துளிர்விடுகின்றன?






SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



### உதிர்ந்த இலைகளை என்ன செய்யவேண்டும்?



மரங்களில் இலைகள் உதிர்வது இயற்கையானதே. உதிர்ந்த இலைகளால் நம் சுற்றுப்புறம் தூய்மை அற்றவையாகக் காணப்படுகிறது. ஆகவே அவற்றைக் கூட்டி சுத்தம் செய்ய வேண்டும்.

**தெரியுமா உங்களுக்கு?**

உதிர்ந்த இலைகள், குப்பைகள் போன்றவற்றை எரிப்பதால் வரும் புகை, உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கின்றது. ஆகவே குப்பைகளை உரக்குழியில் கொட்ட வேண்டும். எரிக்கக்கூடாது.

### கம்போஸ்ட் (உரக்குழி)

ஜான் படிக்கும் பள்ளியிலுள்ள பள்ளித் தூய்மைக் குழுவின் உறுப்பினர்கள் மரங்களிலிருந்து உதிரும் இலைகளையும், குப்பைகளையும் உரக்குழியில் கொட்டுவர். அது போல மதிய உணவு உண்டதும், சிதறிக்கிடக்கும் உணவுகளையும் உரக்குழியில் கொட்டுவர். பின்னர் குழியை மண்ணால் மூடுவர். இப்படி இவர்கள் ஏன் செய்கிறார்கள் தெரியுமா? கொட்டப்பட்ட இலைகளும், குப்பைகளும் சில நாட்களில் மக்கிவிடுகின்றன. மக்கிய இலைகளும், குப்பைகளும் நமக்கு உரங்களாகப் பயன்படுகின்றன. இந்த உரங்களை பள்ளியிலுள்ள தோட்டத்திற்கு பயன்படுத்துகின்றனர்.



உனது பள்ளியில் கீழே விழும் இலைகளை என்ன செய்வீர்கள்?

### உணவாகும் இலைகள் :

ஜான் பள்ளியிலிருந்து வீட்டுக்கு வந்ததும், தன் வீட்டு சமையல் அறையிலிருந்து வாசனை வருவதை உணர்ந்து சமையலறைக்குச் சென்றான். அப்போது அவன் அம்மா குழம்பு சமைத்துக்கொண்டு இருந்தார். குழம்பில் கறிவேப்பிலையும், கொத்தமல்லியும் சமையல் செய்து முடிக்கும் வேளையில் சேர்க்கப்பட்டன. அவற்றைச் சேர்த்தவுடன் குழம்பின் வாசனை அதிகரித்தது.

வாசனைத்தரும் இலைகளின் பெயர்களை கூறுங்கள், எழுதுங்கள்.

நாம் சமைக்கும் உணவுகளில் இலைகளைச் சேர்ப்பதால் உணவுகளுக்கு சுவையுடன், வாசனையும் அதிகரிக்கிறது. கீரைகள் நம் உடல் நலத்திற்கு மிகவும் ஏற்றவை. ஆகவே தான் நாம் பல வகையான கீரைகளை உண்கிறோம். கீரைகளை சமைக்கும் முன்பு அவற்றைக் கழுவி சுத்தம் செய்ய வேண்டும்.





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



கீழே உள்ள படங்களைப் பாருங்கள். அவை என்ன இலைகள் (அ) கீரைகள் என்று கூறுங்கள். அவற்றை எதற்குப் பயன்படுத்துவார்கள் என்று கூறுங்கள்.















**உங்களுக்குத் தெரிந்த சில கீரைகளின் பெயர்களைக் கூறுங்கள். எழுதுங்கள்.**

.......................... .......................... ..........................

.......................... .......................... ..........................

.......................... .......................... ..........................

இலைகளின் பெயர்களைக் கூறுங்கள் பார்க்கலாம்!

கொத்தமல்லி, புதினா, நீலகிரித்தைல இலைகள், புளி, எலுமிச்சை, வேப்பம், துளசி போன்ற இலைகளைச் சேகரியுங்கள். உங்களில் ஒருவரின் கண்களை துணியால் கட்டுங்கள். கட்டப்பட்டவரின் கைகளில், சேகரித்து வைத்துள்ள இலைகளைக் கொடுத்து சுவை பார்த்து அல்லது முகர்ந்து அந்த இலைகளின் பெயர்களைக் கூறவிடுங்கள். யார் அதிக இலைகளை அடையாளம் காண்கிறார் என்று கவனியுங்கள்.







SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com




## இலைகளால் அலங்காரம்

நீங்கள் இதுவரை இலைகளின் வடிவங்கள், நிறங்கள், சுவை, வாசனை போன்றவற்றை தெரிந்துக் கொண்டீர்கள் அல்லவா!

வீட்டை எப்போது இலைகளால் அலங்கரிப்பார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? உங்கள் வீட்டை எப்போதாவது இப்படி அலங்கரித்தார்களா?

தீபாவளி பண்டிகை அன்று கமலாவின் வீட்டை எவ்வாறு அலங்கரித்தார்கள் என்பதை கீழே உள்ள படத்தில் காணுங்கள்.



மேலே உள்ள படத்தில் வீட்டை எந்தெந்த இலைகளால் அலங்கரித்துள்ளனர்? பண்டிகை (அ) விழாக்காலங்களில் நீங்கள் உங்கள் வீட்டின் அலங்காரத்திற்கு எந்தெந்த இலைகளைப் பயன்படுத்துவீர்?

உங்கள் பள்ளியை இலைகளால் எப்போது அலங்கரிப்பீர்கள்? இதற்காக எந்தெந்த இலைகளைப் பயன்படுத்துவீர்?



## இலைகளால் அலங்காரம்



அன்று தேன்மொழியின் பிறந்தநாள். அதிகாலை எழுந்து புத்தாடை அணிந்து, கைகளுக்கு மருதாணி வைத்துக் கொண்டாள். பள்ளி மாணவர்கள் அனைவருக்கும், தன் கையிலுள்ள மருதாணியால் இடப்பட்ட சித்திரத் தோற்றங்களைக் காட்டினாள். மாணவர்கள் அனைவரும் தேன் மொழியைப் பாராட்டினர். மிகவும் அழகாக உள்ளது என்றனர்.





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com




நீங்களும் தேன்மொழியைப்போல கைகளுக்கு மருதாணியால் ஆன சித்திரத்தோற்றங்களை (டிசைன்) இட்டுக்கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்களா? அப்படியானால் உங்கள் அம்மாவிடம் கூறி கைகளுக்கு மருதாணி வைத்துக் கொள்ளுங்கள், உங்கள் நண்பர்களுக்குக் காட்டுங்கள்.

**இலைகளால் தோற்றங்களை உருவாக்குதல் :**

இலைகளை அலங்காரத்துக்காக பயன்படுத்துவதை நாம் தெரிந்துக்கொண்டோம் அல்லவா! இப்போது இலைகளால் நாம் விரும்பிய தோற்றங்களையும் உருவாக்க முடியும் என்பதைக் தெரிந்துக் கொள்ளலாம். ஜான் தன் பள்ளியில் உதிர்ந்த இலைகள் அனைத்தையும் சேகரித்தான். அவற்றை ஒரு வெள்ளைத்தாளின் மீது ஒட்டவைத்துப் பல தோற்றங்களை உருவாக்கினான். ஜான் உருவாக்கிய தோற்றங்களைப் கண்ட மற்ற மாணவர்கள் அவனை வெகுவாகப் பாராட்டினர். ஜான் இலைகளால் உருவாக்கிய பல உருவத்தோற்றங்களைப் பார்க்கலாமா!





இவற்றைக் போன்ற சில தோற்றங்களை நீங்கள் கண்டீர்கள் அல்லவா! நீங்களும் இலைகளைச் சேகரியுங்கள்! பல வகையான விலங்குகள் மற்றும் பறவைகளின் தோற்றங்களை உருவாக்குங்கள். அவற்றை அனைவருக்கும் காட்டுங்கள். காட்சிக்கு வையுங்கள்.





SCERT TELANGANA


Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



## இலைகளால் விளையாட்டு


காற்றாடியை தன் கையில் வைத்துக் கொண்டு ஜான் விளையாடுவதை கமலா பார்த்தாள். இக்காற்றாடியை எந்த கடையில் வாங்கினாய்? என கமலா ஜானிடம் கேட்டாள். இதை நானே தயார் செய்தேன் என்றான் ஜான். எனக்கும் காற்றாடி செய்ய கற்றுத்தா என கமலா கேட்டாள். காற்றாடியை ஜான் எப்படி தயார் செய்தான் என்பதைத் தெரிந்து கொள்வோமா!



(1) உலர்ந்த பனை ஓலையை எடுத்துக்கொண்டு ஒரு விரல் நீளத்தில் உடைத்துக் கொள்ள வேண்டும்.



(2) உடைத்த பனை ஓலையின் நடுவே ஒரு முள் அல்லது ஆணியால் குத்த வேண்டும்.



(3) பனை ஓலையில் குத்தப்பட்ட ஆணி (அ)முள்ளை ஒரு மிருதுவான குச்சிக்குள் குத்த வேண்டும்.

(4) தயாரித்த காற்றாடியுடன் வேகமாக ஓடினால் காற்றாடி விர் என சுற்றும்.



இலைகளுடன் இன்னும் என்னென்ன விளையாட்டுப் பொருட்களை தயாரிக்க முடியுமோ உன் நண்பர்களுடன் விவாதித்து தயார் செய்யவும்.



## முக்கியச் சொற்கள்

| | | |
|---|---|---|
| 1. நுனிகள் | 2. ஓரங்கள் | 3. கரடுமுரடாக |
| 4. மென்மையானதாக | 5. துளிர்விடும் இலைகள் | 6. உரக் குழிகள் |
| 7. உரம் | 8. முதிர்ந்த இலைகள் | 9. அலங்காரம் |

## நாம் கற்றவை

* இலைகள் பல வகைகளாக உள்ளன. சில இலைகள் மென்மையானதாகவும், சில இலைகள் கரடு முரடானதாகவும் உள்ளன. சில இலைகளில் நுனிகள் மெல்லியதாகவும், சில இலைகள் உருண்டையாகவும் உள்ளன.
* துளிர்விடும் இலைகள், சிவப்பு நிறத்திலும், முதிர்ந்த இலைகள், இலைப்பச்சை நிறத்திலும், பழுத்த இலைகள் மஞ்சள் நிறத்திலும் உள்ளன.
* கரிவேப்பிலை, கொத்தமல்லி, புதினா, சிறுகீரை, அறுகீரை போன்றவை உடல்நலத்திற்கு நல்லது. கீரைகளை சமைப்பதற்கு முன்பு நன்றாக கழுவவேண்டும்.
* வாழை, மா இலை போன்றவற்றை வீட்டு அலங்காரத்துக்காக பயன்படுத்துவர். மருதாணியை கைகளில் அழகுக்காக இட்டுக்கொள்வர்.
* உதிர்ந்த இலைகளை எரிக்காமல், உரக்குழியில் கொட்டி மண்ணால் மூடவேண்டும்.





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com


Downloaded from https:// www.studiestoday.com

## இதைச் செய்யுங்கள்



### புரிந்துக் கொள்ளுதல்

1. வாள் போல் கூர்மையாக உள்ள இலைகளின் பெயர்களைக் எழுதுங்கள்.
2. மந்தாரை மற்றும் தாமரை இலைகளுக்கிடையே உள்ள ஒற்றுமை மற்றும் வேற்றுமைகளை எழுதுங்கள்.



3. உணவாக பயன்படுத்தப்படும் நான்கு வகையான இலைகள் அல்லது கீரைகளின் பெயர்களை எழுதுங்கள்.
4. கீழே உள்ள அட்டவணையில் சில கீரைகளின் பெயர்கள் உள்ளன. அவை யாவை?

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொ | த் | து | ம | ல் | லி |
| வா | ரை | சி | ந் | சி | ர |
| ழை | கீ | று | தா | ம | ரை |
| இ | று | கீ | ரை | மா | வ |
| லை | அ | ரை | இ | லை | து |
| வே | ம் | பு | லை | இ | மா |

* இவற்றில் எவற்றை முகர்ந்து அடையாளம் காண முடியும்?
* அலங்காரத்துக்காக எவற்றைக் பயன்படுத்துவர்?

5. உங்களுக்குத் தெரிந்த சில இலைகளின் பெயர்களை எழுதி அவை எதற்குப் பயன்படுகிறது என எழுதுங்கள்.
6. உதிர்ந்த இலைகளை என்ன செய்ய வேண்டும்?

SCERT TELANGANA





Downloaded from https:// www.studiestoday.com


Downloaded from https:// www.studiestoday.com




### படம் வரையும் திறன்.

1. உனக்குப் பிடித்த இரண்டு இலைகளின் படங்களை வரைந்து அவற்றின் பெயர்களை எழுதுங்கள்.

2. கீழே உள்ள படங்களை வரைந்து வண்ணமிடுங்கள்.







### செய்தி அறியும் திறன் – செயல் திட்டம் :

உங்கள் நண்பர்களின் வீடுகளில் கடந்த இரண்டு நாட்களாக எந்த கீரைகளை பயன்படுத்தினார்கள் என்னும் விவரங்களைச் சேகரியுங்கள். அட்டவணையில் எழுதுங்கள்.

| வ.எண் | நண்பனின் பெயர் | கீரையின் பெயர் | கீரையை எதற்காக, எப்படி பயன்படுத்தினார்கள். (பொறியல், குழம்பு முதலியன) |
|---|---|---|---|
| | | | |

* எத்தனை பேர் வீடுகளில் கீரைகள் சமைக்கப்பட்டன?
* பெரும்பாலானவர்கள் எந்த கீரையை பயன்படுத்தினார்கள்?

2. இலைகளைப் பயன்படுத்தி வெவ்வேறு உருவங்களை உருவாக்கி அட்டைகளின் மேல் ஒட்ட வையுங்கள். வகுப்பறையில் காட்சிக்கு வையுங்கள்.

3. சில இலைகளை சேகரித்து நோட்டுப் புத்தகத்தில் ஒரு வாரம் வைத்திருங்கள். அட்டை மேல் ஒட்ட வைத்து வகுப்பறையில் காட்சிக்கு வையுங்கள்.





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



### செய்துப்பாருங்கள். என்ன நடந்ததோ கூறுங்கள்.

1. மந்தார இலையை அரைத்து இடதுகைக்கும், மருதாணியை அரைத்து வலதுகைக்கும் வைத்துக்கொள்ளுங்கள். இரண்டு மணி நேரம் கழித்துப்பாருங்கள். என்ன நடந்தது என்று கூறுங்கள்.
2. ஏதேனும் ஒரு இலையை பதினைந்து நாட்கள், பழைய நோட்டுப் புத்தகத்தில் வையுங்கள். பிறகு என்ன மாற்றம் நிகழ்ந்தது என்று எழுதுங்கள்.
3. சுற்றுப்புறங்களில் கிடைக்கும் சில இலைகளை வெந்நீரில் போடுங்கள். சிறிது நேரத்திற்கு பிறகு எடுத்துப்பார்த்து என்ன மாற்றம் நிகழ்ந்தது என்று கூறுங்கள்.



### பாராட்டுதல்

1. உங்கள் வகுப்பில் இலைகளைப் பயன்படுத்தி பல வகையான உருவங்களை நன்றாக தயார் செய்பவர் யார்? அவை நன்றாக உள்ளன என்று உங்களுக்கு எதனால் தோன்றியது?
2. உங்கள் வீடு / பள்ளியில் மரங்களிலிருந்து இலைகள் உதிர்கின்ற போது என்ன செய்வீர்கள்?



### வினவுதல்

1. மாலாவின் வீட்டுக்கு லீலா சென்றாள். மாலாவின் வீட்டில் பல வகையான செடிகளின் இலைகளைக் கண்டாள். லீலா சில இலைகளைக் கண்டு வியப்படைந்தாள். அந்த இலைகளைப் பற்றி மாலாவிடம் சில கேள்விகள் கேட்டாள். லீலா என்ன கேள்விகளைக் கேட்டிருப்பாள்? அக்கேள்விகளை எழுதுங்கள். மாலா என்ன பதில்களைக் கூறி இருப்பாள்? அவற்றையும் எழுதுங்கள்.



### என்னால் செய்ய முடியுமா?



| | | |
|---|---|---|
| 1. | இலைகளின் வகைகளுக்கேற்றவாறு வேறுபடுத்த முடியும். | ஆம் / இல்லை |
| 2. | இலைகளின் பயன்களை விளக்க முடியம். | ஆம் / இல்லை |
| 3. | பல வகையான இலைகளின் படங்களை வரைய முடியும். | ஆம் / இல்லை |
| 4. | இலைகள் தொடர்பான செய்திகளைச் சேகரித்து அட்டவணையில் எழுத முடியும். | ஆம் / இல்லை |
| 5. | கீரைகளை உண்பது உடல் நலத்துக்கு ஏற்றது தினமும் கீரைகளை உண்கிறேன். | ஆம் / இல்லை |
| 6. | இலைகள் பற்றிய கேள்விகளை என்னால் கேட்க முடியும் | ஆம் / இல்லை |





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# 7. நாம் எவற்றை உண்ணுகிறோம்



இரவி இரண்டு நாட்களாக பள்ளிக்கு வரவில்லை. இரண்டு நாட்களுக்குப் பிறகு பள்ளிக்கு வந்த அவனிடம், மதிய உணவு இடைவெளி சமயத்தில் இராமு, மேரி, ரோஜா ஆகியோர் பேசத் துவங்கினர்.



**ரோஜா :** இரவி! இரண்டு நாட்களாக பள்ளிக்கு ஏன் வரவில்லை?

**இரவி :** என் மாமாவின் திருமண நிகழ்ச்சியில் கலந்துக் கொள்ள நல்கொண்டா சென்றோம். அதனால் வரமுடியவில்லை.



**மேரி :** திருமணம் நன்றாக நடந்ததா?

**இரவி :** ஆம்! மிக நன்றாக நடந்தது. காலை, மதியம், இரவு ஆகிய மூன்று வேளைகளிலும் சுவையான விருந்து தான்.


**இராமு :** திருமண விருந்தில் என்னென்ன உணவு வகைகளை விரும்பி உண்டாய்?





**இரவி:** பலவகையான உணவு வகைகளை உண்டேன். இரவி திருமண விருந்தில் என்னென்ன உண்டிருப்பான் கீழே உள்ள அட்டவணையில் எழுதுங்கள்.

| காலை | மதியம் | மாலை | இரவு |
|---|---|---|---|
| | | | |





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



**நீங்கள் உங்கள் வீட்டில் நாள்தோறும் உண்ணும் உணவை அட்டவணையில் எழுதுங்கள்.**

| காலை | மதியம் | மாலை | இரவு |
|---|---|---|---|
| | | | |

நீங்கள் தினமும் உண்ணும் உணவை எழுதுங்கள்?

அதே போல உங்கள் நண்பர்கள் எப்போது என்னென்ன உணவை உண்பார்களோ தெரிந்துக்கொண்டு அட்டவணையில் பதிவு செய்யுங்கள்.

| நண்பன் பெயர் | காலை | மதியம் | இரவு |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

பெரும்பாலானவர்கள் காலையில் உண்ணும் உணவு எது? அதுபோல மதியம், இரவு உண்ணும் உணவு எது?

### நாம் ஏன் உண்ண வேண்டும்?

தாமதமாக படுக்கையிலிருந்து எழுந்த இரவி, அவசரமாக குளித்துவிட்டு பள்ளிக்குச் சென்றான். பள்ளியில் பட்டினியாக இருந்த இரவிக்கு உடல்நிலை எப்படி இருந்திருக்கும்?

நீங்கள் எப்போதாவது உணவு உண்ணாமல் பள்ளிக்குச் சென்றீர்களா?
உங்கள் உடல் நிலை எப்படியிருந்தது?

நாம் எதற்காக உணவு உண்ணவேண்டும் தெரியுமா? நாம் தினந்தோறும் பல வேலைகளைச் செய்கிறோம். நடத்தல், விளையாடுதல், ஓடுதல், தண்ணீர் சுமந்து வருதல் போன்ற பல வேலைகளுக்குத் தேவையான சக்தி நாம் உண்ணும் உணவிலிருந்து கிடைக்கிறது.



### நாம் உண்ணும் உணவு எங்கிருந்து கிடைக்கிறது?

நாம் உண்ணும் உணவு எங்கிருந்து கிடைக்கிறது தெரியுமா? தாவரங்களிலிருந்து காய்கறிகள், பழங்கள், அரிசி, கோதுமை போன்றவை கிடைக்கின்றன. விலங்குகளிடமிருந்து நமக்கு பால், முட்டை, மாமிசம் போன்றவை கிடைக்கின்றன.

அடுத்த பக்கத்தில் உள்ள உணவு வகைகளின் படத்தைப் பார்த்து அவற்றின் பெயர்களைக் கூறுங்கள். விலங்குகளிடமிருந்து கிடைப்பனவற்றிற்கு ⬭ என்ற குறியும், தாரவங்களிலிருந்து கிடைப்பனவற்றிற்கு ☐ என்ற குறியும் இடுங்கள்.





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



**தாவரங்களிடமிருந்து கிடைப்பவை எவை? விலங்குகளிடமிருந்து கிடைப்பவை எவை?**






















SCERT TELANGANA





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



இரவிக்கு, அம்மா உணவு பரிமாறினார். உணவில் கோழிக்கறி, முட்டைக் குழம்பு பரிமாறப்பட்டது. இரவி தன் அம்மாவை முட்டைக் குழம்பை எப்படி சமைத்தாய்? என்று கேட்டான். கோழி முட்டைகளுடன் பச்சை மிளகாய், எண்ணெய், மஞ்சள் தூள், பூண்டு, தக்காளி போன்றவற்றைச்சேர்த்து கோழி முட்டைக் குழம்பு சமைத்ததாகக் கூறினாள். இவற்றில் கோழி முட்டை; கோழியிலிருந்து கிடைக்கிறது. ஆனால் பச்சை மிளகாய், மஞ்சள், பூண்டு, தக்காளி போன்றவை தாவரங்களிலிருந்து கிடைக்கிறது. கீழே உள்ள அட்டவணையில் உணவுப் பொருட்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவை எவற்றிலிருந்து கிடைக்கிறது என்பதை அவற்றிற்கு ✓ குறியிட்டு அட்டவணையில் காட்டவும்.

| உணவுப் பொருள் | விலங்குகளிடமிருந்து | தாவரங்ளிலிருந்து | இவை இரண்டிலிருந்தும் |
|---|---|---|---|
| சோறு | | ✓ | |
| கோழிக்கறி பிரியாணி | | | ✓ |
| பருப்பு | | | |
| சாம்பார் | | | |
| ஆம்லெட் | | | |
| பாகற்காய் குழம்பு | | | |
| உருளைக்கிழங்கு குழம்பு | | | |
| நெய் | | | |
| கேக் | | | |
| ரொட்டி | | | |
| தயிர் | | | |
| பால் | | | |
| தயிர் பச்சடி | | | |
| மாங்காய்/ஊறுகாய்/ பச்சடி | | | |
| மீன் குழம்பு | | | |
| கோழிக்கறி குழம்பு | | | |

SCERT TELANGANA






Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



## நாம் ஏன் உணவு உண்கிறோம்?

உணவுப் பொருட்கள் எவற்றிலிருந்து கிடைக்கிறது என்பதை நாம் தெரிந்துக் கொண்டோம் அல்லவா! இப்போது நாம் சமைத்து உண்ணும் உணவுப்பொருட்கள் எவை. சமைக்காமல் பச்சையாக உண்ணும் உணவுப் பொருட்கள் எவை, என்பதைத் தெரிந்துக்கொள்ளலாமா!



மேரி பள்ளியிலிருந்து மாலையில் வீடு திரும்பினாள். அவளுடன் நண்பர்கள் ரோஜா, ரவி ராமு ஆகியோரும் வந்தனர். உண்பதற்கு ஏதேனும் உள்ளதா? என்று மேரி கேட்டாள். அலமாரியில் உள்ளது. நீங்கள் விரும்பியதை எடுத்து உண்ணலாம் என்று மேரியின் அம்மா கூறினார். அலமாரியில் மேரி என்ன உணவுப் பொருட்களைப் பார்த்திருப்பாள்? என்னென்ன தின்றிருப்பார்களோ கற்பனை செய்துப் பாருங்கள். அட்டவணையில் எழுதுங்கள்.


| பார்த்தவை | உண்டவை | நீ விரும்பும் உணவு |
|---|---|---|
| | | |

நாம் நாள்தோறும் சோறு, குழம்பு, பருப்பு, வேர்கடலை, பால் போன்றவற்றை உண்கிறோம். அவற்றில் சமைத்து உண்பது, சமைக்காமல் பச்சையாக உண்பது போன்ற உணவுப்பொருட்கள் இருக்கும் அல்லவா! நீங்கள் உண்ணும் உணவுப்பொருட்களில் சமைத்து உண்ணும் உணவுப்பொருட்கள் மற்றும் சமைக்காமல் பச்சையாக உண்ணும் உணவுப்பொருட்கள் எவை என்பதை அட்டவணையில் எழுதுங்கள்.



| சமைத்து உண்பவை | பச்சையாக உண்பவை | சமைத்து (அ) பச்சையாக உண்பவை |
|---|---|---|
| | | |





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

சில உணவுப்பொருட்களை நாம் சமைத்தும், சிலவற்றை சமைக்காமல் பச்சையாகவும் உண்கிறோம். சில உணவுப்பொருட்களை மட்டும் நாம் ஏன் சமைத்தபிறகு உண்கிறோம்? எண்ணிப்பாருங்கள்.

உணவுப் பொருட்களை சமைப்பதால் சுவை கிடைக்கிறது. எளிமையாக ஜீரணமாகின்றன. சமைக்காமல் உண்ணும் உணவுப் பொருட்களில் சில ஜீரணமாகாது.



உணவுப்பொருட்களை வேகவைத்து உண்ண வேண்டும். ஆனால், அதிகமாக வேக வைக்கக்கூடாது. அதிகமாக வேகவைத்தால், அப்பொருட்களிலுள்ள சத்து நமக்குக் கிடைக்காது.

### எவற்றில் சமைக்கிறோம்?

சோறு, குழம்பு, பொரியல் போன்றவற்றை சமைப்பதற்கு நமக்கு சமையல் பாத்திரங்கள் மிக அவசியம். உணவு சமைப்பதற்கு உங்கள் வீட்டில் என்னென்ன பாத்திரங்கள் உள்ளன என்பதைப் பார்த்தீர்களா!

கீழே உள்ள படத்தைப் பாருங்கள். இதில் பலவகையான சமையல் பாத்திரங்கள் உள்ளன. படத்தில் புள்ளி இடப்பட்டுள்ள பாத்திரங்களுக்கு நீங்கள் விரும்பும் வண்ணங்களை இடுங்கள். வண்ணங்களை இட்ட பிறகு நீங்கள் காணும் பாத்திரங்களைப் பெயரிடுங்கள்.



மேலே என்னென்ன பாத்திரங்கள் காணப்படுகின்றன? அவைகளின் பெயர்களைக் கூறுங்கள். இப்பாத்திரத்தில் என்ன செய்வார்கள்?



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



இதுபோன்ற சமையல் பாத்திரங்கள் உங்கள் வீட்டிலும் உள்ளன அல்லவா! அவற்றின் பெயர்களை அட்டவணையில் எழுதுங்கள்.

| சமையல் பாத்திரத்தின் பெயர் | சமைக்கப்படும் உணவின் பெயர் |
| --- | --- |
| | |




கீழே உள்ள சமையல் பாத்திரங்களை கண்டறிக. இவற்றைப் பயன்படுத்தி என்னென்ன உணவுப் பொருட்களை சமைப்பர்? கூறுங்கள்.









SCERT TELANGANA



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## எல்லாவற்றையும் ஒரே முறையில் சமைக்கிறோமா?



குமரன் சமையலறைக்குச் சென்றான். சமையலறையில் அப்பா கத்தரிக்காய்களை சிறு சிறு துண்டுகளாக வெட்டிக்கொண்டு இருந்தார். வெட்டிய துண்டுகளை தண்ணீர் ஊற்றப்பட்ட கிண்ணத்தில் போட்டார். என்ன குழம்பு செய்கிறீர்கள்? என்று கேட்ட குமரனிடம் கத்தரிக்காய் குழம்பு சமையல் செய்வதாக அப்பா கூறினார். குமரனும் தக்காளி, பச்சை மிளகாய் போன்றவற்றைக் கழுவிக்கொடுத்தான். தக்காளி, பச்சைமிளகாய், கொத்துமல்லி போன்றவற்றை சிறு சிறு துண்டுகளாக வெட்டி கத்தரிக்காய் குழம்பில் போட்டனர். இப்போது பறிமாற கத்தரிக்காய் குழம்பு தயாராக உள்ளது.

உங்கள் வீடுகளில் கத்தரிக்காய் குழம்பை எவ்வாறு சமைப்பர்? கூறுங்கள்.

எல்லா உணவுப் பொருட்களையும் ஒரே முறையில் சமைக்க மாட்டார்கள். வெவ்வேறு உணவுப் பொருட்கள் வெவ்வேறு முறைகளில் சமைக்கப்படுகின்றன. கீழே உள்ள உணவுப்பொருட்களைப் பாருங்கள். இவற்றை எவ்வாறு சமைப்பார்களோ தெரிந்துகொண்டு கூறுங்கள்.











அரிசி, பருப்பு போன்ற உணவுப்பொருட்களை வேக வைப்பர். பஜ்ஜி, சமோசா போன்றவற்றை வாணலியில் ஊற்றப்பட்ட எண்ணெயில் பொரிப்பர். மக்காச்சோளம், ரொட்டி, மாமிசம் போன்றவற்றை நெருப்பில் சுட்டு உண்பர். இட்லியை ஆவிமூலம் வேக வைப்பர். மாங்காய்ப் பச்சடி, தயிர் பச்சடி போன்றவற்றை வேகவைக்காமலேயே அரைத்து உண்பர். இது போல பல வகையான உணவுப் பொருட்களை சமைத்தும், சிலவற்றை சமைக்காமல் பச்சையாகவும் உண்கிறோம். உங்கள் வீட்டில் உணவுப்பொருட்களை எவ்வாறு சமைக்கிறார்கள் என்பதைக் கூறுங்கள்.





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

### தெரியுமா உங்களுக்கு?







* கீரைகள் மற்றும் காய்கறிகளை நன்றாகக் கழுவிய பிறகு சிறு துண்டுகளாக வெட்டி சமைக்க வேண்டும்.
* கீரைகள் மற்றும் காய்கறிகளை துண்டுகளாக்கிய பிறகு கழுவினால் அவற்றிலுள்ள சத்துப் பொருட்கள் வீணாகப் போகின்றன.
* சமைக்கும் முன்பு அரிசியை மீண்டும் மீண்டும் பலமுறை கழுவக்கூடாது.
* சோறு சமைக்கும் போது கஞ்சியை வடிக்காமல் சமைக்க வேண்டும். கஞ்சியை வடித்தால் சத்து வீணாகிவிடும்.
* உணவில் நாள்தோறும் பருப்பு மற்றும் கீரைகளை சேர்த்துக்கொள்ள வேண்டும்.
* காய்கறிகள், பருப்புகள் போன்றவற்றை அதிக நேரம் வேக வைக்கக் கூடாது.
* கேரட், பீட்ரூட், முள்ளங்கி, தோசைப்பழம், கொத்தமல்லி, புதினா போன்றவற்றை பச்சையாக உண்ணலாம்.

### முக்கியச் சொற்கள்

| | | |
|---|---|---|
| 1. உணவு | 2. சமைத்து உண்பவை | 3. பச்சையாக உண்பவை |
| 4. சீரணம் | 5. சமையல் பாத்திரங்கள் | 6. ஊட்டச்சத்துக்கள் |

### நாம் கற்றவை

* உணவுப் பொருட்களால் நமக்கு ஊட்டச்சத்துக்கள் கிடைக்கின்றன.
* தாவரங்களிலிருந்தும், விலங்குகளிடமிருந்தும் நமக்கு உணவுகள் கிடைக்கின்றன.
* சில உணவுப் பொருட்களை சமைத்தும், சிலவற்றை பச்சையாகவும் உண்கிறோம்.
* சமைப்பதால் உணவில் சுவை கூடுகிறது. விரைவாக சீரணமாகிறது.
* ஒரே உணவுப்பொருள் பல முறைகளில் சமைக்கப்படுகிறது.
* குக்கர், மைக்ரோ ஓவன் போன்றவற்றை தற்போதைய காலங்களில் சமையலுக்குப் பயன்படுத்துகின்றனர்.
* எல்லா உணவுப்பொருட்களும் ஒரே முறையில் சமைக்கப்படுவதில்லை. வேகவைத்தல், அவித்தல், சுடுதல் போன்ற முறைகளில் சமைக்கப்படுகின்றன. உணவுப் பொருட்களை சமைப்பதற்கு பல்வேறு சமையல் பாத்திரங்கள் தேவைப்படுகின்றன.
* சமைப்பதற்கு முன்பு காய்கறிகளையும், கீரைகளையும் நன்றாகக் கழுவ வேண்டும்.





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## இவற்றைச் செய்யுங்கள்



### புரிந்துக் கொள்ளுதல்

1. உணவு உண்ணவில்லை என்றால் என்ன ஆகும்?
2. சமைக்காமல் உண்ணும் உணவுப் பொருட்களுக்கு எடுத்துக்காட்டுகளை எழுதுக.
3. கீழே உள்ளவற்றை வகைப்படுத்தி அட்டவணையில் எழுதுக.

   பூரி, சப்போட்டா, பேரீச்சம் பழம், முட்டை, கோழிக்கறி, வெண்டைக்காய், மீன், பாதாம்பருப்பு, கரும்பு, கத்தரிக்காய், பாயாசம், எலுமிச்சை பழரசம், மாங்காய், துவரம்பருப்பு, சிறுகீரை, கொத்துமல்லி, முந்திரிப்பருப்பு, மிளகாய், வாழைக்காய், கொய்யாப்பழம், தர்பூசணி, சர்க்கரை வள்ளிக்கிழங்கு, பூண்டு.

| சமைத்து உண்பவை | பச்சையாக உண்பவை |
|---|---|
| | |

4. சமைத்தும், பச்சையாகவும் உண்ணக்கூடிய உணவுப்பொருட்கள் யாவை?
5. அரிசி மற்றும் கோதுமையால் சமைக்கப்படும் உணவுப் பொருட்கள் யாவை?
6. உங்கள் வீட்டில் என்னென்ன சமையல் பாத்திரங்கள் உள்ளன?



### படம் வரைந்து வண்ணமிடுங்கள்.

1. உங்கள், வீட்டில் சோறு எந்த பாத்திரத்தில் சமைப்பர்? அதே போல காய்கறி, பஜ்ஜி, போன்றவற்றை எந்த பாத்திரங்களில் சமைப்பர்? படம் வரையவும்.
2. நீங்கள் விரும்பும் பழங்களின் படம் வரைக.





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



## செய்தி அறியும் திறன் - செயல் திட்டம்

1. உங்கள் நண்பர்கள் மூன்று பேரிடம், அவர்கள் நேற்றைய தினம் காலை, மதியம், இரவு உண்ட உணவுப் பொருட்களின் விவரங்களைச் சேகரியுங்கள். அட்டவணையில் எழுதுங்கள்.

| வ.எண் | நண்பனின் பெயர் | காலை உண்ட உணவு | மதியம் உண்ட உணவு | இரவு உண்ட உணவு |
|---|---|---|---|---|
| | | | | |

* அனைவரும் உண்ட உணவுப் பொருட்கள் எவை?
* இரவு வேளையில் பெரும்பாலானவர்கள் உண்ட உணவு எது?
* காலையில் உணவு எடுத்துக்கொள்ளாதவர்கள் எத்தனை பேர்?

2. உங்கள் வீட்டில் சோறு, பருப்புக் குழம்பு போன்றவற்றை எவ்வாறு சமைக்கின்றனர் என்னும் விவரம் அறியுங்கள். சமையலை வரிசைப்படுத்தி எழுதி அட்டையின் மேல் ஒட்டவைத்து காட்சிக்கு வையுங்கள்.



## வினவுதல்

1. மேரி, இராணியின் வீட்டுக்குச் சென்றாள். இராணியின் அம்மா சமையல் செய்வதை மேரி நேரில் கண்டாள். சமையல் குறித்து பல கேள்விகளைக் கேட்டாள். அவள் என்னென்ன கேள்விகளைக் கேட்டிருப்பாள்? இராணியின் அம்மா, மேரிக்கு காய்கறிகள் சமைப்பது குறித்து பல குறிப்புகளை கொடுத்தாள். இராணியின் அம்மா கொடுத்த குறிப்புகள் என்னவாக இருக்கும்?



## என்னால் செய்ய முடியுமா?



| | | |
|---|---|---|
| 1. | உணவை எதற்காக உண்ணவேண்டும் விளக்க முடியுமா. | ஆம்/ இல்லை |
| 2. | சமைத்தும், பச்சையாகவும் உட்கொள்ளும் உணவுப் பொருட்களை என்னால் வகைப்படுத்த முடியும். | ஆம்/ இல்லை |
| 3. | சமையல் பாத்திரங்கள் மற்றும் காய்கறிகளின் படங்களை என்னால் வரைய முடியும். | ஆம்/ இல்லை |
| 4. | சமையல் முறைகளை என்னால் விளக்க முடியும். | ஆம்/ இல்லை |
| 5. | ஊட்டச்சத்துக்கள் வீணாகாமல் உணவை எவ்வாறு சமைக்க முடியும் என என்னால் சொல்லமுடியும். | ஆம்/ இல்லை |
| 6. | உணவுப் பொருட்கள் பற்றிய கேள்விகளை என்னால் கேட்க முடியும். | ஆம்/ இல்லை |





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# 8. உணவு பழக்க வழக்கங்கள்



தசரா விடுமுறை நாட்களில் மாணவர்கள், ஐதராபாத்திற்கு இன்ப சுற்றுலா மேற்கொண்டனர். அங்கே வெவ்வேறு பகுதிகளிலிருந்து வந்திருந்த மாணவர்களையும் சந்தித்தனர். அவர்களிடையே நட்பு ஏற்பட்டது. மிருகக் காட்சிசாலையில் ஏராளமான விலங்குகளை பார்த்தனர். மதியவேளையில் மாணவர்கள் அனைவரும் ஓரிடத்தில் சேர்ந்தனர். வீட்டிலிருந்து கொண்டு வந்த உணவு பொருட்களை பிரித்து சாப்பிட்டனர். அவர்கள் என்னென்ன சாப்பிடுகின்றனர் என்று பார்க்கலாமா!




யார் யார் என்னென்ன சாப்பிடுகின்றனர் என அறிந்தோமல்லவா! சரி, உங்கள் பகுதியில் மக்கள் என்னென்ன உணவு பொருட்களை உண்கின்றனர்?





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



நம் மாநிலத்தில் மலைப்பகுதிகளிலும், காட்டுப்பகுதிகளிலும் வசிப்பவர்கள் காட்டில் கிடைக்கும் விதவிதமான கிழங்குகள், மாங்கனிகள், பலாப்பழங்கள், நாவல் பழங்கள் போன்றவற்றை சாப்பிடுவர். அங்கே பயிரிடப்படும் உணவு பொருள்களைப் பொறுத்தே அவரவர்களின் உணவு பழக்க வழக்கம் இருக்கும்.

ராஜஸ்தான் மாநிலத்தில் சோளம் அதிகமாக பயிரிடப்படுகின்றன. அவர்கள் சோளரொட்டிகளையே சாப்பிடுவர். அவ்வாறே டெல்லி, குஜராத் மத்திய பிரதேசம், பீகார் முதலிய மாநிலங்களில் கோதுமையால் செய்த ரொட்டிகளையும், பூரிகளையும் அதிகமாக சாப்பிடுவர். தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரமாநிலம் முதலிய மாநிலங்களில் அரிசி சாதம் உண்பர். கேரளா மாநிலத்தில் சாதத்தோடு மீன்களையும் அதிகம் விரும்பி உண்பர். தெலுங்கானா மக்கள் அரிசி உணவை விரும்பி உண்பர்.

ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு வகையான உணவு பழக்கவழக்கங்கள் உள்ளது. அதுபோன்றே வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறான பயிர்களை பயிரிட்டு உண்பர். பண்டிகை காலங்களிலும், திருமண காலங்களிலும், பிறந்த நாள் விழாக்களிலும் மற்றும் உள்ளூர் விழாக்காலங்களிலும் விதவிதமான பயிர்களைப் பயிரிடுவர். எவ்வப்போது என்னவகையான உணவுகள் உண்பார்களோ குறிப்பிடுங்கள்.

| பண்டிகைகள், திருமணங்கள், முக்கிய நாட்கள் | செய்யப்படும் சிறப்பு உணவு வகைகள் |
|---|---|
| | |

உங்கள் உறவினர்களை கேட்டு அவர்கள் என்னென்ன உணவுகள் செய்துக் கொள்கின்றனர் என்பதை குறிப்பிடுங்கள்.





மாணவர்கள் அனைவரும் உண்ட பிறகு,விலங்குகளை பார்க்க சென்றனர்.

**சரத்** : சுஜாதா! அதோ அந்த புறாக்களை பார். விதைகளை தின்கிறது.

**சுஜாதா** : ஆம்! அத்தனை புறாக்களும் ஓரிடத்தில் சேர்ந்து அருமையாக தின்கின்றன!





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



ரகு : அலி! அதோ அந்த யானையை பார். அது என்ன தின்கிறது?

அலி : அம்மோ! யானை பெரிய பெரிய கரும்புகளை தும்பிக்கையால் எடுத்து தன் வாயில் வைத்து மளமளவென தின்கிறதே!


இன்னும் மற்ற விலங்குகளை பார்க்கலாம் வாருங்கள்.



**விலங்குகளையும் அவை உண்ணும் உணவுகளையும் கீழ்காணும் அட்டவணையில் காட்டுக.**



| விலங்கு/பறவைபெயர் | உண்ணும் உணவு |
|---|---|
| பசு | புல் |



நம்மைசுற்றி ஏராளமான விலங்குகள், பறவைகள் உள்ளன. நம்மை போலவே அவற்றிற்கும் கூட உணவு அவசியம். எல்லா விலங்குகளும் ஒரே வகையான உணவை சாப்பிடுவதில்லை. அவற்றிற்கு வெவ்வேறு வகையான உணவு பழக்கங்கள் உண்டு. விலங்குகள் மற்றும் பறவைகள் பலவகையான உணவு பொருட்களை உண்ணுகின்றன. விதைகள், செடிகள், மாமிசம், தேன், பால் இவ்வாறு பலவகையான உணவு வகைகளை உண்ணுகின்றன.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



சோனியின் வீட்டில் அவர்களின் தாய், தந்தை, அண்ணன் ஆகியோர் உள்ளனர். அவர்கள் எவ்வாறு உணவு உண்கின்றனர் என்பதைப் பாருங்கள்.



ரங்கனின் வீட்டில் அவனின் தாய், தந்தையுடன் மாமாவும் உள்ளார். அவர்கள் எவ்வாறு உணவு உண்கின்றனர் என்பதை பாருங்கள்.



மேலே உள்ள இரண்டு படங்களையும் பார்த்தீர்களல்லவா! சோனியாவின் வீட்டில் உள்ளவர்கள் எவ்வாறு உணவு உண்கின்றனர்? ரங்கன் வீட்டில் எவ்வாறு உண்கின்றனர்?

எந்தவகையில் உணவு உட்கொள்வது மிகச்சிறந்தது? ஏன்?

குடும்ப அங்கத்தினர்கள் எவ்வெப்போது கலந்து உண்பார்கள்? ஏன் கலந்து உண்ணவேண்டும்?





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



பண்டிகைக்கு சோனியின் வீட்டிற்கு உறவினர்கள் வந்திருந்தனர். உறவினர்கள் அனைவருக்கும் ஒரே வகையான உணவு ஏற்பாடு செய்திருந்தனர். இவர்களுக்கு சோனியின் அண்ணன், உணவு வகைகளை பரிமாறினார்.



மேற்கண்ட படத்தினை போன்றே எப்பொழுது ஏராளமானோர் கலந்து உண்பர்?
ஏராளமானோர் கலந்து உண்ணும் போது நீங்கள் என்ன வேலைகளை செய்வீர்கள்?

இயல்பாகவே திருமணங்கள், பிறந்த நாள் விழாக்கள், பண்டிகை காலங்களில் அனைவரும் கலந்து உண்பர். கலந்து உண்பதால் நாமெல்லாம் ஒன்றே எனும் எண்ணம் ஏற்படும்.



### அனைவரும் அனைத்து உணவு வகைகளையும் உண்பார்களா?

மகேஷ் பள்ளியிலிருந்து வீடு திரும்பும்போது சுட்ட மக்காச்சோளம் ஒன்றை கொண்டுவந்தான். வீட்டிற்கு வந்தவுடனேயே ஊஞ்சலில் ஆடிக்கொண்டிருந்த தனது தம்பிக்கு கொடுக்கச் சென்றான். சிறுபிள்ளைகளுக்கு சோளங்களைத் தரக்கூடாது என்றார் தாய். அப்படியானால் தாத்தாவிற்குத் தருகிறேன் என்று அவரிடம் ஓடினான். சோளத்தை உண்ணுங்கள் தாத்தா! என்றான். தாத்தாவோ "எனக்கு வேண்டாம், என்னால் தின்ன முடியாது," என்றார்.

தம்பிக்கு சோளத்தை தரக்கூடாது என தாய் ஏன் கூறினாள்?
தாத்தா சோளத்தை ஏன் தின்னமாட்டேன் என்றார்?
உங்கள் வீட்டில் மக்காசோளத்தை தின்பவர்கள் யார் யார்?





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



சிறுபிள்ளைகளும், வயதானவர்களும் வேறு என்னென்ன வகைகளை உண்ணமாட்டார்கள்? வயதானோர் என்னென்ன தின்பர்? சிறுபிள்ளைகள் என்னென்ன தின்பர்?

| | உண்பவை | உண்ன முடியாதவை |
|---|---|---|
| சிறுபிள்ளைகள் | | |
| வயதானோர் | | |
| மற்றவர்கள் | | |

சிறு பிள்ளைகளுக்கு பற்கள் இருக்காது. மென்றும் தின்ன முடியாது. ஆதலால், பால் குடிக்கின்றனர். மென்மையான உணவுகளையே அவர்களுக்கு கொடுப்பார்கள். அவ்வாறே பற்களில்லாத கிழவர்கள் கடினமானவற்றை மென்று தின்னமுடியாது. இவ்வாறு வயதை பொறுத்து கூட உணவு பழக்கவழக்கங்கள் வேறுபட்டிருக்கும். நல்ல உணவுகளை உட்கொள்வது எவ்வளவு முக்கியமானதோ, நல்ல பழக்கவழக்கங்கள் இருப்பது கூட அவ்வளவு முக்கியமானதே. உண்ணும் முன் தவறாது சோப்பினால் கை, கால்களை கழுவவேண்டும். உண்டபிறகு அந்த இடத்தை சுத்தம் செய்யவேண்டும்.

## முக்கியச் சொற்கள்

1. கலந்துண்பது
2. உணவு பொருட்கள்
3. உணவு பழக்கவழக்கங்கள்
4. கை, கால்களை கழுவுதல்

## நாம் கற்றவை

* ஒரு பகுதி மக்களின் உணவு பழக்கவழக்கங்கள், அங்கு விளையும் பயிர்கள், கிடைக்கும் உணவு பொருட்கள் மீது ஆதாரப்பட்டிருக்கும்.
* பண்டிகை, திருமண காலங்களில் தனிப்பட்ட உணவுவகைகளை தயாரிப்பர்.
* விலங்குகள் மற்றப் பறவைகளுக்கு கூட உணவுப்பொருட்கள் அவசியம், அவற்றிற்கு பலவகையான உணவு பழக்கங்கள் உண்டு.
* வீட்டில் உள்ளோர் அனைவரும் கலந்துண்ண வேண்டும். இதனால் அனைவரும், அனைத்து உணவுபொருட்களையும் தேவையான அளவு சாப்பிடமுடியும். கலந்து உண்டால் இன்பமடையலாம்.
* வயதை பொறுத்து உணவு பழக்கவழக்கம் மாற்றமடையும்.
* உண்பதற்கு முன் கை, கால்களை சோப்பினால் கழுவவேண்டும்.





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## இதை செய்யுங்கள்



### புரிந்துகொள்ளுதல்


1. உங்கள் பகுதியில் எந்தவகை உணவுகளை அதிகம் உண்பார்கள்?
2. புல் தின்னும் விலங்குகள் மற்றும் கொட்டைகளை தின்னும் விலங்குகளுக்கு உதாரணம் தருக?
3. உணவு விலை மதிப்பற்றது, உணவு வீணாவதை தடுக்க என்ன செய்ய வேண்டும்?
4. நாயின் உணவு பழக்க வழக்கத்திற்கும் ஆட்டின் உணவு பழக்க வழக்கத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடு யாது?
5. அனைவரும் கலந்துண்பது எந்தவகையில் சிறந்தது?
6. கீழ்காணும் உணவு பழக்கவழக்கங்கள் உங்களுக்கு இருந்தால் டிக் செய்யுங்கள்.

- * உணவு உண்ணும் முன்பு மற்றும் உண்டபின்; கை, கால்களை சுத்தமாக கழுவுவேன். ☐
- * உண்ணும் முன்பு, உண்டபின் தட்டை சுத்தமாக கழுவுவேன். ☐
- * உண்ணும்போது, உணவு பொருட்களை கீழே கொட்டமாட்டேன் ☐
- * உணவுப் பொருட்கள் உள்ள பாத்திரங்களை மூடிவைப்பேன். ☐
- * உணவுப்பொருட்களை வீணாக்கமாட்டேன். ☐
- * சாலைகளில் அசுத்தமான இடங்களில் விற்கும் பொருட்களை வாங்கமாட்டேன், தின்ன மாட்டேன். ☐
- * அனைவருடனும் கலந்து உண்பேன். ☐

### படம் வரையுங்கள், வண்ணமிடுங்கள்.



கீழ்காணும் படத்தை பாருங்கள். அருகேயுள்ள கட்டத்தில் வரையுங்கள். அதைப்பற்றி எழுதுங்கள்.








SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



## தகவல் திறன்கள் – செயல்திட்டப்பணி.

1. உங்கள் நண்பர்கள் ஐவரை கேட்டு, அவர்கள் வீட்டில் எவ்வப்போது கலந்து உண்ணுகிறார்கள் என்பதைப் பட்டியலில் எழுதுங்கள்.

| வ.எண் | நண்பன் பெயர் | எப்பொழுது கலந்து உணவு உண்பர் | | |
|---|---|---|---|---|
| | | காலை | மதியம் | இரவு |
| | | | | |

எவரெவர் வீட்டில் அதிகமாக கலந்துண்பார்கள்? எப்போது கலந்து உண்பார்கள்?



## பாராட்டுதல்

1. உங்கள் வகுப்பில் யார் யார் தினமும் உண்ணும் முன்பு கைகால்களை கழுவுவர்? அவ்வாறே தட்டில் ஏதும் மீதிவைக்காமல் யார் யார் சுத்தமாக உண்ணுகிறார்கள்? உண்டபிறகு அந்த இடத்தை சுத்தமாக வைக்கின்றனரா? நீங்கள் என்ன செய்வீர்கள்?



## வினவுதல்

1. கோபி, மதியம் பள்ளியில் கை, கால்களை கழுவாமலேயே சாப்பிட்ட தட்டை கொண்டு வந்தான். கோபியின் நண்பர்கள் கோபியை கை, கால்களை கழுவுமாறு கூறினர்., கோபி அவனது நண்பர்களிடம் சில வினாக்கள் கேட்டான். அந்த கேள்விகள் என்னவாகயிருக்கும்? அவை சரியானதா? நீங்களானால் கோபியிடம் என்ன கூறுவீர்?



## என்னால் செய்ய முடியுமா?



| | | |
|---|---|---|
| 1. | இடங்களை பொறுத்து உணவுப் பழக்க வழக்கங்கள் வெவ்வேறாக உள்ளதென தெரிந்துக்கொண்டேன். | ஆம்/இல்லை |
| 2. | விலங்குகள் மற்றும் பறவைகளின் உணவு பழக்கவழக்கங்கள் குறித்தும் கூறுவேன். | ஆம்/இல்லை |
| 3. | வீட்டிலுள்ள அனைவரும் கலந்து உண்ணுவதால் ஏற்படும் பயன்களை விவரிப்பேன். | ஆம்/இல்லை |
| 4. | உண்ணும் உணவுபொருட்களை குறித்த பட்டியலை தயார்செய்வேன். | ஆம்/இல்லை |
| 5. | நல்ல உணவு பழக்கவழக்கங்களை விவரிப்பேன். பின்பற்றுவேன். | ஆம்/இல்லை |
| 6. | உணவு பழக்கவழக்கங்களை குறித்து வினாஎழுப்புவேன், விவரிப்பேன். | ஆம்/இல்லை |





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# 9. நமது கிராமம்



ரங்காபுரம் கிராமத்தைச் சுற்றி, சிறுசிறு மலைக்குன்றுகள் உள்ளன. இக்கிராமத்தை ஒட்டி நதி பாய்கிறது. இக்கிராமத்தில் வீடுகள் அருகருகே உள்ளன. கிராமத்தில் குடிநீர் மேல்நிலைத்தொட்டி ஒன்று உள்ளது. குடிநீர், குழாய் மூலமாக வினியோகிக்கப்படுகிறது. பலத்தொழில்களைச் செய்யும் மக்கள், கிராமத்தில் உள்ளனர். இப்பொழுது ரங்காபுரம் கிராமத்தை கீழே காண்போம்.



மேலே உள்ள படம் ஒரு கிராமத்தைச் சார்ந்தது என எவ்வாறு கூறுவாய்?

இப்படத்தை ஆதாரமாகக் கொண்டு, கிராமம் என்றால் என்ன என்பதை விளக்கு

இப்படத்தின் மூலம் கிராமம் குறித்து நீ நினைப்பது என்ன?






SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



ரங்காபுரம் கிராமம் எவ்வாறு உள்ளது என படத்தில் கண்டீர் அல்லவா! இக்கிராமத்தில் வேறு என்னென்ன உள்ளது எனப் பாருங்கள், கூறுங்கள்.




ரங்காபுரம் கிராமத்தில் என்னென்ன உள்ளன?
உனது கிராமத்தில் என்னென்ன உள்ளன?



ரங்காபுரம் கிராமத்தில் தெருக்கள், பல்வேறு வீடுகள், பள்ளி, கோயில், மசூதி, தேவாலயம், கிராமப் பஞ்சாயத்து அலுவலகம், மருத்துவமனை, கால்நடை மருத்துவமனை, தபால்நிலையம் போன்றவைகள் உள்ளன அல்லவா! இவைகளைப் பற்றி உனக்குத் தெரியுமா?




### கிராமப் பஞ்சாயத்து அலுவலகம்.

இது ரங்காபுரம் கிராம பஞ்சாயத்து அலுவலகம் ஆகும். இது கிராமத்தில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வழங்குதல், சாலை, கால்வாய், வீதிகளை சுத்தம் செய்தல், தெரு விளக்குகளை அமைத்து நிர்வகித்தல் போன்ற பணிகளை செய்கிறது.

உமது ஊர் பஞ்சாயத்து என்னென்ன பணிகளை செய்கிறது?





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com


### தபால் நிலையம்

இது தந்தி மற்றும் தபால் அலுவலகம்; இங்கு கடிதம் அனுப்புதல், பணம் அனுப்புதல், ஆயுள்காப்பீட்டுத் திட்டம், பணம் சேமித்தல் போன்ற பணிகள் நடைபெறுகின்றன.




> உனது கிராமத்தில் உள்ள தபால் பெட்டியை பார்த்தாயா? உன் கிராம தபால்காரர் என்னென்ன பணிகளை செய்கின்றார்? அவருடைய பெயரென்ன?

### மருத்துவமனை




கிராமத்தில் மருத்துவமனை உள்ளது. இங்கு மருத்துவர், செவிலியர் மற்றும் உதவியாளர்கள் உள்ளனர். இவர்கள் கிராம மக்களுக்கு உடல் நலத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஊட்டுவார்கள். போலியோ சொட்டு மருந்திடுதல் போன்ற பணிகளை செய்வர். சிறிய வகை நோய்களுக்கு மருந்துகள் அளிப்பர்.

> உனது கிராமத்தில் போலியோ சொட்டு மருந்தை அளிப்பவர் யார்? உனது கிராமத்தில் மருத்துவமனை உள்ளதா? இது எப்பணிகளை செய்கின்றது?

### கால்நடை மருத்துவமனை

நமக்கு உடல்நலம் சரியில்லாவிடில் மருத்துவமனைக்குச் செல்வோம் அல்லவா! அவ்வாறே கால்நடைகளுக்கு உடல்நலம் சரியில்லாவிடில் கால்நடை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வோம்.



கால்நடை மருத்துவமனை


> கால்நடைகளை எப்பொழுது மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வோம் என கேட்டு எழுதவும்.கால்நடை மருத்துவமனை இல்லாவிடில் என்ன நிகழும்?




### வங்கி

ரங்காபுரம் கிராமத்தில் மக்கள் தொகை அதிகம் இருப்பதால் கிராமிய வங்கி ஒன்றும் உள்ளது. மக்கள் பணத்தை வங்கியில் சேமிப்பர். மக்களின் தேவைக்கேற்ப வங்கி, கடன் கொடுக்கிறது. இப்பணத்தை தவணை முறையில் திருப்பி செலுத்த வேண்டும்.

> வங்கிகளால் ஏற்படும் பிற நன்மைகளை உங்களுடைய பெரியோர்களிடம் கேட்டு வந்து வகுப்பறையில் கூறவும்.





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com


### பள்ளி



ரங்காபுரம் கிராமத்தில் ஆரம்பப்பள்ளி ஒன்று உள்ளது. இங்கு பள்ளிப் படிப்பை முடித்தவர்கள் உயர் கல்விக்காக அருகில் உள்ள ஊருக்குச் செல்வர்.

> பள்ளி இல்லாவிடில் என்ன நிகழும்? உமது கிராம மாணவர்கள் உயர்கல்விக்கு எங்கு செல்வர்?

### மேல்நிலை நீர்த் தொட்டி



மேல்நிலை நீர்த் தொட்டியிலிருந்து குடிநீரை குழாய் மூலமாக வீடுகளுக்கு வினியோகிப்பர் நீர்த்தொட்டியை வாரத்திற்கு ஒரு முறை கழுவுவர். குடிநீரில் குளோரினை கலந்து சுத்தம் செய்வர். நீரை வீணாக்கக்கூடாது. குழாயிலிருந்து நீர் வீணாகாமல் இருக்க குழாயை மூடி வைக்க வேண்டும். குழாய் ஒடிந்து நீர் வீணானால், உடனே பஞ்சாயத்து அதிகாரியிடம் தெரிவிக்க வேண்டும்.

> உனது கிராமத்தில் குடிநீரை எங்கிருந்து பெறுகிறாய்? மேல்நிலை நீர்த்தொட்டியின் பயன்கள் என்ன? அதை எழுதி உனது வகுப்பறையில் மாட்டவும்.

### வழிபாட்டு இடங்கள்

கீழுள்ள படங்களை பாருங்கள். என்ன உள்ளன? இங்கு யார் யார் செல்வர்? எப்பொழுது செல்வர்?







இவற்றில் உனது கிராமத்தில் எது உள்ளது? இங்கு யார் செல்வர்? எப்பொழுது செல்வர்?





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



### ரங்காபுரம் கிராமத்திற்கு வந்து செல்லுதல்


நாம் ஏதேனும் ஊருக்குச் செல்ல வேண்டுமெனில் பேருந்து, இரயில், ஆட்டோ ஆகிய வாகனங்கள் மூலம் செல்வோம். எனில் ரங்காபுரம் கிராமத்திற்கு என்னென்ன வாகனங்கள் வருகின்றன என கவனி. அவற்றைக் கூறுங்கள்.



ரங்காபுரம் கிராமத்திற்கு காலையும், மாலையும் பேருந்துகள் வருகின்றன. அருகில் உள்ள இடங்களுக்கு ஆட்டோவில் செல்கின்றனர். விவசாயிகள் விவசாய வேலைகளுக்கு மாட்டுவண்டியை பயன்படுத்துகின்றனர். இக்கிராம மாணவர்கள் உயர்கல்விக்கு அருகிலுள்ள ஊர்களுக்கு பேருந்தில் பயணம் செய்கின்றனர்.

உனது கிராமத்திற்கு என்னென்ன வாகனங்கள் வந்து செல்கின்றன?
மக்கள் பயணம் செய்யும் வாகனங்கள் எவை?

ரங்காபுரம் கிராமத்திலுள்ள சமூகக் கூடங்கள் மற்றும் பயணம் செய்யும் வாகனங்களைப் பற்றி அறிந்து கொண்டீர்கள் அல்லவா!





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அக்கிராம மக்கள் என்ன வேலை செய்கிறார்கள் தெரியுமா? அதிக மக்கள் விவசாயம் செய்கின்றனர். சிலர் கூலிவேலை செய்கின்றனர். சிலர் வேறு பல வேலைகளை செய்கின்றனர். கொள்ளர், மண்பாண்டம் செய்வோரும் உள்ளனர். சிலர் அரசு பணியிலும் உள்ளனர். சிலர் குறைந்த முதலீட்டில் வியாபாரம் செய்கின்றனர். பள்ளியை விட்டு இடையில் நின்றவர்களும் பள்ளியில் சேர்ந்து படிக்கின்றனர். சிலர் மேல்படிப்புக்காக வெளியூர் சென்று வருகின்றனர். இக்கிராமப் பெண்கள் அனைவரும் படித்தவர்களே! அவர்களும் ஏதோ ஒரு வேலை செய்து பணம் ஈட்டுகிறார்கள்.

**உனது கிராமத்தில் எந்தெந்த தொழில் செய்வோர் உள்ளனர்?**

ரங்காபுரம் கிராமத்தில் என்னென்ன உள்ளன என தெரிந்து கொண்டீர்கள் அல்லவா! இவ்வாறான வசதிகள் அனைத்து கிராமங்களிலும் இல்லாமல் இருக்கலாம். அனைத்து வசதிகளும் இருந்தால் தான் ஒரு கிராமம் வளர்ச்சியடையும்.

## முக்கிய சொற்கள்

1. கிராமம்
2. கிராம பஞ்சாயத்து
3. வங்கி
4. கால்நடை மருத்துவமனை
5. மருத்துவமனை
6. தபால் நிலையம்
7. மருத்துவ பணியாளர்
8. வழிபாட்டு இடங்கள்
9. வாகன வசதிகள்
10. சமூக சங்கங்கள்
11. ஆயுள் காப்பீட்டு திட்டம்
12. போலியோ சொட்டு மருந்து

## நாம் கற்றவை

* கிராமத்தில் கிராம பஞ்சாயத்து, வங்கி, கால்நடை மருத்துவமனை, பள்ளி, மருத்துவமனை, தபால் நிலையம், கோயில், மசூதி மற்றும் தேவாலயம் உள்ளன.
* கால்வாய் சுத்தம் செய்தல், தெருவிளக்குகள் அமைத்தல், குப்பைகளை அகற்றுதல், குடிநீர் வினியோகம் போன்ற பணிகளை பஞ்சாயத்து செய்கின்றது.
* மேற்கூறிய வசதிகள் இருப்பதால் கிராம வளர்ச்சிக்கு பயனுள்ளதாக உள்ளது.
* கிராமங்களில் வாகனங்கள் உள்ளன. பல ஊர்களிலிருந்து வாகனங்கள் கிராமங்களுக்கு வந்து செல்கின்றன.
* கிராமங்களில் பல தொழில்களை செய்வோர் உள்ளனர்.





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## இதைச் செய்யுங்கள்




### புரிந்து கொள்ளல்

1. ரங்காபுரம் கிராமத்தில் என்னென்ன உள்ளன?
2. உனது கிராமத்தில் உள்ள கோயில்களின் பெயர்களை எழுதுக.
3. உனது கிராமத்தில் பள்ளி இல்லாவிடில் என்ன நிகழும்?
4. கிராமங்களில் வங்கி செயல்படுவதால் ஏற்படும் பயன்கள் யாவை?
5. வங்கி மற்றும் தபால் நிலையங்களுக்கு இடையேயுள்ள ஒற்றுமை மற்றும் வேற்றுமைகள் யாவை?



### படம் வரையுங்கள். வண்ணம் தீட்டுங்கள்.

1. பள்ளியின் படம் வரையுங்கள். வண்ணம் தீட்டுங்கள்.






### தகவல் திறன்கள் – செயல் திட்டங்கள்.

2. ரங்காபுரம் கிராமத்தில் என்னென்ன உள்ளன என கீழ் உள்ள அட்டவணையில் எழுதுக. அதில் உனது கிராமத்தில் உள்ளவற்றிற்கு (✓) குறியிடுக.

| வ.எண். | ரங்காபுரம் கிராமத்தில் இருப்பது | உனது கிராமத்தில் இருப்பது |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

* ரங்காபுரம் கிராமத்தில் இருப்பதில் என்னென்ன உனது கிராமத்தில் உள்ளது?
* ரங்காபுரம் கிராமத்தில் இருப்பதில் என்னென்ன உனது கிராமத்தில் இல்லை?
* ரங்காபுரம் கிராமத்தில் இல்லாதவற்றில் என்னென்ன உனது கிராமத்தில் உள்ளது?

3. உன் கிராமத்தில் உள்ள சேவை நிறுவனங்களின் பெயர், அவற்றின் பணிகள் கூறி, அட்டவணையில் எழுது.

| வ.எண். | சேவை நிறுவனத்தின் பெயர் | அதன் பணிகள் |
|---|---|---|
| | | |



### பாராட்டுதல்

1. கிராமத்தில் பள்ளி, வங்கி, தபால்நிலையம், மருத்துவமனை ஆகியவை இருப்பதால் ஏற்படும் பயன்களை அறிந்தீர்கள் அல்லவா! அவ்வாறே கிராமங்களுக்கு வேறு என்னென்ன அவசியம்? பிறரிடம் அறிந்து கூறுங்கள்.



### வினவுதல்

1. இராமன் ரங்காபுரம் கிராமத்திற்கு சென்றான். கிராமத்தைப் பற்றி அறிய விரும்பினான். இதற்கு, பள்ளிக்குச் சென்று ஆசிரியர்களிடம் கேட்டான். இராமன் என்ன வினாக்களைக் கேட்டான்? ஆசிரியர்கள் என்ன பதில் கூறியிருப்பார்கள்.



### என்னால் செய்ய முடியுமா?



1. கிராமம் என்றால் என்ன என விவரிக்க முடியும். ஆம்/இல்லை
2. கிராம சமூக அமைப்பின் பணிகளை விவரிக்க முடியும் ஆம்/இல்லை
3. சமூக அமைப்புகளின் பயன்களை அறிந்து கொண்டேன். அவற்றை நான் பயன்படுத்திக்கொள்வேன். ஆம்/இல்லை
4. பள்ளியின் படம் வரைந்து வண்ணம் தீட்டுவேன். ஆம்/இல்லை
5. கிராமத்தைப் பற்றி என்னால் வினா எழுப்ப முடியும். ஆம்/இல்லை





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# 10. வீடுகளின் வகைகள்



நாம் அனைவரும் வாழ்வதற்கு வீடு அவசியம். வெயில், மழை, குளிர், தூசு போன்றவற்றிலிருந்து நம்மைக் காக்க வீடு அவசியம். நம்மைப்போல் பறவைகளும் விலங்குகளும், வீடுகளில் வாழ்கின்றனவா? அவ்வாறு எனில், நமது வீட்டைப் போன்று அவைகளின் வீடுகள் இருக்குமா? ஒரு நாள் மாலை சங்கரும், சரளாவும் தனது பெற்றோருடன் வயலிலிருந்து வந்துக் கொண்டிருந்தார்கள். வழியோரத்தில் இருந்த சிறிய குன்றின் மீது இருவரும் ஏறினர். குன்றின்மீது நின்று கிராமத்தில் உள்ள வீடுகளைக் கண்டனர். அவைகள் எப்படி இருந்தன? என்னென்ன வகைகளில் உள்ளன எனப் பார்ப்போமா!





வீடுகள் அனைத்தும் ஒரே விதமாக உள்ளனவா?
எவ்வகைகளில் உள்ளன? வீடுகள் அருகருகே உள்ளனவா?
அல்லது இடைவெளி விட்டு உள்ளனவா?

சங்கர் மற்றும் சரளாவின் கிராமத்தில் வீடுகள் எப்படி உள்ளது என கண்டீர்கள் அல்லவா! பல வகை வீடுகள், அருகருகே உள்ளதை கண்டீர்கள் அல்லவா! உனது கிராமத்திலும் வீடுகள் இவ்வாறுதான் உள்ளதா? உனது கிராமத்தில் உள்ள வீடுகளின் வகைகளை எழுதுக. வீடுகள் அருகருகே இருப்பதால் ஏற்படும் நன்மைகள் யாவை?






Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



### தற்காலிக வீடுகள்

சங்கர் பள்ளிக்கு வந்தான். சங்கர் கவலையுடன் இருப்பதை நண்பன் ராமு கண்டு, ஏன் கவலையுடன் இருக்கிறாய்? எனக் கேட்டான். "இரவு அடித்த புயல் மழையில் எனது வீடு இடிந்து விழுந்துவிட்டது" என சங்கர் வருத்தத்துடன் கூறினான். "அப்படியெனில் இப்பொழுது எங்கு தங்குகிறீர்கள்?" என ராமு கேட்டான். "எங்களுக்காக ஊருக்கு வெளியே கூடாரம் அமைந்துள்ளனர், அதில் தங்கியுள்ளோம்", என்றான். நீங்கள் கூடாரத்தை பார்த்தீர்களா? எப்பொழுது பார்த்தீர்கள்? எதற்காக போடுவார்கள்? கூறுங்கள்.



அடிக்கடி வீடுகளை மாற்றுபவர்கள், சர்க்கஸ் செய்பவர்கள் தற்காலிக வீடுகளை அமைத்துக்கொள்வர். மழை, புயல், சுனாமி, பூகம்பம் மற்றும் தீ விபத்து ஆகியவற்றில் வீடுகளை இழப்போர்களுக்கு கூடாரங்கள் அமைத்து தரப்படும்.

சங்கர் அவனுடைய மாமாவின் திருமணத்திற்காக நகரத்திற்கு சென்றான். சாலை ஓரத்தில் உள்ள பெரிய பெரிய சிமெண்ட் குழாய்களைக் கண்டான். அதனுள் சிலர் குடும்பத்துடன் இருந்தனர். அதைக் கண்ட சங்கர் ஆச்சரியமடைந்தான். குழாய்களில் கூட குடும்பம் நடத்துவார்களா? என எண்ணினான். ஏன் குழாய்களில் வாழ்கிறார்கள்? என அவனுடைய மாமாவிடம் கேட்டான். அவனுடைய மாமா என்ன கூறியிருப்பார் என சிந்தியுங்கள்.







SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com




கூடாரங்களிலும், குழாய்களிலும் வாழ்பவர்களுக்கு இல்லாத வசதிகளை எழுதுக. இதில் வாழ்பவர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் என்ன?

வறட்சியின் போதும் ஊரில் வேலையில்லாத காலத்திலும் மக்கள் வேலைக்காக நகரங்களுக்கு செல்கின்றனர். இவ்வாறு நகரங்களுக்கு செல்வோர்க்கு தங்குவதற்கு வீடுகள் இருப்பதில்லை. இவர்கள் நகரங்களில் காலியாக உள்ள இடங்களில் தற்காலிகமாக கூடாரம், குடிசை மற்றும் குழாய்களில் வாழ்கிறார்கள்.



சங்கர் நகரங்களில் உள்ள பெரிய கட்டிடங்களை கண்டான். எவ்வளவு உயரமாக உள்ளது. இதில் யார் வாழ்கிறார்கள்? என ஆச்சரியத்துடன் அவனுடைய மாமாவிடம் கேட்டான். நகரங்களில் இடங்கள் குறைவாக இருக்கும். ஆதலால், வாழ உயரமான கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. இவை அடுக்குமாடி குடியிருப்புகள் என அவனுடைய மாமா சங்கரிடம் கூறினார்.




இவ்வாறான கட்டிடங்களை நீங்கள் பார்த்ததுண்டா?

நகரங்களில் கட்டிடங்கள் அதிகமாக இருக்கும். சாதாரணமாக ஒரு வீட்டில் ஒரு குடும்பமே வாழும். ஆனால் அடுக்குமாடி குடியிருப்புகளில் பல குடும்பங்கள் இணைந்து வாழ்கின்றன. இதற்கு வசதியாக அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. ஒரு குடும்பம் வாழும் கட்டிடத்தை வீடு என்பர். பத்திலிருந்து முப்பது குடும்பங்கள் வாழும் கட்டிடத்தை அடுக்குமாடி குடியிருப்பு என்பர். பெரிய நகரங்களில் நூறு குடும்பங்கள் வரை வாழும் அடுக்குமாடி குடியிருப்புகள் உள்ளன.





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



கூடாரங்கள், சிமெண்டு குழாய்கள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகள் பற்றி தெரிந்துகொண்டீர்கள் அல்லவா! பின்வரும் வீடுகளை பாருங்கள். இதில் உன்னுடைய வீட்டைப் போன்று இருப்பது எது என கவனி.





உன்னுடைய நண்பர்களின் வீடுகள் எப்படியுள்ளது என தெரியுமா? நண்பர்களைக் கேளுங்கள். எவ்வகை வீட்டில் வாழ்கிறார்கள் எனக் கேட்டு கீழ் உள்ள அட்டவணையில் எழுதுக.

| வ.எண் | நண்பரின் பெயர் | வீட்டின் வகை |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |

உன்னைப் போன்றே உன்னுடைய நண்பர்களும் அட்டவணையை தயார் செய்தார்கள் அல்லவா! அவர்களைக் கேட்டு அவர்கள் எவ்வகை வீட்டில் வாழ்கிறார்கள் என அறிந்துகொள். அதிகமானவர்கள் எவ்வகை வீட்டில் வாழ்கிறார்கள் எனக் கூறுங்கள்.

**உனக்குத் தெரியுமா?**



இது மரத்தால் கட்டப்பட்ட வீடு. பூகம்பம் ஏற்படும் பகுதியில் கட்டப்படும்.



இது படகு வீடு. காஷ்மீர் மற்றும் கேரளா மாநிலங்களில் இவ்வாறான வீடுகள் பயன்படுத்தப்படுகின்றன.



இது இக்ளு வீடு. இது குளிர்பிரதேசங்களில் கட்டுவர். இது பனியால் கட்டப்படுகிறது.

SCERT TELANGANA





Downloaded from https:// www.studiestoday.com


Downloaded from https:// www.studiestoday.com





## வீட்டின் கூரைகள்

வீட்டைப் பற்றி தெரிந்து கொண்டீர்கள் அல்லவா!

வீட்டின் மேற் கூரைகள் என்றால் என்ன எனத் தெரியுமா? வீட்டிற்கு மேற்புறத்தில் உள்ள பாகத்தை வீட்டின் கூரை என்பர். சில வீடுகளின் மேற்கூரைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை கவனியுங்கள்.










அனைத்து வீடுகளின் மேற்கூரைகளும் ஒரே மாதிரியாக உள்ளனவா? சில சாய்வாகவும், சில கோபுரமாகவும், சில சதுரமாகவும் உள்ளன. உன்னுடைய ஊரில் எவ்வகை கூரைகள் அதிகமாக உள்ளன? கூறுங்கள்.


வீட்டின் கூரைகள் ஏன் சாய்வாக உள்ளது எனத் தெரியுமா? கூறுங்கள்.




மூன்று சிமெண்டு தகடுகளை எடுத்துக் கொண்டு அவற்றை சாய்வாக வைக்க செங்கற்களை எடுத்துக்கொள்ளுங்கள். ஒரு தகட்டை தரையின் மீது சதுரமாகவும், இரண்டாவது தகட்டை ஒரு செங்கல் மீதும், மூன்றாவது தகட்டை இரண்டு செங்கற்கள் மீதும் சாய்வாக வைக்கவும். இவ்வாறு வைத்தால் எது அதிகமாக சாய்ந்துள்ளது?



தரையின் மீது தகடு



ஒரு செங்கல் மீது சாய்வாக வைக்கப்பட்ட தகடு



இரண்டு செங்கற்கள் மீது சாய்வாக வைக்கப்பட்ட தகடு





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இப்பொழுது ஒரு டம்ளரில் நீரை எடுத்துக்கொள்ளுங்கள். முதல் தகட்டின் மீது ஊற்றுங்கள். பிறகு இரண்டாவது தகட்டின் மீது ஊற்றுங்கள். அதன் பிறகு மூன்றாவது தகட்டின் மீது ஊற்றுங்கள். எதன் மீது ஊற்றிய நீர் மிக விரைவாக கீழே பாய்ந்தது?

**ஏன் என்று கூறுங்கள் :**

சாய்வாக இருப்பதால் நீர் மிக வேகமாக கீழே பாய்ந்தது. ஆகவே, வீட்டின் கூரைகளை சாய்வாக அமைப்பர். ஆதலால், மழைக்காலத்தில் வீட்டின் கூரைமீது விழும் மழை நீர் மிக வேகமாக கீழே ஒழுகிவிடும்.

காான்கிரீட் கட்டிடங்களின் கூரை சமமாக இருக்கும் அல்லவா! மழைநீர் எப்படி கீழே ஒழுகும்?

கான்கிரீட் கட்டிடங்களின் கூரை சமதளமாக தெரிந்தாலும், மழைநீர் ஒழுகுவதற்காக ஒரு பக்கம் சிறிதளவு சாய்வாக இருக்கும். அப்பக்கத்தில் மழைநீர் கீழே வர குழாய்கள் அமைக்கப்பட்டிருக்கும்.

நாம் வாழும் வீடுகள் பல வகைப்படும். அவை, ஓட்டு வீடு, குடிசை வீடு, மாடிவீடு, சிமெண்ட் தகட்டு வீடு ஆகியவையாகும். இவைகள் நிரந்தர வீடுகளாகும். கூடாரம், பந்தல் வீடு, குழாய் வீடு ஆகியவை தற்காலிக வீடுகளாகும். நகர்ப்புறங்களில் கட்டிடங்கள் அதிகம் உள்ளன. சில இடங்களில் சிறிய வீடுகளும் உள்ளன. வீடுகளின் கூரைகள் சாய்வாக இருப்பதால் மழைநீர் கீழே ஒழுகிவிடும்.

## முக்கிய சொற்கள்

1. வீட்டின் வகைகள்
2. வாழ்க்கை
3. அடுக்கு மாடிவீடு
4. வீட்டு மனை
5. சாய்வாக
6. வீட்டின் மேற்கூரை
7. இக்ளு
8. படகு வீடு
9. தற்காலிக வீடு

## நாம் கற்றவை

* கல்வீடு, ஓட்டுவீடு, தகட்டு வீடு, கட்டிடம், அடுக்குமாடி வீடு போன்ற வீடுகள், உள்ளன.
* புயல், மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிக வீடுகளை அமைப்பர். நாடோடி வாழ்க்கை வாழ்பவர்கள் கூடாரத்தில் வாழ்வர்.
* நகர்புறங்களில் அடுக்குமாடி வீடுகள் உள்ளன. சில இடங்களில் பனிவீடு, மரவீடு, படகு வீடு ஆகியவையும் உள்ளன.
* வீட்டின் மேற்கூரை சாய்வாக இருப்பதால் மழைநீர் வேகமாக கீழே வடிந்துவிடும்.

SCERT TELANGANA





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## இதைச் செய்யுங்கள்

### புரிந்து கொள்ளல்


1. கீழே உள்ளவற்றில் எது தற்காலிக வீடு? ஏன்?
   1. கூடாரம் 2. அடுக்குமாடி வீடு 3. தகட்டு வீடு 4. குழாய் வீடு
2. உன்னுடைய வீட்டின் அருகேயுள்ள நான்கு வகை வீடுகளை பட்டியலிடு.
3. வீட்டின் மேற்கூரை சாய்வாக இருக்கும். ஏன்?
4. கீழே உள்ள இரண்டு வீடுகளின் ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகளை கூறுங்கள். எழுதுங்கள்.





### படம் வரைந்து வண்ணம் தீட்டுங்கள்.

1. கீழ் உள்ள படத்தை பக்கத்தில் உள்ள கட்டத்தில் வரைந்து வண்ணம் தீட்டவும்.



2. உனது வீட்டின் படம் வரைந்து; வண்ணம் தீட்டவும். உனது வீட்டைப் பற்றி எழுதவும்.





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



## தகவல் திறன்கள் - செயல் திட்டப் பணிகள்

1. உனது வீட்டைச் சுற்றியுள்ள பிற வீடுகளைப் பாருங்கள். அவைகளின் மேற்கூரைகள் எவ்வாறு உள்ளது என கீழ் உள்ள அட்டவணையில் எழுதுக.

| வ.எண் | வீட்டின் வகை | வீட்டின் மேற் கூரை | |
|---|---|---|---|
| | | சமதளமாக | சாய்வாக |
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |

1) எவ்வகை வீடுகள் அதிகமாக உள்ளன? ..............................................

2) உனது வீட்டின் மேற்கூரை எவ்வாறு உள்ளது? ........................................

2. காகிதம், அட்டை, குச்சி, கட்டை, மண் ஆகியவற்றை பயன்படுத்தி, மாதிரி வீடுகளை தயார் செய்து, வகுப்பறையில் வையுங்கள்.



## பாராட்டுதல்

1. கூடாரம், பந்தல் மற்றும் குழாய்களில் வாழ்பவர்களுக்கு நாம் எவ்வாறு உதவலாம். நீ என்னென்ன உதவிகளைச் செய்வாய்?



## வினவுதல்

1. சங்கர்; ஐதராபாத்தில் மக்கள் அடுக்குமாடி குடியிருப்புகளிலும் குழாய்களிலும் வாழ்வதை கண்டான் அல்லவா! அவர்களைப் பற்றி சங்கர் அவனுடைய மாமாவிடம் பல வினாக்களைக் கேட்டான். அவ்வினாக்கள் என்னவாய் இருக்கும்? நீங்களாயிருந்தால் என்னென்ன வினாக்களை கேட்பீர்கள்?



## என்னால் செய்ய முடியுமா?



1. பல்வேறு வீடுகளைப் பற்றி என்னால் விவரிக்க முடியும். ஆம்/இல்லை
2. சமதளம் மற்றும் சாய்வாக உள்ள வீடுகளின் மேற்கூரையைப் பற்றிய வித்தியாசத்தை கூறமுடியும். ஆம்/இல்லை
3. பலவகை வீடுகளை படம் வரைந்து வண்ணம் தீட்டுவேன். ஆம்/இல்லை
4. வீடு தொடர்புடைய விவரங்களை சேகரித்து பட்டியலிடுவேன். ஆம்/இல்லை
5. பலவித வீடுகளைப் பற்றி வினா எழுப்ப முடியும். ஆம்/இல்லை





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# 11. சுத்தமான வீடே, அழகான வீடு



ஒரு நாள் ரங்கன், தன்னுடைய நண்பன் கேசவனை சந்திக்க தன் மகன் முரளியுடன், இந்திரா கிராமத்திற்கு சென்றார். அந்த ஊரில், ரங்கனுக்கு தெரிந்தவர்கள் அதிகமானோர் இருந்தனர். வழி நெடுக அனைவரையும் சந்தித்துக் கொண்டே கேசவன் வீட்டிற்கு சென்றார். ‘‘முரளி! இதுதான் கேசவன் மாமாவின் வீடு’’ என ரங்கன் கூறினான். ‘‘மாமாவின் வீடு எவ்வளவு அழகாக உள்ளது’’ என முரளி கூறினான். கேசவனின் வீடு எப்படி உள்ளது என நாமும் பார்க்கலாமா?



மாமாவின் வீடு எவ்வளவு அழகாய் உள்ளது. என, முரளி ஏன் கூறினான்?
வீட்டின் சுவர் மீது என்ன காணப்படுகிறது?
உனது வீடும் இப்படி உள்ளதா? வேறுபாடு என்ன?





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



ரங்கன் மற்றும் முரளி நான்கு நாட்களுக்கு பிறகு அவர்களுடைய ஊருக்குச் சென்றனர். முரளி படிக்கும் பள்ளியில் புதியதாக சேர்ந்த குமார், முரளிக்கு நல்ல நண்பனாக மாறினான்.



குமார், முரளியை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான். அவன் வீட்டின் முன் புறம், பல பூச்செடிகள் வளர்ந்துள்ளதை முரளி கண்டு மகிழ்ந்தான். என் வீட்டைச் சுற்றியும் பல செடிகள் உள்ளது, என குமார் கூறினான்.



குமாரின் வீட்டின் முன் புறம் என்னென்ன உள்ளன?
அவர்களின் செருப்புகள் எங்கு வைக்கப்பட்டுள்ளன?

குமார் மற்றும் முரளி இருவரும் வீட்டினுள் சென்றனர். குமாரின் வீட்டைக் கண்டு முரளி அதிக மகிழ்ச்சியடைந்தான். "உன் வீடு அழகாக உள்ளது", எனக் கூறினான். முரளி ஏன் அவ்வாறு கூறினான்?



வீட்டில் புத்தகங்கள் எங்குள்ளன?
எப்படி உள்ளன? துணிகள் எங்கு உள்ளன?
வீட்டின் சுவர்கள் எப்படி உள்ளன?





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



ஒரு ஞாயிற்றுக் கிழமை, முரளி தன்னுடைய அக்காள் சரிதாவுடன் சேர்ந்து, தன் நண்பன் விஜய் வீட்டிற்கு சென்றான். விஜயின் வீட்டை பாருங்கள்.



விஜய் வீட்டின் முன்பு, பிளாஸ்டிக் குப்பைகளும், கிழிந்த காகிதங்களும் கிடந்தன. இருவரும் விஜயின் வீட்டின் உள்ளே சென்றனர். அவர்களுக்கு விஜயின் வீடு இவ்வாறு காணப்பட்டது.



விஜயின் வீடு எவ்வாறு உள்ளது பார்த்தீர்களா! வீடு இப்படிதான் இருக்க வேண்டுமா! சிந்தியுங்கள்?



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



விஜய் வீட்டின் முன்பு, சுத்தப்படுத்த வேண்டியது என்ன கூறுங்கள்? எழுதுங்கள்.

வீட்டின் முன் பக்கத்தை எவ்வாறு சுத்தமாக வைத்துக்கொள்ளலாம்? செருப்புகள் எங்கே உள்ளன? எப்படி வைப்பாய்?

வீட்டில் ஈக்கள் மற்றும் கொசுக்கள் ஏன் மொய்க்கின்றன?

துணிகள் எங்கு உள்ளன? துணிகளை எவ்வாறு வைக்கவேண்டும்?

புத்தகங்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் எங்கு உள்ளன? நீங்கள் இவைகளை எவ்வாறு வைப்பீர்கள்?

குமார் மற்றும் விஜய் வீடுகளில் உங்களுக்கு பிடித்த வீடு எது?



முரளியின் அம்மா, அப்பா, அக்காள் அனைவரும் உறவினர் வீட்டின் திருமணத்திற்காக கிராமத்திற்கு சென்றனர். ஒரு வாரம் கழித்து திரும்பி வந்தனர். அவர்களுடைய வீடு ஒரே ஒரு அறையுள்ள சிறிய வீடாகும். வீட்டிற்கு வந்தபொழுது வீட்டைச் சுற்றி குப்பைகள் இருந்தன. தூசுகள் நிரம்பியிருந்தன. அவைகளை பெருக்கி குப்பைத் தொட்டியில் போட்டனர். தண்ணீரால் அறையை கழுவினர். அனைவரும் சேர்ந்து வீட்டை சுத்தம் செய்தனர். முரளியும், சரிதாவும் அவர்களுடைய புத்தகங்களை அலமாரியில் அடுக்கினர்.

செடிகளுக்கு தண்ணீர் ஊற்றினர். சரிதா தொலைக்காட்சியை சுத்தம் செய்தாள். முரளியின் அம்மாவும், அப்பாவும் சமையல் பாத்திரங்களை அடுக்கி வைத்தனர். அவர்கள் வீட்டை எவ்வாறு வைத்துள்ளனர் என கவனி.



SCERT TELANGANA





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



முரளி, சரிதா போன்று நீங்களும் உங்கள் வீட்டு வேலையை செய்வீர்களா? உங்களின் வீட்டை சுத்தமாக வைத்துக் கொள்வீர்களா? படித்த பிறகு உங்களுடைய புத்தகம், பேனா, பென்சிலை எங்கு வைப்பீர்கள்? உங்களது துணியை நீங்களே துவைப்பீர்களா? அல்லது யார் துவைப்பார்கள்? உங்களது வீட்டில் தூசு, குப்பைகள் இருந்தால் நீ என்ன செய்வாய்?

சில வீடுகள் அழகாய் இருக்கும். சில வீடுகள் சுத்தம் செய்ய வேண்டியது இருக்கும். சில வீடுகள் அசுத்தமாய் இருக்கும். குடிசை வீடு, ஓட்டு வீடு, மாடி வீடு, எதுவாக இருந்தாலும், பொருட்களை சரியான இடத்தில் வைத்தால் தான் வீடு அழகாய் காட்சியளிக்கும்.

நமது வீட்டில் தினமும் குப்பைகளை
அப்புறப்படுத்தாவிடில் என்ன நிகழும்?



ஒவ்வொரு வீட்டிலும் குப்பைகள் சேரும். நீங்களே வீட்டை சுத்தப்படுத்த வேண்டும். நமது வீட்டின் குப்பைகளை எங்கே கொட்டுவீர்கள்? கீழ் உள்ள படத்தை கவனியுங்கள்.







படத்தில் குப்பைகளை எங்கே கொட்டுகிறார்கள்? உனது வீட்டின் குப்பையை எங்கு கொட்டுவீர்கள்? உனது தெருவில் கொட்டப்படும் குப்பைகளை யார் சுத்தம் செய்கின்றனர்?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

நமது வீட்டில் குப்பைகளை சுத்தம் செய்யாவிட்டால் துர்நாற்றம் வீசும். ஈக்கள் மற்றும் கொசுக்கள் அதிகரிக்கும். அவ்வாறான வீடு பார்ப்பதற்கு அலங்கோலமாக காட்சியளிக்கும். நமது உடலுக்கு நோய்களை வரவழைக்கும். ஆகையால் குப்பைகளை போடக்கூடாது. வீட்டை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

## முக்கியச் சொற்கள்

1. அழகான வீடு
2. பொருட்களை அடுக்கிவை
3. வீட்டை சுத்தப்படுத்து
4. வீட்டுப் பொருட்கள்

## நாம் கற்றவை

* வீட்டை சுத்தமாக வைப்பதாலும் பொருட்களை அடுக்கி வைப்பதாலும் வீடு அழகாக காட்சியளிக்கும்.
* வீட்டில் பொருட்கள் சிதறிக்கிடந்தால் நமக்கு வசதியற்றதாக இருக்கும்.
* வீடு சுத்தமாக இருக்க குப்பைகளை குப்பைத் தொட்டியில் போடவேண்டும்.
* நமது வீட்டை சுத்தமாக வைத்துக்கொள்ள, குடும்ப உறுப்பினர்களுக்கு உதவ வேண்டும்.

## இதைச் செய்யுங்கள்



### புரிந்துக் கொள்ளல்

1. வீடு ஏன் அசுத்தமடைகிறது?
2. உனது வீட்டை சுத்தமாக வைத்துக்கொள்ள நீ செய்யும் நான்கு செயல்களை கூறுங்கள், எழுதுங்கள்.
3. உன்னுடைய வீடு சுத்தமாக இருக்க தினமும் நீ செய்வதை கீழே படித்து (✓) செய்க.
    * புத்தகத்தை அடுக்கி வைப்பேன். ☐
    * தூங்கி எழுந்தவுடன் பாயை சுருட்டி வைப்பேன். ☐
    * செருப்புகளை வைக்க வேண்டிய இடத்தில் வைப்பேன். ☐
    * தூசு உள்ள தலைமுடியை துடைத்து சுத்தப்படுத்துவேன். ☐
    * வீட்டின் மூலைகளில் உள்ள ஒட்டடையை நீக்குவேன். ☐
    * செடிகளுக்கு தினமும் தண்ணீர் ஊற்றுவேன். ☐
    * குப்பைகளை குப்பைத் தொட்டியில் போடுவேன். ☐
    * பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்தமாட்டேன். ☐
4. வீட்டில் சேகரித்த குப்பைகளை உடனே வெளியே வீசவேண்டும். இல்லாவிடில் என்ன நிகழும்?
5. சுத்தமான வீடே அழகான வீடு. எதனால்?

SCERT TELANGANA





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



### படம் வரையுங்கள் வண்ணம் தீட்டுங்கள்.

1. இப்பாடத்தில் உள்ள அழகான வீட்டை போன்று வரைந்து வண்ணம் தீட்டு.



### தகவல் திறன்கள் – செயல்திட்டப் பணி.

1. உனது நண்பர்களின் வீட்டை கவனித்து பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| வ.எண் | நண்பரின் பெயர் | வீடு சுத்தமாக உள்ளதா?இல்லையா? | ஏன்? |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

வீடு சுத்தமாக இருக்க நீ என்ன செய்வாய்?



### பாராட்டுதல்

1. ரவி பள்ளியிலிருந்து மாலை வீடு திரும்பினான். வீட்டின் முன்பு செருப்புகள் சிதறியிருந்தன. வெளியில் போட்டிருந்த துணிகள் கீழே கிடந்தன. இவைகளை பொருட்படுத்தாமல் தன்னுடைய புத்தகப்பையையும் வீசிவிட்டு விளையாடச் சென்றுவிட்டான். ரவி செய்தது சரியா? நீயாக இருந்தால் என்ன செய்திருப்பாய்?



### வினவுதல்

1. முரளியும், சரிதாவும் விஜயின் வீட்டிற்குச் சென்றனர். அவனுடைய வீடு அசுத்தமாக இருந்தது. வீட்டின் அசுத்தத்தைக் கண்டு முரளியும், சரிதாவும் விஜயிடம் என்னென்ன வினாக்களை கேட்டிருப்பர்? விஜய் என்ன பதில் கூறியிருப்பான்?





### என்னால் செய்ய முடியுமா?

1. சுத்தமான மற்றும் அசுத்தமான வீடுகளுக்கிடையே உள்ள வேறுபாட்டை கூறமுடியும். ஆம்/இல்லை
2. வீட்டை சுத்தமாக வைத்துக் கொள்ள நான் உதவுவேன். ஆம்/இல்லை
3. யாருடைய வீடு தூய்மையாக உள்ளது? ஏன்? என பட்டியல் தயார் செய்ய முடியும். ஆம்/இல்லை
4. அழகான வீட்டை வரைய முடியும். ஆம்/இல்லை
5. அசுத்தமான வீட்டைப் பற்றி வினா எழுப்ப முடியும். ஆம்/இல்லை





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# 12. மண்ணால் ஆன மாணிக்கங்கள்



பொங்கல் பண்டிகை வந்தது. கௌதமி தன்னுடைய வீட்டில் பொம்மை கொலு வைக்க விரும்பினாள். ஆகையால் தன்னுடைய தாத்தாவிடம் பொம்மைகளை கேட்டாள். இருவரும் பொம்மைகளை வாங்க கடைக்குச் சென்றனர். வழியில் வண்ணமயமான பொம்மைகளைக் கண்டனர்.

**கௌதமி** : தாத்தா! இந்த தொலைப்பேசி, ரிமோட் பொம்மைகளை பாருங்கள். எவ்வளவு அழகாக உள்ளன.

**தாத்தா** : அவை பிளாஸ்டிக்கில் செய்யப்பட்ட பொம்மைகளாகும்.





**கௌதமி** : தாத்தா இந்த யானை பொம்மைகளைப் பாருங்கள். எவ்வளவு நுணுக்கமாக செய்யப்பட்டுள்ளன.

**தாத்தா** : இவைகள் மரத்தாலானவை. நமது மாநிலத்தில் நிர்மல், கொண்டபள்ளி, ஏட்டிகொப்பகா போன்ற இடங்கள் இவ்வகை மரப்பொம்மைகளுக்கு பெயர் பெற்றவையாகும்.

**கௌதமி** : தாத்தா! இப்பொம்மைகளைப் பாருங்கள். எவ்வளவு அழகாக உள்ளன! இதை வாங்கலாம் தாத்தா.



**தாத்தா** : இவை மண்ணால் செய்யப்பட்ட பொம்மைகளாகும். அனைத்து வகைகளை விட பிரசித்திபெற்றது. சுற்றுப்புறத்திற்கு எவ்வகையிலும் கேடு விளைவிக்காது.

கௌதமி அந்த பொம்மைகளை அதிகம் விரும்பினாள். அவைகளை வாங்கிக்கொண்டு முன்பகுதிக்கு சென்றனர். அங்கே பலவகையான அகல் விளக்குகள் காணப்பட்டன. அவைகளையும் வாங்கலாம், என கௌதமி, தாத்தாவிடம் கூறினாள். இவ்வகை அகல் விளக்குகளும் மண்ணால் செய்யப்பட்டவை என, தாத்தா கௌதமியிடம் கூறினார்.அதைக்கேட்ட கௌதமி ஆச்சரியமடைந்தாள்.







SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## உனக்கு தெரியுமா?



விநாயக சதுர்த்தியின்போது களிமண் அல்லது மென்சாந்து பயன்படுத்தி பொம்மைகள் செய்வர். களிமண்ணால் செய்த பொம்மைகள் மட்டுமே நாம் பயன்படுத்த வேண்டும். ஏனெனில் களிமண் எளிதாக நீரில் கரைகிறது. நீர் மாசு அடைவதில்லை.



SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



மண்ணைக் கொண்டு பொம்மையைத் தவிர வேறு என்னென்ன செய்யப்படுகிறது?

கீழுள்ள பானைகளைப் பாருங்கள். இவைகளை என்னவென்பர்? இவைகளை, எதில் தயார் செய்வார்கள் எனத் தெரியுமா? எதற்கு பயன்படுத்துவார்கள் எனக் கூறுங்கள்?













இது போன்று மண்ணால் ஆன பொருட்கள் உங்கள் வீட்டில் உள்ளனவா? அவைகளுடைய பெயர்களைக் கூறுக.



நாம் மண்ணால் ஆனப் பொருட்களைப் பற்றி தெரிந்துகொண்டோம் அல்லவா! குடம், பானை போன்றவைகள் மண்ணால் செய்யப்படுகின்றன. இவற்றில் உள்ள நீர், கோடைகாலத்திலும் குளிர்ச்சியாக இருக்கும். நமது மாநிலத்தில் அதிலாபாத் மாவட்டத்தில் தயாராகும் மண் பானைகள் மிகவும் பிரசித்திப் பெற்றவை. மண் பானைகளில் நெல், கேழ்வரகு, கம்பு போன்ற தானியங்களையும் சேமித்து வைப்பர். கால்நடைகள் நீர் அருந்த மண்ணால் செய்யப்பட்ட பெரிய தொட்டிகளை பயன்படுத்துவர்.

மண்ணால் செய்யப்பட்ட அகல் விளக்கு களில் தீபத்தை ஏற்றுவர். மண்ணால் செய்யப்பட்ட சிறிய தொட்டிகளும் கடைகளில் விற்கப்படுகின்றன. இவற்றில் சிறிய வகை செடிகளை வளர்க்கலாம். இவை எவ்வாறு தயாரிக்கப்படுகின்றன என உனக்கு தெரியுமா?

SCERT TELANGANA





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



இவ்வகையான மண் பானைகள் எவ்வாறு தயாரிக்கப்படுகின்றன என உனக்குத் தெரியுமா? ராஜா என்பவர் மண் பானைகளை தயார் செய்கிறார். ராஜா எவ்வாறு மண் பானைகளை தயார் செய்கிறார் எனக் கீழ் உள்ள படங்களில் காண்போமா!



மண் பானைகளைச் செய்ய, ராஜா களிமண்ணை கொண்டு வருகிறார்.



களி மண்ணில் நீரூற்றி, நன்கு மிதித்து மண்ணை பக்குவப்படுத்துகிறார்.




ஈரமான மண் உருண்டையை வண்டி சக்கரத்தின் மத்தியில் வைத்து, சக்கரத்தை திருப்பிக்கொண்டே பானையின் வடிவத்தை உருவாக்குகிறார்.



சக்கரம் மூலம் உருவாக்கப்பட்ட ஈரமான பானையை, சரியான வடிவம் வர சிறிய பலகையால் தட்டுகிறார்.



தயாரிக்கப்பட்ட பானைகளை முதலில் நிழலிலும் பிறகு வெயிலிலும் காயவைப்பர்



வெயிலில் காய்ந்த பானைகள் நெருப்பின் வெப்பத்தால் சுடப்படுகிறது.





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இவ்வாறு மண்ணால் செய்யப்பட்ட குடம், பானை, ஜாடி போன்றவற்றை சந்தையில் விற்பனை செய்வர். பானையை வாங்குவோர் அதை விரலில் தட்டும்போது "டங் டங்" என சப்தம் வந்தால்தான் வாங்குவர். ஏன் அவ்வாறு செய்கிறார்கள் என சிந்தியுங்கள்.



மண்பாண்டங்களை பயன்படுத்துவது மிகவும் நல்லது. நமது முன்னோர்கள் இதை அதிகம் பயன்படுத்தினர். இதன் விலையும் மிக குறைவாகும்.



மண்ணில் பல வகை பொருட்களை தயார் செய்கிறார்கள். நாம் அதை பயன்படுத்த வேண்டும். ஒரு நாள் கௌதமி அவளுடைய உறவினர் வீட்டுக்குச் சென்றார். அங்கு விதவிதமான பொருட்களைக் கண்டாள். அவை பிளாஸ்டிக், அலுமினியம், மண், பித்தளை, செம்பு, எஃகு, மரம் ஆகியவற்றால் செய்யப்பட்டிருந்தன. அவள் என்ன பொருட்களைக் கண்டிருப்பாள்? அப்பொருட்கள் எதில் தயாரிக்கப்பட்டவை என கீழ் உள்ள அட்டவணையில் குறிக்கவும்.

| வ.எண் | கௌதமி பார்த்த பொருட்கள் | அவைகள் எவற்றால் தயாரிக்கப்பட்டவை என (✓) குறிக்கவும். | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | எஃகு | பிளாஸ்டிக் | அலுமினியம் | மண் | மரம் | செம்பு |
| 1. | வாளி | | ✓ | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

உறவினர் வீட்டில், எதில் தயாரிக்கப்பட்டவைகள் அதிகம்? எதில் தயாரிக்கப்பட்டவைகள் குறைவு? மண் பாண்டங்களை மக்கள் ஏன் குறைவாக பயன்படுத்துகின்றனர்?





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## எவ்வளவு அழகாய் உள்ளது!



கௌதமி தன்னுடைய உறவினர் வீட்டில் பலவிதமான காய்கறிகள் மற்றும் பழங்களைக் கண்டாள். எவ்வளவு அழகாய் உள்ளது என நினைத்தாள். அவைகளை கையில் எடுத்து பார்த்தாள். அதைக்கண்டு ஆச்சரியமடைந்தாள். ஏன் தெரியுமா? அவைகள் காய்கறிகளோ அல்லது பழங்களோ அல்ல. அவைகள் மண்ணால் செய்யப்பட்டு வண்ணம் தீட்டப்பட்டவைகள். அவைகளை நீங்களும் பாருங்கள். அவைகளை நீங்களும் தயாரிக்கலாம். களிமண்ணில் நீர் கலந்து, ஈரமாக்கி, நன்றாக பிசைந்து பிறகு காய்கறி மற்றும் பழம் வடிவங்களை செய்து வண்ணம் தீட்டுங்கள்.

### முக்கியச் சொற்கள்

| | | |
|---|---|---|
| 1. கொலு பொம்மைகள் | 2. மண் பொம்மைகள் | 3. மண் பாண்டங்கள் |
| 4. களிமண் | 5. வண்டிச்சக்கரம் | 6. சலவை |

### நாம் கற்றவைகள்

* மண்ணில் குடம், பானை, ஜாடி, பூந்தொட்டி, அகல் விளக்கு ஆகியவற்றைச் செய்யுங்கள்.
* கொலு பொம்மைகளில் மண்ணால் செய்யப்பட்டதை அதிகம் பயன்படுத்துவர்.
* வினாயகர் சதுர்த்தி அன்று களிமண்ணால் செய்யப்பட்ட சிலையை வைக்க வேண்டும்.
* வண்டிச்சக்கரத்தில் களிமண்ணை வைத்து மண் பானைகளை செய்வார்கள்.
* நமது முன்னோர்கள் மண் பாண்டங்களை அதிகம் பயன்படுத்தினர்.
* நவீன காலத்தில் மண்பாண்டங்கள் பயன்படுத்துவது குறைந்துள்ளது.

### இதைச் செய்யுங்கள்



#### புரிந்து கொள்ளல்

1. மண்ணால் செய்யப்பட்ட பொருட்கள் மூன்றைக் கூறுங்கள், எழுதுங்கள்.
2. எஃகு பாத்திரத்திற்கும் மண் பாண்டத்திற்கும் உள்ள வேறுபாடுகளை கூறுங்கள், எழுதுங்கள்.
3. உங்கள் வீட்டில் மண்ணால் செய்யப்பட்ட பொருட்கள் என்னென்ன உள்ளன? அவற்றை எதற்கு பயன்படுத்துவர்?





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



### படங்களை வரையுங்கள். வண்ணம் தீட்டுங்கள்.

1. கீழுள்ள படங்களை வரையுங்கள். வண்ணம் தீட்டுங்கள்.







### தகவல் திறன்கள் - செயல் திட்டப் பணி.

1. சந்தைக்குச் சென்று மண்ணால் செய்யப்பட்டுள்ள பொருட்களை பட்டியலிடுங்கள். அவைகளின் விலையையும் குறிப்பிடுங்கள்.

2. பலவித காய்கறிகளையும் பழங்களையும் களிமண்ணால் செய்து அவற்றிற்கு வண்ணம் தீட்டுங்கள்.



### பாராட்டுதல்

1. மண்ணால் பலவித பொருட்களையும், பொம்மைகளையும் தயாரிக்கலாம் என தெரிந்து கொண்டீர்கள் அல்லவா! இவ்வாறு மண்ணால் ஆன பொருட்களை பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் யாவை? மண்பாண்டங்கள் தயார் செய்யும் ராஜா என்பவர் உங்களோடு சேர்ந்து பொம்மைகளை தயார் செய்தால் நீங்கள் எவ்வாறு மகிழ்வீர்கள்?



### வினவுதல்

1. மண்பாண்டம் செய்யும் ராஜாவும், பொம்மைகள் செய்யும் சீதாவும் உங்கள் வகுப்பறைக்கு வந்தால் நீங்கள் அவர்களிடம் என்னென்ன கேள்விகளைக் கேட்பீர்கள்?



### என்னால் செய்ய முடியுமா?



| | | |
|---|---|---|
| 1. | மண்பாண்டங்களுக்கும் இதர பொருட்களுக்கும் இடையேயுள்ள ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகளை கூறமுடியும். | ஆம்/இல்லை |
| 2. | களிமண்ணால் பானைகளை எவ்வாறு செய்கிறார்கள் என விவரிப்பேன். | ஆம்/இல்லை |
| 3. | களிமண்ணால் காய்கறிகள் மற்றும் பழங்களின் பொம்மைகளை தயார் செய்வேன். | ஆம்/இல்லை |
| 4. | மண் பாண்டங்களின் படங்களை வரைந்து, வண்ணம் தீட்டுவேன். | ஆம்/இல்லை |
| 5. | மண்ணால் என்னென்ன பொருட்களை தயார் செய்வர் என விளக்குவேன். | ஆம்/இல்லை |
| 6. | மண்பாண்டங்கள் மற்றும் பொம்மைகள் பற்றி வினா எழுப்புவேன். | ஆம்/இல்லை |





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# 13. வண்ண வண்ண ஆடைகள்



திருவிழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாட, லட்சுமி தன் அப்பா அம்மாவுடன் கடைத்தெருவுக்குச் சென்றாள். அங்குள்ள துணிக் கடைகளில் வண்ண வண்ண ஆடைகளைக் கண்டனர். லட்சுமிக்கும், அவளுடைய அண்ணனுக்கும் தேவையான ஆடைகளை வாங்கினர். லட்சுமியின் அம்மாவும், அப்பாவும் அவர்களுக்கேற்ற ஆடைகளை வாங்கிக் கொண்டனர். யார் யாருக்கு என்ன ஆடைகளை வாங்கி இருப்பார்கள், என்பதை நீங்களே கற்பனை செய்து பாருங்கள். கீழே உள்ள அட்டவணையில் எழுதுங்கள்.

| லட்சுமிக்காக வாங்கப்பட்ட ஆடைகள் | லட்சுமியின் அண்ணனுக்காக வாங்கப்பட்ட ஆடைகள் | அம்மாவுக்காக வாங்கப்பட்ட ஆடைகள் | அப்பாவுக்காக வாங்கப்பட்ட ஆடைகள் |
|---|---|---|---|
| | | | |



லட்சுமியும் அவளுடைய அண்ணனும் சிறுவர்கள் அல்லவா! லட்சுமியின் அம்மாவும், அப்பாவும் வயதில் பெரியவர்கள் அல்லவா! இவர்கள் அனைவரும் ஒரே வகையான ஆடைகளை வாங்கியிருப்பார்களா? வெவ்வேறு வகையான ஆடைகளை வாங்கியிருப்பார்களா? கீழே உள்ள படங்களில் உள்ள ஆடைகளைப் பாருங்கள். இவற்றில் சிறுவர்கள் அணியும் ஆடைகள் எவை? பெரியவர்கள் அணியும் ஆடைகள் எவை? நீங்களே சொல்லுங்கள்.








SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



சிறுவர்கள் அணியும் ஆடைகளும், பெரியவர்கள் அணியும் ஆடைகளும் வெவ்வேறாக இருக்கும் அல்லவா! உங்கள் வீட்டில் சிறுவர்கள், ஆண்கள், பெண்கள் அணியும் ஆடைகளை வகைப்படுத்துங்கள் பார்க்கலாம்.

| சிறுவர்கள் அணியும் ஆடைகள் | ஆண்கள் அணியும் ஆடைகள் | பெண்கள் அணியும் ஆடைகள் |
|---|---|---|
| | | |

அட்டவணையில் உள்ள ஆடைகளில் உனக்குப் பிடித்த ஆடைகள் எவை? ஏன்?



லட்சுமி, ஆயத்த ஆடையான குட்டை பாவாடை அணிந்து மேரியின் வீட்டுக்குச் சென்றாள். "இந்த ஆடை மிக நன்றாக உள்ளது. எங்கே வாங்கினாய்?" என்று மேரி கேட்டாள். தன் தந்தை கடைத்தெருவில் வாங்கியதாக லட்சுமி கூறினாள். மேரிக்கு அவளுடைய அப்பா கிருஸ்துமஸ் விழாவுக்காக துணி வாங்கி குட்டை பாவாடை தைத்துக் கொடுத்தார். லட்சுமி ஆயத்த ஆடை அணிந்தாள் அல்லவா! ஆனால் மேரிக்கு அவளுடைய அப்பா துணி வாங்கி ஆடையை தைத்தார் அல்லவா! இது போல நாம் வாங்கும் ஆயத்த ஆடைகள் எவை? துணி வாங்கி தைத்து உடுத்திக் கொள்ளும் ஆடைகள் எவை?

நீங்கள் எந்த வகையான ஆடைகளை தைத்து உடுத்துகிறீர்கள்?
எந்த வகையான ஆயத்த ஆடைகளை உடுத்துகிறீர்கள்?

மழை, வெயில், குளிர் போன்றவற்றிலிருந்து நம் உடலை காப்பாற்றிக் கொள்ள ஆடைகளை அணிகிறோம். குளிர்காலத்தில் குளிரிலிருந்து காப்பாற்றிக் கொள்ளவும், மழைக்காலத்தில் மழையில் நனையாமல் இருக்கவும் தனிப்பட்ட ஆடைகளை அணிகிறோம். கீழே உள்ள படங்களைப் பாருங்கள். அவற்றை எப்பொழுது அணிகிறோமோ கூறுங்கள்.







SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



அனைவரும் ஆடைகளை அணிந்துக்கொள்கிறோம். வெவ்வேறு நிலப்பிரிவுகளைச் சேர்ந்த மற்றும் வெவ்வேறு மதங்களைச் சேர்ந்த மக்கள் அவர்களின் சம்பிரதாயங்களுக்கு ஏற்றவாறு வெவ்வேறு உடைகளை அணிகிறார்கள். கீழே உள்ள படங்களைப் பாருங்கள்.





படங்களிலுள்ள ஆடைகளை யார் அணிகிறார்கள்? அவற்றின் சிறப்புத் தன்மைகள் எவை?


பொதுவாக, திருவிழாக்கள், திருமணங்கள் போன்ற நிகழ்ச்சிகளின் போது சிறப்பான ஆடைகளை அணிவார்கள். நீங்கள் திருவிழாவின் போது சுபநிகழ்ச்சிகளின் போதும் பிறந்த நாள் விழாவின் போதும் எவ்வகையான ஆடைகளை அணிவீர்கள்? உங்கள் நண்பர்களும் உங்களைப் போலவே ஆடைகளை அணிகிறார்களா? பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் ஒரே மாதிரியான சீருடைகளை அணிகிறார்கள் அல்லவா! அது போல வெவ்வேறு துறைகளில் வேலை செய்பவர்களும் தனிப்பட்ட சீருடைகளை அணிகிறார்கள். காவல் துறையினர், மருத்துவர்கள், செவிலியர், வழக்கறிஞர்கள், விமான ஓட்டுனர்கள், பெரிய உணவு விடுதிகளில் பணியாற்றும் சமையல் கலை வல்லுனர்கள் போன்றோர் தனிப்பட்ட சீருடைகளை அணிகிறார்கள். கீழே உள்ள படங்களைப் பாருங்கள். எந்தெந்த துறைகளில் பணியாற்றுபவர்கள் எந்தெந்த ஆடைகளை அணிகிறார்கள் என்பதை நீங்களே கூறுங்கள்.








SCERT TELANGANA





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



பேருந்துகளை ஓட்டும் ஓட்டுநர்கள், நடத்துனர்கள், துப்புறவு பணியாளர்கள், தொழிற் சாலைகளில் பணியாற்றும் ஊழியர்கள், வங்கி மற்றும் பெரிய நிறுவனங்களின் காவலாளிகள் ஆகிய அனைவரும் பணி வேலைகளில் சீருடை அணிவதை நாம் பார்க்கலாம். நம் நாட்டின் சார்பாக விளையாடும் விளையாட்டு வீரர்களும், விளையாட்டுப் போட்டிகளின் போது சீருடைகளை அணிகின்றனர்.

உங்கள் பகுதிகளில் என்னென்ன பணி செய்பவர்கள் உள்ளனர்? அவர்கள் அணியும் சீருடைகள் யாவை?

நாம் வகைவகையான ஆடைகளை அணிகிறோம் என்பதைத் தெரிந்துக் கொண்டோம் அல்லவா! ஆடைகளை அணிவது முக்கியமானது. சுத்தமான, அழுக்கற்ற ஆடைகளை அணிவது அதைவிட முக்கியமானது. தினமும் காலையில் எழுந்து குளித்தவுடன், துவைத்த ஆடைகளை அணிய வேண்டும். நாம் அன்றாடம் பயன்படுத்தும் கைக்குட்டைகள், மேல் துண்டுகள் போன்றவற்றையும் துவைத்து பயன்படுத்த வேண்டும்.

**தெரியுமா உங்களுக்கு?**

பருத்தி ஆடைகள் பருத்தியிலிருந்து நூற்கப்படும் நூல் இழைகளிலிருந்து நெசவு செய்யப்படுகிறது. பட்டுப் பூச்சிகளிலிருந்து பட்டு எடுக்கப்பட்டு பட்டுத் துணிகள் நெசவு செய்யப்படுகிறது.




## முன்பு எவ்வகையான ஆடைகளை அணிந்தனர்?

தற்போது, நாம் வகை வகையான வண்ண வண்ண ஆடைகளை அணிகிறோம். அவற்றில் சில, ஆயத்த ஆடைகள், மற்றவைகள் துணி வாங்கி, தைத்து உடுத்துபவை. ஆனால், நம் தாத்தாவும் பாட்டியும் அவர்கள் சிறுவர்களாக இருந்தபோது எது போன்ற ஆடைகளை உடுத்தினார்கள்? அதைப்போலவே அம்மாவும், அப்பாவும் அவர்கள் குழந்தைகளாக இருந்த போது எது போன்ற ஆடைகளை உடுத்தினர்? தெரிந்துக் கொண்டு அட்டவணையில் எழுதுங்கள்.

| அம்மாவும், அப்பாவும் சிறு வயதில் உடுத்திய ஆடைகள் | தாத்தாவும் பாட்டியும் சிறு வயதில் உடுத்திய ஆடைகள் | தற்போது சிறு வயதினர் உடுத்தும் ஆடைகள் |
|---|---|---|
| | | |

SCERT TELANGANA





Downloaded from https:// www.studiestoday.com


Downloaded from https:// www.studiestoday.com



## நாம் வடிவங்களை இடலாமா?

எந்த வகை ஆடைகள் என்றாலும், அவற்றின் மேல் உள்ள வடிவங்களால் தான் அவைகள் அழகாகத் தோன்றுகின்றன. வடிவங்களை அடிப்படையாகக்கொண்டே, நாம் விரும்பிய ஆடைகளை தேர்ந்தெடுக்கிறோம். கீழே உள்ள வடிவங்களைப் பாருங்கள். அவை எவ்வாறு உள்ளன? அவற்றில் உங்களுக்குப் பிடித்த வடிவம் எது? ஏன்? என்று கூறுங்கள்.











இவற்றைப் போன்ற வடிவங்களை நாமும் இடலாமே! தெரியுமா உங்களுக்கு?



## வடிவங்களை இட இவ்வாறுச் செய்யுங்கள்.

ஒரு வெண்டைக்காயை எடுத்து அதை துண்டாக்கிக் கொள்ளுங்கள். துண்டாக்கிய வெண்டைக்காயை, திரவ வடிவத்தில் உள்ள வண்ணத்தில் அல்லது பேனா மையில் நனையுங்கள். வெள்ளைக்காகிதம் அல்லது துணியின் மேல் வடிவங்களை உங்கள் விருப்பத்திற்கேற்றவாறு விரும்பிய இடங்களில் முத்திரை இட்டுக் கொள்ளுங்கள்.



இது போன்றே வடிவங்களை உருளைக்கிழங்கு, கைவிரல்கள், கால் விரல்கள், போன்றவற்றை பயன்படுத்தியும் இடலாமே!

### முக்கியச் சொற்கள்

1. துணிகள் அவசியம்
2. ஆயத்த ஆடைகள்
3. வண்ண வண்ண ஆடைகள்
4. சீருடைகள்
5. துவைத்த துணிகள்
6. வடிவங்கள்
7. காலநிலைக்கேற்ற ஆடைகள்
8. தைத்த ஆடைகள்

SCERT TELANGANA





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## நாம் கற்றவை

* ஆடைகள் மிகவும் அவசியமானது. சிறுவர்கள், பெரியவர்கள் ஆண்கள், பெண்கள் பல வகையான ஆடைகளை அணிகின்றனர்.
* ஆயத்த ஆடைகளை சிலரும், துணி வாங்கி தைத்துக் கொள்ளும் ஆடைகளை சிலரும் அணிகின்றனர்.
* சம்பிரதாயங்களுக்கேற்றவாறு விழாக்களின் போதும், திருமணங்களின் போதும், தனிப்பட்ட சிறப்பான ஆடைகளை அணிகின்றனர்.
* வெவ்வேறு துறைகளில் பணி புரிபவர்கள் பணிக்கேற்ற தனிப்பட்ட சீருடைகளை அணிகின்றனர்.
* பருவ காலத்திற்கேற்றவாறு பல வகையான ஆடைகளை அணிகின்றனர்.
* ஆடைகளின் மேல், பல வண்ணங்களில் வடிவங்களை இடுகின்றனர்.

## இவற்றைச் செய்யுங்கள்




### பாடத்தைப் புரிந்துக் கொள்ளுதல்.

1. ஆடைகளை நாம் ஏன் அணிகிறோம்?
2. சிறுவர்கள், பெண்கள், ஆண்கள் அணியும் மூன்று வகையான ஆடைகளை எடுத்துக்காட்டுடன் எழுதுங்கள்.
3. எந்தெந்த துறைகளில் பணிபுரிபவர்கள் எந்தெந்த தனிப்பட்ட சீருடைகளை அணிகின்றனர்?
4. ஆண்கள் அணியும் ஆடைகளுக்கும், பெண்கள் அணியும் ஆடைகளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை எழுதுங்கள்.
5. ஆயத்த ஆடைகள் மற்றும் துணி வாங்கி தைத்து அணியும் ஆடைகளில் உனக்கு எவை பிடிக்கும்? ஏன்? மூன்று காரணங்களைக் கூறுங்கள். எழுதுங்கள்.
6. நாம் துவைத்த ஆடைகளை அணிய வேண்டும் அல்லவா! ஏன்?




### படம் வரைந்து வண்ணங்களை இடுங்கள்.

1. கீழே கட்டத்தில் உள்ள வடிவத்தைப் பாருங்கள். நீங்களும் அருகேயுள்ள கட்டத்தில் வரையுங்கள். உங்களுக்குப் பிடித்த வண்ணங்களைத் தீட்டுங்கள்.







SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

2. உங்களுக்குப் பிடித்த ஆடைகளின் படங்களை வரைந்து, வண்ணங்களை தீட்டுங்கள்.
3. சேலைகளில் பல வகையான வடிவங்கள் உள்ளன அல்லவா! நீங்களும் உங்கள் வீட்டிலுள்ள சேலைகளைப் பார்த்து, உங்களுக்குப் பிடித்த வடிவங்களை உங்கள் நோட்டுப்புத்தகங்களில் வரைந்து வண்ணமிட்டு காட்சிக்கு வையுங்கள்.



**தகவல்களை சேகரிக்கும் திறன், செயல் திட்டம்.**

1. திருவிழாக்களின் போது உங்கள் நண்பர்கள் ஐவர், வாங்கி அணிந்த ஆடைகளின் விவரங்களை சேகரித்து அட்டவணையில் எழுதுங்கள்.

| வ.எண் | நண்பனின் பெயர் | கொண்டாடிய திருவிழா | எந்த ஆடைகளை வாங்கினர்? | ஆயத்த ஆடைகளா? தைத்து அணியும் ஆடைகளா? |
|---|---|---|---|---|
| | | | | |

* எண்ணிக்கையில் அதிகமானவர்கள் வாங்கிய ஆடைகள் எவை? எந்த திருவிழாக்களுக்காக வாங்கினர்?
* எண்ணிக்கையில் அதிகமானவர்கள் ஆயத்த ஆடைகளை வாங்கினார்களா? அல்லது தைத்து அணியும் ஆடைகளை வாங்கினார்களா?

2. உங்களுக்குப் பிடித்த வடிவங்கள் (டிசைன்கள்) உள்ள துணித் துண்டுகளை சேகரியுங்கள். அவற்றை அட்டைகளில் ஒட்டவைத்து காட்சிக்கு வையுங்கள்.



**பாராட்டுதல்**

1. சிலருக்கு, அணிய ஆடைகள் இல்லை. மற்றும் சிலர், தீ விபத்து, நில அதிர்ச்சி, புயல் போன்றவற்றால் ஆடைகள் உள்பட எல்லாவற்றையும் இழக்கின்றனர். இவர்களுக்கு நாம் எவ்வாறு உதவி செய்யலாம்? நீங்களும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுங்கள்.



**வினவுதல்**


1. ஆடைகளை வாங்க லட்சுமி, தன் அப்பா, அம்மாவுடன் துணிக்கடைக்கு சென்றாள் அல்லவா? லட்சுமியின் அம்மாவும், அப்பாவும் விற்பனையாளர்களை, என்ன என்ன கேள்விகளைக் கேட்டு இருப்பார்கள்? நாம் துணி வாங்கும் போது ஏன் கேள்விகள் கேட்க வேண்டும்?



**என்னால் செய்ய முடியுமா?**



1. ஆடைகளின் அவசியத்தை விவரிக்க முடியும். ஆம்/ இல்லை
2. பலவகையான துணிகளின் விவரங்களை அட்டவணையில் எழுத முடியும். ஆம்/ இல்லை
3. துவைத்த, சுத்தமான ஆடைகளை அணிவது அவசியம், என்று தெரிந்துக்கொண்டேன். ஆகவே தினமும் துவைத்த சுத்தமான ஆடைகளை அணிவேன். ஆம்/ இல்லை
4. வெவ்வேறு துறையினர் அணியும் சீருடைகளை அடையாளம் காண முடியும். ஆம்/ இல்லை
5. பலவகையான வடிவங்களை வரைய முடியும். ஆம்/ இல்லை
6. பல வகையான ஆடைகளை பற்றி கேள்வி கேட்க முடியும். ஆம்/ இல்லை





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# 14. எவை எவை எங்கெங்கு?

வெண்ணிலா மூன்றாம் வகுப்பு படிக்கின்றாள். வெண்ணிலாவுடன் ராஜா, மலர்விழி, மணி போன்ற பல மாணவர்களும் அந்த வகுப்பில் படிக்கின்றனர். அவர்கள் அனைவரும் பெஞ்சுகளின் மேல் வரிசையாக அமர்ந்துள்ளனர். அவர்களின் வகுப்பறையை பார்க்கலாமா!








Downloaded from https:// www.studiestoday.com


Downloaded from https:// www.studiestoday.com

* முன் வரிசையில் அமர்ந்துள்ளவர்கள் யாவர்?
* பின் வரிசையில் அமர்ந்துள்ளவர்கள் யாவர்?
* நடு வரிசையில் அமர்ந்துள்ளவர்கள் யாவர்?
* கீழே உள்ள அட்டவணையிலுள்ள பெயர்களை படியுங்கள். இவர்களுக்கு; முன், பின், வலது-இடது பக்கங்களில், யார், யார்? அமர்ந்துள்ளனரோ அட்டவணையில் எழுதுங்கள்.

| மாணவர் பெயர் | முன் பக்கம் | பின் பக்கம் | வலது பக்கம் | இடது பக்கம் |
|---|---|---|---|---|
| வெண்ணிலா | | | | |
| மேரி | | | | |
| முருகன் | | | | |
| ரகீம் | | | | |



வெண்ணிலா படிக்கும் வகுப்பறையை பார்த்தீர்கள் அல்லவா! யார், யார்? எங்கே அமர்ந்துள்ளனரோ உங்கள் நண்பர்களுடன் கலந்து உரையாடுங்கள். கீழே உள்ள படத்தில் எழுதுங்கள்.






SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



வெண்ணிலா படிக்கும் வகுப்பறை எவ்வாறு உள்ளது, யார் யார் எங்கெங்கு அமர்ந்துள்ளனர் என எழுதினீர்கள் அல்லவா! அது போல உங்கள் வகுப்பில் எத்தனை மாணவர்கள் உள்ளனர்; யார் யார் எங்கெங்கு அமர்ந்துள்ளனர் எனக் காட்ட முடியுமா? கீழே உள்ள சதுரத்தை உங்கள் வகுப்பறை என்று நினைத்துக் கொள்ளுங்கள். வெண்ணிலாவின் வகுப்பறை போல உங்கள் வகுப்பறையில் .....




* கரும்பலகை எங்குள்ளது?
* நாற்காலி எங்குள்ளது?
* மேஜை எங்குள்ளது?
* முன்வரிசையில் யார் யார் அமர்கின்றனர்? அவர்களின் பெயர்களை எழுதுங்கள்.
* மீதமுள்ள வரிசைகளில் யார் யார் அமர்ந்துள்ளனர்? அவர்களின் பெயர்களை எழுதுங்கள்.

உங்கள் வகுப்பறையில் யார் யார் எங்கே அமர்ந்துள்ளனரோ படத்தில் கண்டோம் அல்லவா! வெண்ணிலா படிக்கும் பள்ளியைக் காணலாமா?





S PO


SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



வெண்ணிலா படிக்கும் பள்ளியின் படத்தை இப்படிக் கூட வரையலாம் அல்லவா!. அப்பள்ளியின் படத்தைப் பாருங்கள்.





வெண்ணிலா படிக்கும் பள்ளியில், தரை தளத்தில் ஏழு வகுப்பறைகளும், மேல் தளத்தில் ஏழு வகுப்பறைகளும் உள்ளன. பள்ளியின் முகப்பு பகுதியில் எட்டு தென்னை மரங்கள் உள்ளன. அப்பள்ளியின் வரைபடத்தை மேலே காட்டப்பட்டது போல் அடையாள குறியீடுகளுடன் வரையலாம்.


உங்கள் பள்ளியில் எத்தனை வகுப்பறைகள் உள்ளன? பள்ளியின் முகப்பு மற்றும் பின் பகுதிகளில் என்ன மரங்கள் உள்ளன? எத்தனை மரங்கள் உள்ளன? வெண்ணிலா படிக்கும் பள்ளியின் வரைபடத்தை மேலே பார்த்தோம் அல்லவா! அது போல உங்கள் பள்ளியின் வரைபடத்தையும் ஒரு வெள்ளைத்தாளின் மீது வரையுங்கள். நீங்கள் வரைவதற்கு முன்பு, மரங்கள் வரைவதற்கான ஒரு அடையாள குறியீட்டை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். வகுப்பறைகளுக்கான கதவுகள் எங்கு உள்ளன என்பதை மேலே உள்ள படத்தில் காட்டியபடி வரையுங்கள். பள்ளியின் மதில்சுவர், பள்ளியின் நுழை வாயில், தேசிய கொடிக்கான கொடிமரம் எங்கு உள்ளனவோ அடையாளத்துடன் குறித்துக் கொள்ளுங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

வெண்ணிலா, தினந்தோறும் பள்ளிக்கு நடந்து வருகிறாள். வெண்ணிலா வசிக்கும் ஊரில் என்னென்ன உள்ளன தெரியுமா? அது போல வெண்ணிலா வீட்டிலிருந்து பள்ளிக்கு வரும் வழியில் என்னென்ன உள்ளன தெரியுமா? கீழே உள்ள படத்தைப் பாருங்கள். உங்கள் நண்பர்களுடன் கலந்துரையாடுங்கள்.




* யாருடைய வீடு பள்ளிக்கு அருகில் உள்ளது?
* வெண்ணிலா, பூங்கா வழியாக பள்ளிக்குச் செல்லும் வழியில் எவை எவை உள்ளன?
* வெண்ணிலா பள்ளிக்கு எந்தெந்த வழிகளில் செல்ல முடியுமோ வரைந்துக் காட்டுங்கள்.




Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ஒரு பகுதியில் உள்ள வீடு, பள்ளி, மருத்துவமனை, தோட்டம், ஆழ்துளை கிணறு போன்றவற்றை உள்ளது உள்ளபடி வரைபடத்தில், காட்ட முடியாது. இவைகளை அடையாள குறியீடு மூலம் காட்டுவர்.



வெண்ணிலாவின் ஊரில், எவை எவை எங்கெங்கு உள்ளன, என்பதைக் காட்ட, கீழே உள்ள குறியீடுகளைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




வெண்ணிலா வசிக்கும் ஊரின் படத்தைப் பார்த்தீர்கள் அல்லவா! அடையாள குறியீடுகளுடன் காட்டப்பட்டுள்ளது, அது போல உங்கள் ஊரிலிருந்து பள்ளிக்கு வரும் வழியை வரைய முடியுமா? இதற்காக கீழே உள்ளது போல செய்யுங்கள்.

* முதலாவதாக உங்கள் பள்ளியை நடுவில் குறியுங்கள். அதற்கு அடையாளமாக S என்று குறியுங்கள்.
* உங்கள் பள்ளியிலிருந்து உங்கள் வீடு எங்கு உள்ளதோ குறியுங்கள். அதற்கு அடையாளமாக  என்று குறியுங்கள்.
* அது போல உங்கள் நண்பர்களின் வீடுகளும், எங்கு உள்ளன என்பதை குறியீடுகளுடன் குறியுங்கள்.
* இப்பொழுது உங்கள் வீட்டிலிருந்து உங்கள் பள்ளிக்குச் செல்லும் வழியை கோடிட்டு காட்டுங்கள்.
* அது போல உங்கள் நண்பர்களின் வீடுகளிலிருந்து பள்ளிக்கான வழியை கோடிட்டு காட்டுங்கள்.






SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இப்போது நீங்கள் வீட்டிலிருந்து பள்ளிக்கு வரும் வழியில் சாலையின் இடது மற்றும் வலதுபுறம் என்னென்ன உள்ளன என்பதைப் பாருங்கள். மரங்கள் இருந்தால் என்ற குறியீட்டை வரையுங்கள். கோயில் இருந்தால் என்ற அடையாள குறியீட்டை வரையுங்கள். மசூதி இருந்தால் என்ற குறியீட்டை வரையுங்கள். தேவாலயம் (சர்ச்) இருந்தால் என்ற குறியீட்டை வரையுங்கள். தபால் அலுவலகம் இருந்தால் PO என்ற அடையாளக் குறியீட்டை வரையுங்கள். மருத்துவமனை இருந்தால் D என்றும், பூங்கா இருந்தால் என்ற அடையாளக் குறியீடுகளையும் வரையுங்கள்.

உங்கள் பள்ளியிலிருந்து உங்கள் வீட்டுக்குச் செல்லும் வழியை படத்தில் பார்த்தீர்கள் அல்லவா! இது போல உங்கள் ஊரின் வரைபடத்தையும் வரையலாம். இது போல் ஊர் அல்லது எந்த ஒரு பகுதியின் வரைபடத்தையும் மேற்கண்ட அடையாளக் குறியீடுகளை பயன்படுத்தி வரைய முடியும்.

## முக்கியச் சொற்கள்

1. படம்
2. பகுதி
3. அடையாளக் குறியீடு
4. முன் பின்
5. வழி

## நாம் கற்றவை

* வகுப்பறை, பள்ளி, தெரு, கிராமம்... இப்படி எல்லா வரைபடங்களையும் வரையலாம்.
* வரைபடத்தில் பள்ளி, மருத்துவமனை, பூங்கா, போன்றவற்றைக் குறிப்பிட்ட அடையாளக் குறியீடுகளுடன் காட்ட முடியும்.
* ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குச் செல்ல அடையாளக் குறியீடுகள் பயன்படுகின்றன.

## இவற்றைச் செய்யலாமே



### புரிந்துக் கொள்ளுதல்

1. உங்கள் வீட்டிலிருந்து பள்ளிக்குச் செல்லும் வழிகளில் எவை எவை எந்தெந்த (இடது (அ) வலது) பக்கங்களில் உள்ளன?

இடது பக்கம் ................................ வலது பக்கம் ................................

2. உங்கள் வீட்டின் அருகில் யாருடைய வீடுகள் உள்ளன? எழுதுங்கள்.

| வலது பக்கம் | இடது பக்கம் | முன் | பின் |
|---|---|---|---|
| | | | |









SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



### படம் வரையும் திறன்




1. **படத்தைப் பாருங்கள்**
   - குறியீடுகளை அடிப்படையாகக் கொண்டு வேணு வசிக்கும் ஊரில் என்னென்ன உள்ளன எனச் சொல்லுங்கள்.
   - வேணுவின் வீட்டிலிருந்து மருத்துவமனைக்குச் செல்லும் வழியை கோடிட்டு வரையுங்கள்.
   - வேணு வீட்டிலிருந்து பள்ளிக்குச் செல்லும் வழிகளைக் காட்டுங்கள்.
2. உங்கள் வீட்டிலிருந்து பள்ளிக்குச் செல்லும் வழியைக் காட்டும் வரைபடத்தை வரையுங்கள்.



### தகவல் திறன்கள் - செயல் திட்டப்பணி :

1. உங்கள் கிராமத்தில் எவை எவை உள்ளன என்றும் விவரங்களை சேகரியுங்கள். (தபால் அலுவலகம், பள்ளி, கோயில், வங்கி, நியாய விலைக் கடை, மருத்துவமனை முதலியவை) ஒவ்வொன்றுக்கும் ஒரு அடையாளக் குறியீட்டை பயன்படுத்துங்கள். உங்கள் கிராமத்திலுள்ள தெருக்கள் மற்றும் சாலைகளை வரையுங்கள். கிராமத்தில் எவை எவை எங்குள்ளன என அடையாளக் குறியீட்டுடன் வரைபடத்தில் காட்டுங்கள். கிராம வரைபடத்தை வரையுங்கள்.



### வினவுதல்

1. வெண்ணிலாவும் அவளுடைய தோழிகளும் ஊரின் வரைபடத்தை வரைய ஆசிரியரின் உதவியை நாடினர். ஆசிரியரை அவர்கள் வரைபடம் தொடர்பாக பல கேள்விகளைக் கேட்டனர். அது போல நீங்கள் உங்கள் ஊரின் வரைபடம் வரைய வேண்டுமானால் உங்கள் ஆசிரியரை என்னென்ன கேள்விகளைக் கேட்பீர்கள்? அவற்றை எழுதுங்கள்.



### என்னால் செய்ய முடியுமா?



| | | |
|---|---|---|
| 1. | வரைபடத்தைப் படித்து என்னால் புரிந்துக் கொள்ள முடியும். | ஆம் / இல்லை |
| 2. | வரைபடத்திலுள்ள அடையாளக் குறியீடுகளை புரிந்துக் கொள்ள முடியும். | ஆம் / இல்லை |
| 3. | வீட்டிலிருந்து பள்ளிக்கு செல்லும் வழியை வரைய முடியும். | ஆம் / இல்லை |
| 4. | வகுப்பறை மற்றும் பள்ளியின் வரைபடங்களை வரைய முடியும். | ஆம் / இல்லை |
| 5. | கிராம வரை படம் வரைய தேவைப்படும் கேள்விகளை ஆசிரியரிடம் கேட்க முடியும். | ஆம் / இல்லை |






SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# 15. நீரும் நமது தேவைகளும்





**மாணவர்கள் அனைவரும் வகுப்பறையில் இப்பாடலை பாடுகிறார்கள். நீங்களும் பாடுங்கள். பாட்டைப்பற்றி பேசுங்கள்.**

மழை வருது! மழை வருது!
நெல்லை அள்ளுங்க.
நிலம் முழுவதும் நனைக்கவருது!
சீக்கிரம் அள்ளுங்க.
சாலையிலே வெள்ளம் ஓடி வருது!
காகித கப்பல் விடுங்க.
மக்கள் தாகம் தீர்க்க வருது!
மகிழ்ந்து ஆடுங்க.
குடை எடுத்துக் குதூகலமா
ஆடிப் பாடுங்க.

மழைநீர் எங்கு சேருகிறது?
நீர் எங்கு கிடைக்கிறது?





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

குளங்கள் குட்டைகள், கால்வாய்கள், கிணறுகள், ஏரிகள், நதிகள் போன்ற நீர் மூலங்களிலிருந்து நமக்கு நீர் கிடைக்கிறது. சாதாரணமாக நாம் கிணறுகள், குழாய்கள், கைபம்பு, கால்வாய்கள் போன்றவற்றிலிருந்து நீரை கொண்டுவந்து பாத்திரங்களில் சேமித்து வைத்து நம் தேவைகளுக்கு பயன்படுத்துகிறோம்.



முருகனின் வீட்டில், நீரை சேமிக்க கீழ்காணும் பாத்திரங்களை பயன்படுத்துகின்றனர். அவற்றைப் பாருங்கள்.



படத்தில் காட்டப்பட்டுள்ள பாத்திரங்களில் நீரை முழுமையாக நிரப்பினால் எந்த பாத்திரத்தில் அதிகமான நீர் பிடிக்கும்?
உங்கள் வீட்டில் எந்தெந்த பாத்திரங்களில் நீரை சேமிக்கிறீர்கள்?


வீடுகளில் நீரை சேமித்து வைக்க, சில்வர் குடங்கள், மண்குடங்கள், வாளிகள், சிமெண்ட் தொட்டிகள் போன்றவற்றைப் பயன்படுத்துகிறோம். இந்த நீரை நம் தேவைகளுக்கு பயன்படுத்திக் கொள்கிறோம்.

### நமக்கு நீர் ஏன் தேவை?



நாம் தினமும்; காலையில் விழித்ததிலிருந்து, இரவில் உறங்கச் செல்லும்வரை நீரை பல தேவைகளுக்குப் பயன்படுத்துகிறோம். கீழ்காணும் படங்களைப் பார். அவர்கள் என்ன செய்கின்றனர்?







SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



நீரை இன்னும் எந்தெந்தப் பணிகளுக்குப் பயன்படுத்துகிறோம், என்பதை உங்கள் நண்பர்களோடு விவாதித்து எழுது. எந்தெந்த பணிகளுக்கு உனக்கு நீர் அதிகம் தேவைப்படுகிறது? எந்தெந்தப் பணிகளுக்கு குறைவாக தேவைப்படுகிறது?

### செடிகள் வளர நீர் தேவையா?

நமக்கு நீர் அவசியமானது என தெரிந்துக்கொண்டீர்கள் அல்லவா? நமக்கு மட்டுமின்றி வேறு எவற்றிற்கு நீர் தேவைப்படுகிறது தெரியுமா? நம்முடன் சேர்ந்து செடிகளுக்கும் நீர் தேவைப்படுகின்றதா? சிந்தியுங்கள். இதற்கு கீழ் கண்ட செயலை செய்துப் பாருங்கள்.



**செய்துப் பாருங்கள். என்ன நிகழ்ந்தது என்று கூறுங்கள்.**

இரண்டு செடிகளை எடுத்துக் கொள். ஒன்றுக்கு மட்டும் தினமும் நீரை ஊற்று. இரண்டாவது செடிக்கு நீர் ஊற்ற வேண்டாம். இவ்வாறு ஒருவாரம் செய். பிறகு இரண்டு செடிகளையும் பார். என்ன நிகழ்ந்தது என்பதை பட்டியலிடு.

| கிழமை | என்ன நிகழ்ந்தது? | |
|---|---|---|
| | முதல் செடி | 2வது செடி |
| திங்கள் | | |
| செவ்வாய் | | |
| புதன் | | |
| வியாழன் | | |
| வெள்ளி | | |
| சனி | | |
| ஞாயிறு | | |



முதல் செடி



2வது செடி



நீர் இல்லாமல் போனால் செடிகள் வாடிவிடும். எனவேதான் நம் வீடுகளிலும் பள்ளியிலும் உள்ள செடிகளுக்கு தினமும் நீர் ஊற்ற வேண்டும். அதன்பிறகு தான் செடி நன்றாக வளரும். அழகாகக் காட்சியளிக்கும்.

முருகன், பள்ளித் தூய்மைக் குழுவில் உறுப்பினராக இருக்கிறான். நண்பர்களோடு சேர்ந்து பள்ளியில் ரோஜா, மந்தாரை, போன்ற செடிகளை நட்டான். அவற்றிற்கு தினமும் நீர் ஊற்றினான். சில நாட்களில் அச்செடிகளில் மலர்கள் மலர்ந்தன. வழிபாட்டு நேரத்தில் ஆசிரியர்கள் முருகனின் பணியைப் பாராட்டினர். பள்ளியில் சிறுவர்கள் அனைவரும் செடிகளுக்கு நீர் ஊற்றவேண்டும் என்று அறிவுறுத்தினர்.

நீங்களும் இதுபோல் செடிகளுக்கு நீர் ஊற்றுகின்றீரா? உங்கள் வீடுகளிலும் பள்ளியிலும் உள்ள செடிகளுக்கு நீர் ஊற்றுங்கள். நீங்கள் நீர் ஊற்றி வளர்க்கும் செடிகள், பூத்துக் குலுங்கும் போது உங்களுக்கு என்ன தோன்றுகிறது! கூறுங்கள்.





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



### விலங்குகளுக்கும் நீர் தேவை.

ஒரு நாள் ஜான், கிரணின் வீட்டிற்கு வந்தான். கிரணின் வீட்டில் ஆங்காங்கே சிறு சிறு நீர்பாத்திரங்கள் காணப்பட்டன. கிரண் அந்த பாத்திரங்களில் நீர் ஊற்றியவுடனே கோழிகள் ஓடிவந்து நீரைக் குடிக்கத் தொடங்கின. கோழிகள் நீரை குடிக்கும் விதத்தைக் கண்டதும் ஜானிற்கு மகிழ்ச்சி பொங்கியது. இதனால் உங்களுக்கு என்ன புரிகிறது? நமக்கும் செடிகளுக்கும் நீர் தேவைப்படுவது போன்றே, விலங்குகளுக்கும் நீர் தேவைப்படுகிறது. விலங்குகளுக்கும் நீர் தேவைப்படுகிறது என்பதற்கு சில எடுத்துக்காட்டுகளை கூறுங்கள். உங்கள் நண்பர்களுடன் யோசித்துப் பாருங்கள்.

நீங்கள் எந்தெந்த விலங்குகள் நீர் அருந்துவதை பார்த்துள்ளீர்கள்? விலங்குகளுக்கு, குடிப்பதற்கு மட்டுமின்றி வேறு எவற்றிற்கு நீர் தேவைப்படுகிறது?

**உங்களுக்குத் தெரியுமா?**



ஒட்டகம் ஒருமுறை நீரை அருந்தினால் பல நாட்களுக்கு அருந்தாமல் இருக்கும். நீர் கிடைக்கும் போது நன்றாக குடித்து நீரை தன்னுடைய உடலில் சேமித்து வைத்துக் கொள்கிறது.

செடிகள் உயிர்வாழ நீர் எவ்வளவு அவசியமோ, அதே போலத்தான் விலங்குகள் உயிர்வாழவும் நீர் மிகவும் அவசியம். விலங்குகளும் பறவைகளும் நீரை குடிக்கவில்லை என்றால் இறந்துவிடும்.

### நாம் எப்படிப்பட்ட நீரைக் குடிக்க வேண்டும்?



ஜானும், கிரணும் பள்ளியில் விளையாடுகின்றனர். ஜானிற்கு தாகம் எடுத்தது. உடனே ஓடிப்போய் தம்ளரைக் குடத்தில் போட்டு மூழ்த்தச் சென்றான். கிரண் உடனே ஜானின் கையைப் பிடித்து அதுபோல் நீரில் கையை அழுத்த வேண்டாம் என்றான். கிரண், ஜானிடம் அவ்வாறு ஏன் கூறி இருப்பான்? கையில் தம்ளரைப் பிடித்து நேராக குடத்தில் அழுத்தினால் என்னவாகும்? சிந்தியுங்கள்.

### செய்து பாருங்கள், என்ன நிகழ்ந்தது என்று கூறுங்கள்.



கிரண் இரண்டு பெரிய கண்ணாடி தம்ளர்களைக் கொண்டு வந்தான். இரண்டையும் நீரில் அழுத்தினான். ஒரு தம்ளரில் உள்ள நீரில் ஜானின் கைகளை அழுத்துமாறு கூறினான். ஜான் அவ்வாறே செய்தான். என்ன நடந்திருக்கும்? நீங்களும் இதேபோன்று செய்துபாருங்கள். முதல் தம்ளரில் உங்கள் கையை அழுத்துங்கள். தம்ளரில் நீர் எந்த நிறத்தில் மாறியது? இரண்டாவது தம்ளரில் நீர் எவ்வாறு உள்ளது? எந்த தம்ளரில் உள்ள நீர் அழுக்காக மாறியது? இந்த அழுக்கு எங்கிருந்து வந்தது? இதன்மூலம் நீங்கள் அறிவது என்ன?






SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

நாம் விளையாடும்போதும் வேலைகளை செய்யும்போதும் நம் கைகளில் தூசி, மண்,கறைகள் ஆகியவை ஒட்டிக்கொள்கின்றன. கைகளைக் கழுவாமல் குடிக்கும் நீரில் கைகளை தோய்த்தால் அவையாவும் நீரில் கலந்துவிடும். அதுபோன்ற நீரைக் குடித்தால் நோய்கள் வரும். எனவே தூசு, மண் போன்றவை கலக்காத தூய்மையான நீரை குடிக்கவேண்டும்.



கிணறுகள், குளங்கள், ஏரிகள், கால்வாய்கள், போன்றவற்றில் நீர் உள்ளது என்று தெரியுமல்லவா! கீழ்காணும் ஏரியின் படத்தைப் பாருங்கள். இது ஜானின் ஊரில் உள்ள ஏரி. அவ்வூரில் உள்ள அனைவரும் இந்த ஏரியிலிருந்தே நீர் கொண்டுவருகின்றனர்.





ஏரியில் யார் யார் என்னென்ன செய்கின்றனர்?
அவர்கள் செய்யும் வேலைகளால் ஏரியின் நீர் என்னவாகிறது?
இந்த ஏரியின் நீரைக் குடித்தால் என்ன நடக்கும்?
ஒருவேளை ஏரியின் நீரை மட்டுமே குடிக்க நேர்ந்தால்,
நாம் என்ன செய்யவேண்டும்.?

ஏரிகளிலும் கிணறுகளிலும் குப்பை கூளங்கள், தூசு, மண், துணி துவைத்தல், பாத்திரங்களைக் கழுவுதல், போன்றவற்றால் அழுக்குகள் கலக்கின்றன. அவற்றோடு நமக்குத் துன்பம் விளைவிக்கும் கிருமிகளும் நீரில் கலக்கின்றன. இது போன்ற நீரை தூய்மையற்ற நீர் என்பர். இதையே மாசடைந்த நீர் என்றும் கூறுவர். இது போன்ற நீரைக் குடித்தால் வாந்தி, பேதி, மஞ்சள் காமாலை, காலரா போன்ற நோய்கள் வரும். ஒருவேளை ஏரியின் நீரையே நாம் குடிக்க நேர்ந்தால் அதைக் காய்ச்சி வடிகட்டி, ஆறவைத்துக் குடிக்க வேண்டும்.





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



## நல்ல பழக்கங்கள்

நமக்கு வரும் நோய்களில் பெரும்பாலானவை, மாசடைந்த நீரை குடிப்பதாலேயே வருகின்றன. இதனால் நாம் சில எச்சரிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நமக்கு நல்ல பழக்கங்கள் இருக்க வேண்டும். அவை என்ன என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

குடத்தில் உள்ள நீரை கரண்டியால் எடுத்து தம்ளரில் ஊற்றிக் கொண்டு குடிக்க வேண்டும்.
தம்ளரில் நீரை குடிக்கும் போது வாய்மீது ஒட்டாமல் குடிக்க வேண்டும்.
தம்ளரை தூக்கிப் பிடித்துக் குடிக்க வேண்டும்.
ஏரியிலும் கிணறுகளிலும் உள்ள நீரை குடிக்கக் கூடாது.
ஆழ்துளை கிணறுகள், குழாய்கள் மூலம் வரும் தூய்மையான பாதுகாக்கப்பட்ட நீரையே குடிக்க வேண்டும்.
ஒருமுறை பயன்படுத்திய பருமன் இல்லாத பிளாஸ்டிக் புட்டிகளில் நீரை குடிக்கக் கூடாது.
பிளாஸ்டிக் புட்டிகளில் உள்ள நீரில் பிளாஸ்டிக் கரைந்து விஷப்பொருட்கள் ஏற்படும்.
பருமன் உள்ள பிளாஸ்டிக் புட்டிகளிலேயே நீரை எடுத்துக்கொள்ள வேண்டும்.



## தூய்மையான நீர் அனைவருக்கும் கிடைக்குமா?

குமரனின் வீட்டில் குழாய் உள்ளது. குழாயில் வரும் நீரை அவர்கள் மட்டுமே பயன்படுத்துகின்றனர். பார்த்திபன் வீட்டில் குழாய் இல்லை. தெருவிலுள்ள குழாயில் நீர் எடுத்துக்கொள்கின்றனர். அந்த தெருக் குழாய் அருகில், எப்படி உள்ளது என்பதை படத்தில் பாருங்கள்.



இது போன்ற சுற்றுப்புறத்தில் உள்ள நீரை கொண்டுவந்து குடித்தால் என்ன நேரிடும்? தெருக்குழாய் அருகே தூய்மையாக இருக்க வேண்டுமெனில் நாம் என்ன செய்ய வேண்டும்.

பொதுவாக நீரை சில்வர் குடங்களிலும் மண் குடங்களிலும் நிரப்பிவைத்துக் கொள்வர். சிலர் வீட்டில் **பெரிய மண்தொட்டியில் (ரஞ்சன்)** கூட நீரை நிரப்பி வைத்துக் கொள்வர். **பெரிய மண்தொட்டியில்** உள்ள நீரை நீ எப்போதாவது குடித்தாயா? எவ்வாறு இருந்தது? **பெரிய மண்தொட்டியில்** நீர் ஊற்றிய பின் ஒருமணி நேரம் கழித்து பாருங்கள். என்ன கவனித்தீர்கள்? மண்பானையில் உள்ள நீர் குளிர்ச்சியாக இருக்கும். குமரன் தன் மாமா வீட்டில் நீர்க் குடுவையைக் கண்டான். அத்துடன் மின்சாரத்தின் மூலம் நீரைத் தூய்மை படுத்தும் கருவியையும் பார்த்தான்.





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com







இது எதற்கு என்று கேட்டான். இது நீரைத் தூய்மையாக்குகிறது என்று குமரனின் மாமா கூறினார். சரி உங்கள் ஊரிலும் இது போன்ற நீர்க் குடுவைகளில் நீர் கொண்டு வருகிறீர்களா? ஏன் கொண்டு வருகிறீர்கள்? இன்னும் யார் யார் வீட்டில் நீரைத் தூய்மையாக்கும் இயந்திரம் உள்ளது என்று தெரிந்து கொண்டு சொல்லுங்கள்.

நீரில் குளோரின் வில்லைகளைப் போடுதல் அல்லது பிளீச்சிங் பவுடர் போட்டால் நீரிலுள்ள கிருமிகள் அழிந்து விடும்.



### நீர்ப் பற்றாக்குறை



குமரனின் வீட்டில் பழைய கிணறு ஒன்று உள்ளது. குமரனின் தாய், கோடைக்காலத்தில் கிணற்றில் வாளியைப் போட்டார்கள். ஆனால் வாளிக்கு நீர் எட்டவில்லை. கயிறும் போதவில்லை. கயிறு கொண்டு வரும்படி குமரனிடம் கூறினார்கள். “கயிறு இருக்கிறது அல்லவா! மீண்டும் எதற்கு?” என்று கேட்டான். “கோடைக்காலம் அல்லவா! கிணற்றில் நீர் ஆழத்திற்கு சென்றுவிட்டது. வாளிக்கு எட்டவில்லை” என்று குமரனின் தாய் கூறினார்.

**இவ்வாறு கிணற்றில் உள்ள நீர் ஏன் ஆழத்திற்கு சென்று இருக்கும்? எந்த காலத்தில் கிணற்றில் நீர் குறையும்? எதற்கு?**

கோடைக் காலத்தில் கிணறுகளும் ஏரிகளும் வறண்டு விடுகின்றன. ஆழ்துளை கிணறுகளில் கூட நீரானது ஆழத்திற்குச் சென்றுவிடும். ஊரில் மக்களுக்குத் தேவையான அளவு நீர் கிடைக்காமல் போய்விடும். இது போன்ற நிலையை நீர் வறட்சி என்பர். அது போன்ற ஊர்களுக்கு அரசாங்கம் டாங்குகள் மூலம் நீரை வழங்கி வருகிறது. இது போல் உங்கள் ஊரில் எப்போதாவது நடந்ததா? டாங்குகளில் நீரை எப்பொழுதாவது எடுத்து வந்தார்களா? ஏன் எடுத்து வந்திருப்பர்? இன்னும் எந்தெந்த சூழ்நிலைகளில் டாங்குகளில் நீரை எடுத்து வருவர்?

SCERT TELANGANA





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



கோடைக் காலத்தில் நீர் கிடைக்காவிட்டால் என்னென்ன இன்னல்கள் ஏற்படுகின்றன? கோடைக் காலத்தில் நீர்ப் பற்றாக்குறை தீர என்ன செய்ய வேண்டும்?




## நீரை சேமித்தல்

ரவி கோடை விடுமுறையில் ஐதராபாத்திற்கு வந்தான். அவனுடைய சிற்றப்பாவின் வீட்டின் புழக்கடையில் உள்ள பெரிய பள்ளத்தைக் கண்டான். இது எதற்கு? என்று கேட்டான் ரவி. இது மழைநீர் சேமிக்கும் பள்ளம். மழைக்காலத்தில் மழைநீரை இந்த பள்ளத்திற்கு திருப்பிவிட்டால் பூமியில் நீரின் இருப்பு அதிகரிக்கும். நீர் இருப்பை அதிகரிப்பது எவ்வளவு முக்கியமோ நீரை சிக்கனமாக பயன்படுத்துவதும் அவ்வளவு முக்கியமாகும் என்று ரவியின் சிற்றப்பா கூறினார்.

நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். காத்துக் கொள்ள வேண்டும் என்று அறிந்து கொண்டீர்கள் அல்லவா! சரி, கீழ்காணும் படங்களை பாருங்கள். இவற்றின் மூலம் நீங்கள் அறிந்தது என்ன?



முதல் படத்தில் நீர் என்னவாகிறது? இது போல் ஏன் நடக்கிறது? இரண்டாவது படத்தில் என்ன நடக்கிறது? இன்னும் இதுபோல் எவ்வெப்பொழுது நீர் வீணாகிறது? மூன்றாவது படத்தைப் பாருங்கள். நீர் எவ்வாறு வீணாகிறது? இதனால் யாருக்கு நஷ்டம் ஏற்படுகிறது? இது போன்ற சூழ்நிலைகளில் நீர் வீணாக்காமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

நீர் நமக்கு மிகவும் இன்றியமையாதது. நாம் உயிர் வாழ நீர் அவசியம். இதுபோன்று நீரை வீணடிக்கக்கூடாது. சிக்கனமாக பயன்படுத்தவேண்டும். தூய்மையான நீரையே குடிக்க வேண்டும். நீரை பயன்படுத்தும் முன் எச்சரிக்கையாக பார்த்துக்கொள்ள வேண்டும்.

நீர் வீணாவதைத் தடுப்போம். நீரை சிக்கனமாக பயன்படுத்துவோம்
இது நம் கடமை

### முக்கிய சொற்கள்

1. நீர் இருப்புகள்
2. நீரின் பயன்பாடுகள்
3. தூய்மையான நீர்
4. மாசடைந்த நீர்
5. நீரை வீணாக்குதல்
6. மழைநீர் சேமிப்பு பள்ளம்.

### நாம் கற்றவை

* நீரோடைகள், கால்வாய்கள், கிணறுகள், ஆறுகள் போன்ற நீர் மூலங்களிலிருந்து நீர் கிடைக்கிறது.
* குடித்தல், துணி துவைத்தல், பாத்திரங்களைக் கழுவுதல், குளித்தல் போன்றவற்றிற்காக நீரைப் பயன்படுத்துகிறோம்.
* விலங்குகள், தாவரங்கள் உயிர்வாழ நீர் அவசியமாகிறது.
* பொதுவாக நீரை குடம், வாளி, தோண்டி, தொட்டி, டாங்குகளில் சேமிப்பர்.
* மாசடைந்த நீரைக் குடிப்பதால் பல நோய்கள் ஏற்படும்.
* நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். தூய்மையான நீரை மட்டுமே குடிக்க வேண்டும்.
* குழாய்களிலிருந்தும், டாங்குகளிலிருந்தும் பிறவற்றிலிருந்தும் நீர் வீணாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

### இவற்றை செய்யுங்கள்



#### பாடத்தை புரிந்துக் கொள்ளுதல்

1. நீர் இல்லாமல் போனால் என்ன நிகழும்?
2. நீர் மூலங்களுக்கு சில எடுத்துக்காட்டுகளைக் கூறுங்கள். உங்கள் பகுதியில் உள்ள நீர் மூலங்கள் யாவை?
3. உங்கள் வீட்டில் நீரை எவற்றில் சேமித்து வைக்கிறீர்கள்?
4. உங்கள் வீட்டில் நீர் எவ்வெப்பொழுது வீணாகிறது? இதைக் தடுக்க நீங்கள் என்ன செய்கிறீர்கள்?
5. உங்கள் சுற்றுப்புறங்களில் நீர் எங்கெங்கு வீணாகிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் கூறு.
6. ஏரி நீர், குளத்தின் நீர் இவற்றில் எது குடிக்க உதவும்? ஏன்?
7. நீரை நாம் சிக்கனமாக பயன்படுத்த வேண்டுமல்லவா! இதற்காக நீங்கள் செய்யும் சுமார் 5 வேலைகளை எழுதுங்கள்.





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

8. நாம் அனைவரும் தூய்மையான நீரை குடிக்க வேண்டும்? ஏனெனில்.....
9. சில பகுதிகளில் குடிப்பதற்கும், பிற தேவைகளுக்கும் கூட டாங்கரில் நீரை வழங்கி வருகின்றனர். அப்பகுதியிலுள்ளோர் நீரை எவ்வாறு பயன்படுத்தவேண்டும்? வீணாகாமல் இருக்க என்னென்ன செய்ய வேண்டும்?



### படங்களை வரையுங்கள். வண்ணங்களைத் தீட்டுங்கள்.

1. உங்கள் வீட்டில் நீரை எதில் சேமிப்பீர்? அவற்றின் படங்களை வரையுங்கள்.



### தகவல் திறன்கள் - திட்டப் பணி

1. நாம் தினமும் நீர் அருந்துகிறோம் அல்லவா! எத்தனை முறை அருந்துகிறோம் தெரியுமா? தெரிந்துகொள்ள வேண்டுமென நினைக்கிறீர்களா! எனில் இவ்வாறு செய்யுங்கள். நீங்கள் காலை முதல் இரவு வரை எத்தனை தம்ளர் நீரை குடிக்கிறீர்கள் எனக் கணக்கிடுங்கள். அந்த விவரங்களை கீழே உள்ள அட்டவணையில் எழுதுங்கள்.

| நீர் குடித்த நேரம் | எத்தனை தம்ளர் நீரை குடித்தீர்கள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

* மொத்தம் எத்தனை தம்ளர் நீரை குடித்தாய்?
* எந்த நேரத்தில் அதிக முறை நீரை குடித்தாய்?
* உன்னைப் போலவே உங்கள் நண்பர்களும் எழுதினார்கள் அல்லவா! அவர்களும் எத்தனை தம்ளர் நீரை குடித்தார்கள் என்று தெரிந்து கொள்ளுங்கள்.
* உன்னைவிட அதிகமான நீரை குடித்தவர்கள் யார்? அனைவரையும் விட அதிகமாக நீரை குடித்தவர்கள் யார்?
* அனைவரையும் விட குறைவாக நீரைக் குடித்தவர்கள் யார்?



**பாராட்டுதல்**

1. லதா ஒரு நாள் விளையாடுவதற்காக தன் தோழியின் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தாள். வழியில் சில குழந்தைகள் கை பம்பை அடித்து நீரை வீணாக்கிக் கொண்டிருந்தனர். அதைக் கண்டு நீரை வீணாக்க வேண்டாம் என லதா அக்குழந்தைகளுக்கு விளக்கினாள். லதா என்ன கூறியிருப்பாள்? அவள் நிலையில் நீங்கள் இருந்திருந்தால் என்ன செய்திருப்பீர்கள்? லதா செய்தது சரியா? தவறா? ஏன்?



**வினவுதல்**

1. ராமன் நீர் சேமிப்பு பற்றியும், நீர் தூய்மையடைதல் பற்றியும் அறிய விரும்பினான். இதற்காக அவனுடைய ஆசிரியரிடம் சென்றான். ராமன் அவனுடைய ஆசிரியரை என்னென்ன கேட்டிருப்பான்? ஆசிரியர் என்ன கூறியிருப்பார்?
2. கார்த்திக் ஒரு முறை ஐதராபாத்திற்கு வந்தான். அங்கு டாங்கரில் நீ கொண்டு வருவதைக் கண்டான். கார்த்திக் மிகவும் ஆச்சரியமடைந்தான். டாங்கரில் நீர் ஏன் கொண்டு வரவேண்டும் என்று அங்கு முரளியின் தாத்தாவிடம் கேட்டான். கார்த்திக் என்ன கேட்டிருப்பான்? நீயாக இருப்பின் என்ன என்ன கேட்பாய்?



**என்னால் செய்ய முடியுமா?**



| | | |
|---|---|---|
| 1. | எந்தெந்த மூலங்களிலிருந்து நமக்கு நீர் கிடைக்கிறது என்பதைச் சொல்வேன். | ஆம்/இல்லை |
| 2. | நீர் ஏன் மாசடைகிறது என்பதைக் கூறுவேன். | ஆம்/இல்லை |
| 3. | நீரை ஏன், எதற்கு சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்பதைக் கூறுவேன். | ஆம்/இல்லை |
| 4. | எங்கள் பகுதியில் உள்ள நீர் மூலங்களை குறிப்பிடுவேன். | ஆம்/இல்லை |
| 5. | நீர் வீணாகுதல், சேமித்தல் குறித்து வினா எழுப்புவேன். | ஆம்/இல்லை |





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com


Downloaded from https:// www.studiestoday.com

# 16. ஊருக்குச் செல்வோம்



ஆறுமுகம் அவனுடைய உறவினர் வீட்டு திருமணத்திற்கு அம்மா, அப்பாவுடன் இணைந்து மும்பைக்கு புறப்பட்டான். அவர்கள் அனைவரும் வீட்டிலிருந்து இரயில் நிலையத்திற்கு  வில் சென்றனர். நடைமேடைக்கு சென்று மும்பை செல்லும்  ல் ஏறினர். இரயிலில் இரவு முழுவதும் பயணம் செய்து காலையில் மும்பை வந்தடைந்தனர். இரயில் நிலையத்தின் அருகிலுள்ள உறவினர் வீட்டிற்கு  ல் சென்றனர். காலையில் அமெரிக்காவிலிருந்து திருமணத்திற்கு வரும் அவனுடைய மாமாவை சந்திக்க  தில் விமான நிலையத்திற்குச் சென்றனர். அங்கு  தை பார்த்தனர்.  த்திலிருந்து இறங்கிய மாமாமவுடன் சேர்ந்துக்கொண்டு  ல் வீடுவந்துசேர்ந்தனர். மாலையில்  ல் கடலின் மத்தியில் உள்ள எலிபெண்டா குகைகளுக்குச் சென்றனர். அடுத்தநாள் திருமணம் நன்றாக நடந்தது. திருமணச் சாமான்களை  யில் போட்டுக் கொண்டு அனைவரும் திரும்பி வீட்டிற்குப் பயணம் செய்தனர்.

பயணம் என்றால் என்ன?
ஆறுமுகம் எந்தெந்த வாகனங்களில் பயணம் செய்தான்?
எந்தெந்த வாகனங்களைக் கண்டான்?
மேலே காட்டியுள்ள வாகனங்களில் நீங்கள் எவற்றைப் பார்த்தீர்கள்?
எவற்றில் பயணம் செய்தீர்கள்?





SCERT TELANGANA


Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



ஆறுமுகம் எந்தெந்த வாகனங்களைப் பார்த்தான் என்பதையும், எவையெவற்றில் பயணம் செய்தான் என்பதையும் தெரிந்துக் கொண்டீர்களல்லவா! வாகனங்கள் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குச் செல்ல பயன்படுகின்றன. இவற்றில் பயணம் செய்து நாம் செல்ல நினைக்கும் இடத்தை அடையலாம்.

இதுவரை வெவ்வேறு வகையான வாகனங்களைக் குறித்து தெரிந்துக் கொண்டீர்களல்லவா! இவற்றில் சில நீரிலும், சில ஆகாயத்திலும், மேலும் சில நிலத்தின் மீதும் பயணம் செய்கின்றன. கீழ்காணும் படங்களைப் பாருங்கள். எந்தெந்த வாகனங்கள் எங்கு பயணம் செய்கின்றன என்பதைக் கூறுங்கள்.





நிலத்தின் மீதும், நீரின் மீதும், ஆகாயத்திலும் பயணம் செய்யும் வாகனங்கள் எவை என்று உங்களுக்குத் தெரியுமா? அவற்றின் பெயர்களை கீழ்காணும் பட்டியலில் எழுது.

| சாலையில் பயணம் செய்பவை | நீரில் பயணம் செய்பவை | ஆகாயத்தில் பயணம் செய்பவை |
|---|---|---|
| | | |

உங்கள் கிராமத்திலும் இதுபோல் மூன்று வகையான வாகனங்கள் உள்ளனவா? எந்தெந்த வாகனங்கள் உள்ளன?






SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com


Downloaded from https:// www.studiestoday.com



**கீழ்காணும் படங்களைப் பாருங்கள். இவற்றில் உங்கள் கிராமத்தில் இருப்பவற்றிற்கு வண்ணம் தீட்டுங்கள்.**



உங்கள் கிராமத்தில் பயணம் செய்ய, எந்த வாகனங்களைப் பயன்படுத்துகின்றீர்கள் என்பதை அறிந்தீர்களல்லவா! இவை மட்டுமின்றி இன்னும் எந்தெந்த வாகனங்களை உங்கள் கிராமத்தில் பயணம் செய்வதற்கு பயன்படுத்துகின்றனர்?





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



நீங்கள் வசிக்கும் பகுதியிலிருந்து அருகிலுள்ள இடங்களுக்குச் செல்ல எவற்றைப் பயன்படுத்துகிறீர்கள்? தூரத்திலுள்ள பகுதிகளுக்கு/கிராமங்களுக்கு எவற்றில் செல்வீர்கள்? மிகவும் நீண்ட தூரத்தில் உள்ள இடங்களுக்கு எவற்றில் செல்வீர்கள் என்பதைக் கூறுங்கள். கீழ்காணும் அட்டவணையில் எழுதுங்கள்.

| அருகில் உள்ள இடங்களுக்குச் செல்வதற்கு | தூரத்திலுள்ள இடங்களுக்குச் செல்வதற்கு | மிகவும் தூரத்தில் உள்ள இடங்களுக்கு செல்வதற்கு |
|---|---|---|
| | | |

பயணம் செய்யும் தூரம், தேவையையொட்டி வெவ்வேறு வகையான வாகனங்களைப் பயன்படுத்துவர். அருகிலுள்ள இடங்களுக்கு நடந்து செல்வர். மிதிவண்டி, ஆட்டோ ரிக்ஷா, படகு, குதிரைவண்டி போன்ற வாகனங்களின் மீதும் பயணம் செய்வர். தூரத்திலுள்ள இடங்களுக்கு பேருந்து, இரயில், கார், மோட்டார் சைக்கிள், ஜீப் போன்ற வாகனங்களில் செல்வர். மிகவும் தூரத்திலுள்ள இடங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் விமானங்களிலும், கப்பல்களிலும் பயணம் செய்வர்.



சூராரம் என்னும் ஊர் காட்டிற்கு அருகில் உள்ளது. அந்த ஊரிலுள்ளவர்கள் அடிக்கடி காட்டிற்கு செல்வர். களிமண், தேன், பூவந்தி எனும் சீயக்காய் ஆகியவற்றிற்காக காட்டிற்குச் செல்வர். ஆனால் காட்டிற்குச் செல்ல சாலை எதுவும் இல்லை.

இவர்கள் காட்டிற்குச் செல்ல எதன்மீது செல்வார்கள் என்பதை எண்ணிப்பாருங்கள்.

'சூராரம்' ஊருக்குப் பேருந்துகளும் வருகின்றன. சூராரத்திலிருந்து அதிக தூரத்திலிருக்கும் கிராமங்களுக்குச் செல்ல சாலை வசதி இல்லாததால் பேருந்துகள் செல்வதில்லை. சரி இதுபோன்ற கிராமங்களுக்கு எவ்வாறு செல்வர்? சிவராத்திரி அன்று சூராரம் கிராமத்திலுள்ள அனைவரும் மல்லிகார்ச்சுனர் திருவிழாவிற்கு செல்ல நினைத்தனர். இதற்காக அவர்கள் ஒரு பேருந்தை வாடகைக்கு எடுத்துக்கொண்டனர். பேருந்தில் அனைவரும் சிவராத்திரியன்று மல்லிகார்ச்சுனர் திருவிழாவிற்கு 'கொமரவெல்லி' சென்று வந்தனர்.



இது போன்று எந்தெந்த சூழ்நிலைகளில் பேருந்தை எடுத்துச்செல்வர்? ஒருவேளை அவ்வூர்களில் பேருந்து இல்லாவிட்டால் எவ்வாறு செல்வர்?

சூராரம் போன்ற கிராமங்கள் நிறைய உள்ளன. இது போன்ற கிராமங்களில் எந்தெந்த போக்குவரத்து வாகனங்கள் உள்ளன? அதேபோல் சில கிராமங்களுக்குப் பேருந்துகள் வராது. அது போன்ற ஊர்களில் உள்ளவர்கள் எவ்வாறு பயணம் செய்வர்?

கீழ்காணும் போக்குவரத்து வாகனங்களின் பெயர்களைப் படியுங்கள். அவற்றில் எவற்றை எந்தெந்த இடங்களில் பயன்படுத்துவர் என்பதை சிந்தித்து எழுதுங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சைக்கிள் | மாட்டுவண்டி | ஆட்டோ | ஸ்கூட்டர் | டிராக்டர் | ரிக்ஷா |
| ஜீப் | பேருந்து | வேன் | லாரி | கார் | படகு |





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com


Downloaded from https:// www.studiestoday.com

| காட்டுப் பகுதியில் பயணம்செய்ய பயன்படுபவை | சாலைகளற்ற கிராமங்களில் பயணம்செய்ய பயன்படுபவை | பேருந்து இல்லாத ஊர்களிலிருந்து பிற கிராமங்களுக்கு செல்ல பயன்படுபவை | திருவிழாக்களுக்கும், திருமணங்களுக்கும் செல்ல பயன்படுபவை |
|---|---|---|---|
| | | | |



ஒவ்வொரு கிராமத்தில் உள்ளவர்களும் பயணம் செய்வதற்கு விதவிதமான வாகனங்கள் அவசியமாகின்றன. பல கிராமங்களுக்கு சாலை வசதி உள்ளது. இதுபோன்ற கிராமங்களுக்குப் பேருந்துகள் வருகின்றன. பேருந்தில் பிற கிராமங்களுக்குச் செல்கின்றனர். சாலை வசதியற்ற கிராமவாசிகள் பிற கிராமங்களுக்குச் செல்ல மாட்டுவண்டிகளையும், சைக்கிள்களையும், மோட்டார் சைக்கிள்களையும், ஆட்டோக்களையும், ஜீப்புகளையும் பயன்படுத்துகின்றனர்.







SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

வண்டிகளை இழுக்க எருதுகளைப் பயன்படுத்துகிறோம். சில வண்டிகளை இழுக்க குதிரைகளையும் கட்டுவர். யானைகள், கழுதைகள், ஒட்டகங்கள் ஆகியவற்றையும் பயணம் செய்ய பயன்படுத்துகின்றனர். கீழ்காணும் படங்களைப் பாருங்கள். இவற்றை எப்பொழுதாவது நீங்கள் பார்த்துள்ளீர்களா?











அண்மைக் காலத்தில் எருதுவண்டிகளையும் குதிரை வண்டிகளையும் பயன்படுத்துவது குறைந்துவிட்டது அல்லவா! ஏன் என்று பாருங்கள்.

சில கிராமங்களில் திருமணங்களுக்கும், திருவிழாக்களுக்கும் செல்ல பேருந்து, வேன், லாரி, டிராக்டர்கள் ஆகியவற்றில் செல்வர். மேலும் சில கிராமங்களில் இன்றும் கூட மாட்டு (அ) எருது வண்டிகளிலேயே ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்குச் செல்கின்றனர்.

சரி உங்கள் கிராமத்தில் திருவிழாக்களுக்கும், திருமணங்களுக்கும் எவர் எதில் செல்கின்றனர்?



சில கிராமத்தில் உள்ளவர்கள் தங்கள் ஊர்களில் வேலை கிடைக்காததால் பிற ஊர்களுக்கு குடிபெயர்ந்துச் செல்கின்றனர். இதுபோன்றவர்கள் தங்களுக்குத் தேவையான சாமான்களை தங்களுடன் எடுத்துச் செல்கின்றனர். இதற்காக அவர்கள் மாட்டுவண்டிகள், டிராக்டர்கள், வேன்கள் ஆகியவற்றில் செல்கின்றனர். சில இடங்களில் படகுகளிலும் செல்கின்றனர்.





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



**இது போல் பயணம் செய்யலாமா?**

கீழ்காணும் படங்களைப் பாருங்கள். எவற்றில் பயணம் செய்கின்றனர்? இதுபோல் பயணம் செய்வதால் என்ன ஏற்படலாம்? எண்ணிப் பாருங்கள்.














இதன்மூலம் நீங்கள் என்ன தெரிந்து கொண்டீர்கள். படங்களில் காட்டிய படி பயணம் செய்வது ஆபத்தானது. இது போன்று பயணம் செய்யக்கூடாது.





Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



### தற்போது நாம் காணும் வாகனங்கள் பழங்காலத்திலும் இருந்தனவா?

தற்போது ஆட்டோக்கள், ஸ்கூட்டர்கள், சைக்கிள்கள், பேருந்துகள், இரயில்கள், விமானங்கள், படகுகள் ஆகியவற்றை பயணங்கள் செய்யப்பயன் படுத்துகின்றனர். இவை பழைய காலத்திலும் இருந்தனவா? இவை இல்லாமல் இருந்த காலத்தில் எவ்வாறு பயணம் செய்தனர்? நீங்கள உங்களுடைய கிராமத்தில் உள்ள பெரியவர்களை அல்லது தாத்தாவை அல்லது முதியவர்களை, அம்மாவின் அம்மாவையோ, அப்பாவின் அப்பாவையோ இப்படி யாரை வேண்டுமானாலும் கேளுங்கள். அவர்கள் தங்களுடைய சிறுவயதில் எங்காவது பயணம் செய்ய வேண்டுமெனில் எவ்வாறு பயணம் செய்தனர்? தெரிந்துக் கொண்டு சொல்லுங்கள்.



### நீங்கள் இவ்வாறு செய்வீர்களா?



சில காலியான தீப்பெட்டிகளை எடுத்துக் கொள்ளுங்கள். தீப்பெட்டிகள் அனைத்தையும் ஒன்றுடன் மற்றொன்றை கயிற்றாலோ அல்லது நாரினைக் கொண்டோ கட்டுங்கள். ஒவ்வொரு பெட்டிக்கும் இஞ்சக்ஷன் சீசா மூடியாக பயன்படுத்தும் ரப்பரை சக்கரங்களாக இணையுங்கள். முன்னால் உள்ள தீப்பெட்டிக்கு கயிற்றைக் கட்டி இழுத்துக் கொண்டு செல்லுங்கள். தீப்பெட்டி இரயிலைக் கொண்டு விளையாடுங்கள். தீப்பெட்டி மட்டுமின்றி வேறு எவற்றைக் கொண்டு இதுபோல் தயாரிக்க முடியும்? செய்து பாருங்கள்.

### முக்கிய சொற்கள்

1. பயணம்
2. போக்குவரத்து வாகனங்கள்
3. வாகனங்கள்
4. ஆகாயத்தில் பயணம் செய்பவை
5. நீரில் பயணம் செய்பவை
6. நிலத்தின் மீது பயணம் செய்பவை
7. பயணத்திற்கு உதவும் விலங்குகள்
8. பயண ஆபத்துகள்
9. பழங்கால போக்குவரத்து வாகனங்கள்

### நாம் கற்றுக்கொண்டவை

* ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குச் செல்ல வாகனங்களை பயன்படுத்துவர்.
* பயணம் செய்ய பேருந்து, ஆட்டோ, இரயில், விமானம், படகு போன்ற சாதனங்களை பயன்படுத்துவர்.
* மாட்டு வண்டிகள், குதிரை வண்டிகள் போன்றவற்றையும் பயணத்திற்குப் பயன்படுத்துகின்றனர். அதேபோன்று ஒட்டகங்களையும், கழுதைகளையும், யானைகளையும் கூட ஆங்காங்கே பயணம் செய்ய பயன்படுத்துகின்றனர். ஆனால் இவற்றை பயன்படுத்துவது குறைந்து விட்டது.
* பயணம் செய்யும் தூரம், தேவையைப் பொறுத்து பல்வேறு வகையான வாகனங்களை பயன்படுத்துகின்றனர்.
* நெருக்கமான வாகனங்களிலும், அளவுக்கதிகமானபேர் ஏறிய ஆட்டோக்களிலும் பயணம் செய்வது ஆபத்து. அதேபோல் தனியார் வாகனங்களான ஜீப்புகள், டிராக்டர்கள், லாரிகள் போன்றவற்றில் பயணம் செய்யக்கூடாது.





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## இவற்றை செய்யுங்கள்



### பாடத்தை புரிந்துகொள்ளுதல்

1. பயணம் என்றால் என்ன? நீங்கள் எந்தெந்த வாகனங்களில் பயணம் செய்தீர்கள்?

2. கீழ்காணும் வாகனங்களின் பெயர்களைப் படியுங்கள். அவற்றை கீழே உள்ள அட்டவணையில் எழுதுங்கள்.

லாரி, பேருந்து, ஆட்டோ, இரயில், டிராலி ஆட்டோ, விமானம், படகு, கழுதை, குதிரை, மாட்டுவண்டி, ஹெலிகாப்டர், ஜீப், குதிரைவண்டி, கழுதை, சைக்கிள், ரிக்ஷா, ஒட்டகம், யானை, டிராக்டர்.

| நிலத்தின் மீது செல்பவை | நீரின் மீது செல்பவை | ஆகாயத்தில் செல்பவை |
|---|---|---|
| | | |

3. சைக்கிளுக்கும், மோட்டார் சைக்கிளுக்கும் இடையே உள்ள ஒற்றுமை, வேற்றுமைகள் யாவை?


4. எந்தெந்த விலங்குகளை பயணம் செய்வதற்குப் பயன்படுத்துவர்?

5. படங்களைப் பாருங்கள்.





படங்களில் காட்டியவாறு பயணம் செய்வது ஆபத்து. ஏனெனில்........................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



**படங்களை வரையுங்கள். வண்ணம் தீட்டுங்கள்**

1. உங்களுக்குப் பிடித்த இரண்டு வாகனங்களின் படங்களை வரையுங்கள். பெயர்களை எழுதுங்கள்.



**தகவல் திறன்கள் – திட்டப்பணி.**

1. ஞாயிற்றுக்கிழமை அன்று உங்கள் வீதியில் செல்லும் வாகனங்களை ஒரு மணிநேரம் கவனி. அட்டவணையில் அவற்றை எழுது.

| வீதியில் சென்ற வாகனத்தின் பெயர் | வாகனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| | |
| | |
| | |
| | |

* எந்த வாகனங்கள் அதிகமாகச் சென்றன? எந்த வாகனங்கள் குறைவாக சென்றன?

2. களிமண், தக்கைகள், அட்டைத்துண்டுகளைக் கொண்டு பேருந்துவண்டியை தயாரியுங்கள். காட்சிக்கு வையுங்கள்.



**பாராட்டுதல்**

1. பயணத்திற்கு வாகனங்கள் மட்டுமின்றி விலங்குகளும் பயன்படுகின்றன அல்லவா? அவற்றை நாம் எவ்வாறு கவனித்துக் கொள்ள வேண்டும்?
2. உங்கள் வகுப்பில் யார் பேருந்து வண்டிகளை நன்றாக தயாரித்தனர்? அவை உங்களுக்கு ஏன் மிகவும் பிடிக்கிறது?



**வினவுதல்**

1. பழங்காலத்தில் பயணம் செய்ய எவற்றை பயன்படுத்தினார்கள் என்பதை தெரிந்துகொள்ள ஆறுமுகம் தன் தாத்தாவிடம் சென்றான். ஆறுமுகம் தாத்தாவிடம் என்னென்ன கேள்விகளை கேட்டிருப்பான்?



**என்னால் செய்ய முடியுமா?**



| | | |
|---|---|---|
| 1. | எங்கள் பகுதியில் செல்லும் வாகனங்களின் பெயர்களை கூறுவேன். | ஆம் / இல்லை |
| 2. | போக்குவரத்து வாகனங்களைப் பற்றி விளக்குவேன். அவற்றை அட்டவணையில் எழுதுவேன். | ஆம் / இல்லை |
| 3. | வாகனங்களின் படங்களை வரைவேன். | ஆம் / இல்லை |
| 4. | எந்தெந்த சூழ்நிலைகளில் எந்தெந்த வாகனங்களை பயன்படுத்துவர் என்பதைக் கூறுவேன். | ஆம் / இல்லை |
| 5. | பயணம் செய்ய எந்தெந்த விலங்குகளை பயன்படுத்துவர் என்பதை கூறுவேன். | ஆம் / இல்லை |
| 6. | போக்குவரத்து வாகனங்களைப் பற்றி கேள்விகளை கேட்பேன். | ஆம் / இல்லை |





SCERT TELANGANA

Downloaded from https:// www.studiestoday.com